Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

அற்புதன் அச்சகம்
அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811
373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

முரசு – 04 திருவள்ளுவர் ஆண்டு 2045 பங்குனி 04 செவ்வாய்க்கிழமை (18.03.2014) பக்கங்கள் 20 ஓசை – 168

## மனித உரிமையாளர்கள் கைது வெளிப்படை விசாரணை அவசியம்

### கோருகிறது அமெரிக்கா

(கொழும்பு)

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் அண்மைய நாட்களில் கைது செய்யப்பட்டுள்ள மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள் தொடர்பில் அமெரிக்கா தனது. கவலையை வெளியிட்டுள்ளது.

மனித உரிமைச் செயற்பாட்டாளர் றுக்கி பெர்ணான்டோ, அருட்தந்தை பிரவீன் மகேசன், பாலேந்திரா ஜெயகுமாரி ஆகியோரது கைதின் பின்னணியிலேயே இந்தக் கவலையை அமெரிக்கா வெளியிட்டுள்ளது.

இவர்களுக்கான விசாரணைகள் உரிய சட்ட நடவடிக்கைகளினூடாகவும் வெளிப்படையாகவும் செய்யப்படுவதை இலங்கை அரசாங்கம் உறுதிப்படுத்தவேண்டும் என்று அமெரிக்கா கேட்டுள்ளது.

இந்தக் கைது தொடர்பில் அமெரிக்க அரசாங்கம் மிகுந்த அக்கறையுடன் உன்னிப்பான கவனத்தைச் செலுத்துவதாக



றுக்கி பெர்னாண்டோ

தெரிவித்துள்ள கொழும்பிலிருக்கும் அமெரிக்கத் தூதரகம் அவர்கள் அனைவரும் உரிய சட்ட உதவிகளை முழுமையாகப்

19 ஆம் பக்கம் பார்க்க

## ஸ்திரமற்ற நிலைமையை ஏற்படுத்த முனைந்ததால் கைது

### பொலிஸ் தெரிவிப்பு

(கொழும்பு)

சமூகத்திடையே ஸ்திரமற்ற நிலையை ஏற்படுத்தும் வகையிலும் பிரிவினைவாதத்தை தூண்டும் வகையிலும் செயற்பட்டதனாலேயே மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள் இருவர் கிளிநொச்சியில் நேற்று முன்தினம் கைதுசெய்யப்பட்டதாக பொலிஸ் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் பொலிஸ் அத்தியட்சகருமான அஜித் ரோகன தெரிவித்துள்ளதாவது,

மனித உரிமைச் செயற்பாட்டாளர்களான றுக்கி பெர்ணான்டோ மற்றும் அருட்தந்தை பிரவீன் மகேசன் இருவரும் நேற்று முன்தினம் கிளிநொச்சியில் கைதுசெய்யப்பட்டு பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்ட இருவரும் வவுனியாவிற்கு கொண்டுசெல்லப்பட்டு மேலதிக விசாரணைகளுக்காக கொழும்பிற்கு அழைத்துவரப்பட்டுள்ளனர் எனத் தெரிவித்தார்.


'அடேங்கப்பா'
10


பரிசு
11

# மேற்குலகின் தீர்வுகளை நடைமுறைப்படுத்த முடியாது

### அரசாங்கம் தெரிவிப்பு



(கொழும்பு)

மேற்குலகம் முன்வைக்கும் தீர்வுகளை நடைமுறைப்படுத்தும் முறையொன்று இலங்கையில் இல்லையென அரசாங்கம் தெரிவித்துள்ளது.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமை அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அமைச்சர் டலஸ் அழகப்பெரும மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இலங்கையில் மனித உரிமை மீறல்கள் இடம்பெற்றுள்ளனவா என்பது தொடர்பாக ஆராய்வதற்காக உள்ளக விசாரணை நடத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஒரு பிரச்சினைக்கு பல தீர்வுகள் கிடைக்கக்கூடும். மேற்குலக நாடுகள் முன்வைக்கும் தீர்வுகளை நடைமுறைப்படுத்தும் முறைமையொன்று இங்கு இல்லை. பொருத்தமான முறையொன்றை நடைமுறைப்படுத்தி இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காணப்படும்.

தற்போதைய நிலைமையில் அமைச்சர் ரவூப் ஹக்கீம் அரசாங்கத்தை விட்டு விலகிச் செல்லமாட்டார் என்று நம்புகின்றோம். ஆனால் அவ்வாறு விலகிச் சென்றாலும் எங்களுக்குப் பிரச்சினை இல்லை. ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைவதும் இணையாமல் இருப்பதும் அவர்களின் விருப்பம். அவ்வாறு இணைந்தாலும் அது அரசாங்கத்திற்கு ஆபத்தானதோ அல்லது அபாய சமிக்ஞையோ அல்ல.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் இணைவது தொடர்பில் எவ்வாறான தீர்மானம் எடுத்துள்ளது. அல்லது முஸ்லிம் காங்கிரஸிற்குள் இது தொடர்பில் ஆராயப்பட்டு

19 ஆம் பக்கம் பார்க்க

## இளைஞர் கைது

(இயக்கச்சி)

இயக்கச்சி - கரந்தாய் பகுதியில் இளைஞர் ஒருவர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டிருக்கிறார்.

பயங்கரவாத தடுப்புப் பிரிவினரால் ஏற்கனவே தேடப்படும் நபர் ஒருவருடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தின் அடிப்படையிலேயே மேற்படி இளைஞர் நேற்றுக் காலை கைதுசெய்யப்பட்டிருக்கிறார்.

இரண்டு பிள்ளைகளின் தந்தையான இவர் நேற்று மதியம் வரை கிளிநொச்சி பொலிஸ்

19 ஆம் பக்கம் பார்க்க

## நடமாடும் சுதந்திரத்தை மீறுகிறது அரசாங்கம்

### கீர்த்தி தென்னக்கோன் தெரிவிப்பு

(கொழும்பு)

மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள் கைது நடவடிக்கையானது, இலங்கை அரசியலமைப்பில் பொதுமக்களுக்கு உறுதி செய்யப்பட்டுள்ள நடமாடும் சுதந்திரத்தை மீறுவதாக அமைந்துள்ளதென மனித உரிமைகளுக்கும் ஆய்வுக்குமான நிலையமும், நீதியும், நேர்மையான துமான தேர்தலுக்கான மக்கள் அமைப்பும் குற்றம் சுமத்தியுள்ளன.

இந்த அமைப்புக்களின் பணிப்பாளராகிய கீர்த்தி தென்னக்கோன் இது தொடர்பில் விடுத்துள்ள அறிக்கையில், இலங்கையில் ஜனநாயகத்திற்கு விரோதமான முறையில் தன்னிச்சையாக ஒருவரைக் கைதுசெய்து தடுத்துவைக்கும் கலாசாரத்தை ஊக்குவிப்பதாகவும், வலிந்து வாக்குமூலங்களைப் பதிவுசெய்யும் கலாசாரத்தையும் ஊக்குவிக்கவும், நீதிமன்றத்தில் ஆஜர் செய்யாமல் 48 மணித்தியாலங்கள் ஒருவரைத் தடுத்துவைக்கலாம்

19 ஆம் பக்கம் பார்க்க

## அன்பகம் சிறுவர் இல்லத்தில் சிறுமி விபூஷிகா ஒப்படைப்பு

(கிளிநொச்சி)

கடந்த 13 ஆம் திகதி தர்மபுரம் முசுறன்பிட்டி பகுதியில் இடம்பெற்ற சம்பவத்தைத் தொடர்ந்து ஜெயகுமாரியும் அவரது மகள் விபூசிகாவும் கைது செய்யப்பட்டிருந்தனர். இதனைத் தொடர்ந்து தாய் ஜெயகுமாரி பூசா முகாமுக்கு அனுப்பப்பட்டுள்ள நிலையில் நேற்று மகள் விபூசிகா வவுனியா அன்பகம் சிறுவர் இல்லத்தில் கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையிலிருந்து கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றுக்கு நேற்றுப் பிற்பகல் 2 மணியளவில் அழைத்துவரப்பட்ட விபூசிகாவை பொறுப்பேற்க பல சிறுவர் இல்லங்கள் முன்வந்த

19 ஆம் பக்கம் பார்க்க

## சீரணி வயற்கிணற்றிலிருந்து வயோதிபரின் சடலம் மீட்பு

(யாழ்ப்பாணம்)

சீரணிச் சந்தி சண்டிலிப்பாய் பகுதியில் உள்ள வயற்காணியில் கிணற்றிலிருந்து வயோதிபர் ஒருவரது சடலம் மானிப்பாய் பொலிஸாரினால் மீட்கப்பட்டு யாழ். போதனா வைத்தியசாலையில் நேற்று ஒப்படைக்கப்பட்டது.

நேற்று முன்தினம் வீட்டிலிருந்து காணாமற்போயிருந்த முத்துவேலு சண்முகநாதன் (வயது - 65) என்ற வயோதிபரின் சடலமே நேற்றுக்காலை குறித்த கிணற்றில் காணப்படுவதாக தெரிவிக்கப்பட்டதையடுத்து மானிப்பாய் பொலிஸார் இந்தச் சடலத்தை மீட்டு யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைத்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கொழும்பில் மனைவியுடன்

19 ஆம் பக்கம் பார்க்க

## கண்ணீர் காணிக்கையுடன் அமலனின் பூதவுடல் நல்லடக்கம்

(யாழ்ப்பாணம்)

வட்டு. யாழ்ப்பாணக் கல்லூரியில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற கிரிக்கெட் போட்டியின்போது ஏற்பட்ட மோதலில் அடித்துக் கொல்லப்பட்ட பற்றிக்ஸ் கல்லூரியின் பழைய மாணவன் ஜெயரட்ணம் தனுஷன் அமலனின் பூதவுடல் நேற்று மாலை இடம்பெற்ற இறுதி அஞ்சலி நிகழ்வினையடுத்து நல்லடக்கம் செய்யப்பட்டது.

முன்னதாக நேற்றுப் பிற்பகல் அமலனின் பூதவுடல் கதிற்றல் வீதியில் உள்ள அவரது வீட்டிலிருந்து எடுத்து வரப்பட்டு சென். பற்றிக்ஸ் கல்லூரியில் வைக்கப்பட்டது.

அங்கு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு அஞ்சலி

19 ஆம் பக்கம் பார்க்க



# ஊர்காவற்றுறையில் துறைமுக அபிவிருத்தி

## விசேட அமைச்சரவைப் பத்திரம் விரைவில்



ஊர்காவற்துறை இறங்குதுறையின் புனரமைப்புப் பணிகள் தொடர்பில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நேரில் ஆராய்ந்தறிந்து கொண்டார்.

ஊர்காவற்துறைக்கு நேற்று விஜயம் மேற்கொண்ட அமைச்சர் மேற்படி விடயம் தொடர்பாக ஆராய்ந்தார்.

இதன்போது இறங்குதுறைப் பகுதியில் மீளப் பயன்படுத்தப்பட முடியாத நிலையில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள சேதமடைந்த இந்திய ரோலர் படகுகளை அப்பகுதியிலிருந்து அகற்றுவது மற்றும் அப்பகுதியில் மூழ்கியுள்ளதும், சேதமடைந்துள்ளதுமான படகுப்பாதைகளை அங்கிருந்து அகற்றுவது போன்ற விடயங்கள் தொடர்பாகக் கவனம் செலுத்திய அமைச்சர், விசேட அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பித்து அவற்றை அகற்றுவதற்கு உரிய நடவடிக்கை முன்னெடுக்கப்படுமென்றும் தெரிவித்தார்.

அத்துடன், தற்போது பாவனையிலுள்ள படகுப் பாதையின் பயன்பாடுகள் மற்றும் அதன் புனரமைப்பு தொடர்பில் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் துறைசார்ந்தோருடன் கலந்துரையாடிக் கேட்டறிந்து கொண்டார்.

இதனிடையே ஊர்காவற்றுறை நீதிமன்றத்திற்கு அருகாமையில் பொலிஸ் நிலையத்திற்கென ஒதுக்கப்பட்ட காணியை பார்வையிட்ட அமைச்சர் அது விடயம் தொடர்பிலும் கவனம் செலுத்தியிருந்தார்.

இதன்போது ஈ.பி.டி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் (உதயன்), ஊர்காவற்துறை பிரதேச செயலர் திருமதி. எழிலரசி அன்ரன் யோகநாயகம், ஊர்காவற்துறை பிரதேச சபைத் தவிசாளர் ஜெயகாந்தன், வேலணை பிரதேச சபைத் தவிசாளர் சிவராசா, அமைச்சரின் யாழ். மாவட்ட ஒருங்கிணைப்பாளர் கே.விகுகேந்திரன் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

# நல்லூர் பிரதேசசபையில் அடாவடி மேற்கிளம்புகிறது கண்டனம்

(திருநெல்வேலி)

இரண்டு ஊழியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கக் கோரி நல்லூர் பிரதேச சபையின் தலைமைக் காரியாலயத்திற்கு முன்பாக ஊழியர்களினால் நடத்தப்பட்ட பணிப்பகிஷ்கரிப்புப் போராட்டத்தின்போது கடமைக்காக வந்த சபையின் பெண் உத்தியோகத்தர்கள் மீது சில ஊழியர்களினால் தகாத வார்த்தைப் பிரயோகங்கள் மேற்கொள்ளப்பட்டதாக சபையின் தவிசாளர், உறுப்பினர்கள், செயலாளர் மற்றும் உத்தியோகத்தர்கள் பலத்த கண்டனம் தெரிவித்துள்ளனர்.

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் நல்லூர் தொகுதி அமைப்பாளரும், நல்லூர் பிரதேச சபையின் எதிர்க் கட்சித் தலைவருமான அ.இரவீந்திரதாசன் இது பற்றித் தெரிவிக்கும் போது இது ஒரு அடாவடித்தனமான செயல் எனக் குறிப்பிட்டார்.

செயலாளர் மேரி சாந்தசீலன், விதி முறைகளுக்கு மாறாக ஊழியர்கள் நடந்து கொண்டதுடன் சட்டதிட்டங்களுக்கு எதிராக செயற்பட்டதாகவும் குற்றம் சாட்டினார்.

சபையின் தவிசாளர் ப.வசந்தகுமார் தெரிவிக்கும் போது சபையின் பெண் உத்தியோகத்தர்கள் கடமைக்கு வந்த போது அவர்கள் மீது தகாத வார்த்தைகளை சில ஊழியர்கள் பிரயோகித்ததாகக் கவலை வெளியிட்டார்.

அத்துடன், சபை உறுப்பினர்கள் பலரும் இச் செயல் பற்றித் தமது கண்டனத்தினைத் தெரிவித்துக் கொண்டனர். (137)


## சென்ஜோன் அம்புலன்ஸ் சேவைக்கு ஆட்சேர்ப்பு

**சென்ஜோன் அம்புலன்ஸ் நோயாளர் பராமரிப்புச் சேவைக்கு ஆண், பெண் இருபாலாரும் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர். நாள் ஒன்றுக்கு ஆண் பராமரிப்பாளர் ஒருவருக்கு 1200/- வழங்கப்படும்.**

**இச்சேவையில் சேர விரும்புவோர் எதிர்வரும் 23.03.2014 ஞாயிற்றுக்கிழமை அன்று பி.ப. 4.00 மணிக்கு யாழ்.போதனா வைத்தியசாலையில் உள்ள சென்ஜோன் அம்புலன்ஸ் காரியாலயத்திற்கு நேரில் சமூகம் தரவும்**

**மேலதிக விபரங்களுக்கு:-**

**24 மணி நேர அம்புலன்ஸ் சேவைக்கான இலக்கம்:- 0213214444**

**மாவட்ட ஆணையாளர், சென்ஜோன் அம்புலன்ஸ்**
**யாழ்.மாவட்டம்**

(R/344)



# UNIVERSITY OF JAFFNA, SRILANKA VACANCIES

Applications will be received by me up to 11th April 2014 from suitably qualified candidates for the following posts;

**1. POST - TECHNICAL OFFICER GRADE.II SEG.A**

(Vacancies exist at the Department of physics and Computer Unit)

**Qualifications:**

National Diploma inTechnology in the relevant field of specialization or its equivalent qualifications

Salary Scale : U-MT1 (II) Rs.18,360-7x185;9x245-21,860 p.m
Selection : By Practical Test and Interview

**2. AUDIO VISUAL TECHNICAL OFFICER GRADE.II**

**qualifications**

a. Diploma in Technology of the open University or Special Engineering Apprenticeship Certificate issued from 1975 or National Diploma for Engineering Technicians is sued from 1989 by the national Apprentice Board or National Diploma in Technology or City Guilds Final Certificate in the fields of Electronics of Power, together with one year`s experience in relevant video work.

-OR-

b. Diploma in Educational Technology or Diploma in Audio Visual Techniques of a recognized polytechnic of University provided that the courses for the Diploma in Educational Tehchnology or the Diploma in Audio Visual Techniques are of two years duration, with 01 year experience in relevant video work.

-OR-

c. Pass 03 subjects at the G.C.E (A/L) Examination in Science one sitting and six years experience in Audio Visual work.

Salary Scale : U-MN4 (II) Rs.22,240-20x320;1x465-29,105 p.m
Selection : By Interview

**Age Limit for the above posts** : Not more than 45 Years
(*Note - Age limit is not applicable for applicants in the Government Departments/ State Corporation and statutory bodies.)

**Statutory Benefits :**

1. Allowance approved by the University Grants Commission.
2. Membership in Universities provident Fund and pension Scheme in the University System.
3. Gratuity payments
4. Employment Trust Fund Benefits
5. Free Medical care

Application forms may be obtaine from the Establishments Brach (Non Academic). University of Jaffna, Thirunelvely, Jaffna. either in person or by post on a payment of Rs.100/- per application form.

Those who wish to obtain application forms by post are requested to send a Money Order/ Postal Order drawn in favour of **"Bursar, University of Jaffna, Thirunelvely, Jaffna"** together with a self - addressed Rs.5.00 stamped envelope of 23x10 c.m in size.

Application forms and other details will also be available in the University website www.jfn.ac.lk. Those who wish to send the application forms downloaded from the University website should attach a Money Order / Postal Order for Rs.100/- to the applications forms drawn in favor of the Bursar, University of Jaffna.

Duly completed application form should be sent under registered cover to reach the **Senior Assistant Registrar / Establishments Branch (Non Academic), University of Jaffna, Thirunelvely, Jaffna on or before 11.04.2014.**

Applications sent on the specified form only will be accepted. Applications received after the closing date or illegible and incomplete applications will be rejected without intimation.

Those who are in public Service / Corporations / Statutory Bodies Should forward their applications through their respective Heads of Departments / Corporatiions / Boards.

Advance copies of applications may be sent in the first instance. However, no such applicant will be considered for the appointments if the applications routed through the Head of Department is not received.

**Registrar**
**14.03.2014.**

(C/3373)

# கலை - இலக்கிய தமிழ்மன்றத்தின் "இயல் விழா 2014" சிறப்பு நிகழ்வு

இளம் கலை-இலக்கிய ஆர்வலர்களின் ஒன்றிணைவில் கடந்த வருட நடுப்பகுதியில் உருவாக்கப்பட்டு, வவுனியா மாவட்டத்தில் கலை இலக்கிய ரீதியில் தொடர்ச்சியான பணிகளை சிறப்பாகச் செய்து வருகின்ற, தமிழ் மாமன்றம், தனது முதலாவது பொது விழாவான "இயல் விழா 2014" ஐ எதிர்வரும் 30 ஆம் திகதி, ஞாயிற்றுக் கிழமை, வவுனியா கலாசார மண்டபத்தில் வெகு சிறப்பாக நடாத்தவுள்ளது.

தமிழ் மாமன்றம் நடாத்தும் இயல் விழாவில், உலக அளவில் பிரசித்தி பெற்ற சிறந்த பேச்சாளரும், அகில இலங்கை கம்பன் கழகத்தினுடைய ஸ்தாபகருமான, கம்ப வாரிதி இ.ஜெயராஜ் சிறப்பு விருந்தினராக பங்கேற்கவுள்ளார்.

காலை 9 மணி தொடக்கம் 12.30 மணி வரை காலை அமர்வும், மாலை 4.00 மணி தொடக்கம் 8.30 மணி வரை மாலை அமர்வும் இடம்பெறவுள்ளது.

காலை அமர்விலே பாடசாலை மாணவர்கள் பங்கேற்று விவாதம் புரியும் விவாத அரங்கும், தமிழ் மாமன்ற உறுப்பினர்கள் பங்குபெறும், சுழலும் சொற்போரும் இடம்பெறவுள்ளது.

விவாத அரங்கினை தமிழ் ஆசிரியர் என்.கே.கஜரூபனும் சுழலும் சொற்போரினை, கலாநிதி ஸ்ரீ.பிரசாந்தனும் தலைமை தாங்கி சிறப்பிக்கவுள்ளனர்.

மாலை அமர்வில், கம்பவாரிதி இ.ஜெயராஜ் தலைமையில், சிறப்பு பேச்சாளர்கள் பங்கு பெறும் பட்டி மன்றமும், தமிழ் மாமன்ற உறுப்பினர்கள் பங்கு பெறும் கவியரங்கும் இடம்பெறவுள்ளது.

குறைந்து செல்லும் தமிழார்வத்தை மீண்டும் துலங்க வைத்து, வவுனியா மாவட்டத்தினுடைய, கலை இலக்கிய ரசனையும், இளம் சமுதாயத்தினுடைய கலை இலக்கிய ஆர்வத்தையும் பெரிதும் உயர்த்திச் செல்ல, இவ் விழா கால்கோளாக அமையும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

தரமான நிகழ்வுகளால் நிறையவுள்ள, தமிழ் மாமன்றத்தினுடைய இயல் விழாவில், கலை இலக்கிய ஆர்வலர்கள் அனைவரையும் கலந்து சிறப்பித்து, பயன் பெறுமாறு, தமிழ் மாமன்றம் அழைப்பு விடுத்துள்ளது. (48)

# மாற்றுத் திறனாளிகளின் பொருட்காட்சி நிகழ்வு

(திருநெல்வேலி)

கொக்குவிலில் அமைந்துள்ள மாற்றுத் திறனாளிகளுக்கான பெதஸ்டா மிஷன் நிறுவனத்தில் மென்பொருள் பொருட்காட்சியும், இலவச கணணாடி வழங்கல் நிகழ்வும் இடம்பெற்றது.

இப் பொருட்காட்சியை யாழ்ப்பாணம் பிள்ளையார் ஹோட்டல் உரிமையாளர் ஆர்.ரெட்ணேஸ்வரன் ஆரம்பித்து வைத்தார்.

இலவச கண்ணாடி வழங்கலை அவரது பாரியார் ஆர்.அமுதினி தொடக்கி வைத்தார்.

பெதஸ்டா நிறுவனத்தின் மாற்று வலுவுடையோரினால் தயாரிக்கப்பட்ட மென்பொருட்கள் காட்சிக்கு வைக்கப் பட்டிருந்தன.

அழகியதும் தரமாகக் காணப்பட்டது மான இப் பொருட்களின் தயாரிப்பு முறை காட்சியைப் பார்வையிட வந்த பொது மக்கள் பலரின் பாராட்டைப் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (137)

## டெங்கு நோயால் 2 பேர் நேற்றும் வைத்தியசாலையில்

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலையில் நேற்று இருவர் டெங்குத் தொற்றுக்கு இலக்காகிய நிலையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டிருப்பதாக அவ வைத்தியசாலையின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் மற்றும் கரவெட்டி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் இருந்தே இவர்கள் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருப்பதாக அந்த அதிகாரி தெரிவித்துள்ளார்.

இவ்வாறு இம்மாதம் 22 பேர் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டிருப்பதுடன் இந்த வருடத்தில் 181 பேர் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டதாகவும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்துள்ளார். (பா)

## வற்றாப்பளைப் பகுதியில் சட்டவிரோத கசிப்பு உற்பத்தி

முல்லைத்தீவு வற்றாப்பளைப் பகுதியில் நீண்டகாலமாக இடம்பெற்றுவரும் சட்டவிரோத கசிப்பு நடவடிக்கைகளால் அப்பிரதேச மக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குவதாக விசனம் தெரிவிக்கின்றனர்.

இப்பிரதேசத்தில் நீண்ட காலமாக சட்ட விரோதமான முறையில் கசிப்பு நடவடிக்கைகள் இடம்பெற்று வருவதாகவும் அடர்ந்த தேக்கங்காட்டுப் பகுதியில் இந்நடவடிக்கை இடம்பெறுவதால் வெளிவராத விடயமாக இச்செயற்பாடு இடம்பெறுவதாகவும் மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.


இதேவேளை இக் கசிப்பு உற்பத்தி மற்றும் விற்பனை நடவடிக்கையால் சிறுவர்கள் வெகுவாக பாதிக்கப்படுவதாகவும் குடும்ப வன்முறைகள் ஏற்படுவதற்கு அடித்தளமாகவும் இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

எனவே இப்பகுதியில் இடம்பெற்று வரும் கசிப்பு உற்பத்தி நடவடிக்கையை முற்றாக தடைசெய்ய உரியவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (67)



வல்வை ஸ்ரீ வாலாம்பிகை சமேத வைத்தீஸ்வர சுவாமி தீர்த்தத் திருவிழா ஊறணி சமுத்திரத்தில் நடைபெறுவதைக் காணலாம்.

## மகிந்தவைக் கவிழ்ப்பது யார்? - 04




அரசியல் அபிலாஷை பலரையும் ஆட்டிப்படைக்கிது. அதிலும் தமிழ்ச் சமூகத்தில் இந்த ஆசை பிடித்து அலைகிற ஆட்கள் ஏராளம்பேர்.

ஆசை என்று வந்து விட்டால் பிறகு வெட்க துக்கம் எல்லாம் கிடையாது. அதிலும் லாபம் தரக்கூடிய ஆசை என்றால் பிறகு கேட்கவும் வேண்டுமா?

இப்ப தமிழ்த்தரப்பில் அதிகமாகக் கஷ்ரப்படாமல் உழைக்கக் கூடிய ஒரு தொழிலாக அரசியல் மாறியிருக்கு.

2009இற்கு முதல் அது 'தலையைக் கொண்டு போகும்' ஒரு விவகாரம்.

இப்பொழுது அது அந்தஸ்த்தையும் புகழையும் லாபத்தையும் தருகின்ற ஒரு சீதேவி.

அதிலும் தமிழ்த்தேசியம் என்று சொல்லிக்கொண்டு தெருவில் நின்றாலே போதும், மடிநிறையச் செல்வம் கொழிக்கும்.

அதற்காக எந்தத் தியாகமும் தேவையில்லை. எந்த உழைப்பும் வேண்டியதில்லை.

தியாகங்களாலும் வீரத்தாலும்தான் அரசியற் பணி செய்ய வேணும் என்று [பிரபாகரன் உட்படப் பல போராட்டத்தலைவர்களும்] சொன்ன காலம் எல்லாம் மலையேறி விட்டது. அல்லது அப்படிக் கஷ்ரமெல்லாம் பட்டுத்தான் அரசியற் பணிகளைச் செய்ய வேண்டும் என்ற நிலையை மகிந்த ராஜபக்ஷ இல்லாமற் செய்து விட்டார்.

அவர் புலிகளைக் களத்தில் இருந்து அகற்றியதோடு, பிரபாகரனின் பிடி இல்லாமற் போனதோடு தெருவில் ஊதாரியாக நிற்பவனும் தமிழ்த் தேசியம் என்ற ஒரு சொல்லைச் சொல்லிக் கொண்டு அரசியலில் கொடியேற்றலாம் என்று ஆகியிருக்கு.

தெருவில் நிற்பவனே இப்பிடிக் கொடியேற்றலாம் என்றால் நாங்கள் என்ன குறைந்த ஆட்களா? என்று கேட்கிறார்கள் பல வாத்திமார்.

ஓய்வு பெற்ற கல்வி அதிகாரிகளும் விதானைமாரும் கூடப் பென்சனை எடுத்துக் கொண்டு அரசியலில் கோலோச்சும்போது நாங்கள் மட்டும் ஏன் பின்னிற்க வேணும் என்றும் அவர்கள் கேட்கிறார்கள்.

எரிகிற வீட்டில் பிடுங்குகிறது மிச்சம் என்று தெரியாமலா சொன்னார்கள்.

யார் எப்பிடிப் போனால் என்ன, எது எப்படி ஆனால் என்ன? நாம பிழைத்துக் கொள்வோம் என்று அரசியலில் குதிக்க விரும்புகிறார்கள் இந்த ஆசிரியர்களும்.

இதற்காக இவர்கள் எடுத்துக்கொண்ட சரக்கு, 'இலங்கையின் இன்றைய ஆட்சியை நீக்க வேணும். ஜனாதிபதி மகிந்தவைக் கவிழ்க்க வேணும்' என்ற மாதிரி நான்கைந்து வசனங்கள் மட்டுமே.

இதை உரத்துச் சொன்னாலே போதும் தமிழ்த்தேசிய அடையாளம் வந்து விடும்.

சிலர் இந்த அரசியல் விளையாட்டுக்கு ஒரு முன்னோட்டமாக செஞ்சிலுவைச் சங்கம், கபே, மனித உரிமைகள் அமைப்பு, சமூக சிற்பிகள், புத்திஜீவிகள் அமைப்பு, மத்தியஸ்தர் சபை, பவ்ரல் என்பவற்றுக்குள்ளே நுழைந்து காரியம் சாதிக்கப்பார்க்கிறார்கள்.

இதுக்காகத்தான் சொன்னேன், பிழைப்பு என்று வந்து விட்டால் பஞ்சமா பாதகங்களும் நீதியாக்கப்பட்டு விடும் என.

ஒரு பக்கத்தில் தாங்கள் நீதிமான்களாகக் காட்டிக் கொண்டு, மறுபக்கத்தில் அரசியல் அதிகாரத்துக்கும் அதி லாபத்துக்குமாக ஆசைப்படும் இந்த ஆசிரியர்களை [எல்லோரையும் அல்ல] க்குறித்து நீங்கள் எச்சரிக்கையாக இருங்கள்.

இவர்கள் உங்கள் அருகிலே வந்து அரசியற் பாடங்களைத் தாங்களாகவே நடாத்துவார்கள். பள்ளிக்கூடங்களில் ஒழுங்காகப் படிப்பிக்காதவர்களே இந்த அரசியல் விளையாட்டில் அதிகமாக இறங்கியிருக்கிறார்கள் என்பது கூடுதலான கவனத்துக்குரியது.

இப்படியான வாத்திமார், பள்ளிக்கூடக் கன்ரீன்களில், பஸ்ஸில் பயணம் செய்யும்போது, சந்தையில் பொருட்கள் வாங்கும் இடத்தில், கல்வித் திணைக்களங்களில், பாடசாலை மாணவர்களின் மத்தியில், பக்கத்து வீட்டில் என்று எங்கே பார்த்தாலும் தங்களுடைய அலப்பரையை இறக்கி வைக்கிறார்கள்.

'தாங்க முடியல்லைடா சாமி' என்று இவர்களைக் கண்டு விட்டு ஒவ்வொருவரும் ஒடித்தப்ப முயற்சிக்கிறார்கள்.

மாதா மாதம் தங்கள் சம்பளத்தில் ஒரு நாலு ரூபாய் கூடாதா? அதற்கான ஏற்பாட்டை ஜனாதிபதி செய்யாரா? என்று பின்னிரவில் கனவு காண்பவர்கள்தன் முன்னிரவில் அரசியற் புரட்சியைப் பற்றியும் ஆட்சிக்கவிழ்ப்பைப் பற்றியும் கதைக்கிறார்கள்.

என்ன செய்வது?

காலத்தின் கோலம். பிரபாகரன் இல்லாத தேசத்தில் இதுவும் நடக்கும் இன்னமும் நடக்கும் என்று ஒரு ஆச்சி சொன்னது சரிதான்.

ஆசிரியர்கள் ஒரு காலம் சமூகப் பணி செய்து மதிப்பைப் பெற்றார்கள். இப்போதோ சமூகத்தையும் தேசத்தையும் தங்களுக்காக விற்கிறார்கள்.

தடைகளையும், அவமதிப்புகளையும், தன்னம்பிக்கைதான் சமாளித்து அடித்துத் துரத்தி பொன்னாக நம்மை உருவாக்கும். நேர் வழி பாதுகாப்பானது என்பதை உணர்த்தும். - பொன்மொழி.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## அறமற்ற சமூகத்தை ஆக்குபவர்கள்!

தமிழர்களாகிய நமக்கு, நாம் தவிர்ந்த மற்ற எல்லோரைப் பற்றியும் புறணிகள் உண்டு. சிங்களவர்கள் சரியில்லை, சீனர்கள் சரியில்லை, இந்தியர்கள் சரியில்லை, இஸ்லாமியர்கள் சரியில்லை, வெள்ளைக்காறன் சரியில்லை, எல்லாரிலும் விட விசேடமானவர்கள் நாங்கள்தான் என்று சொல்லாத எவனுமே சரியில்லை என்பதாகத்தான் எங்களது "சரி" இருக்கிறது.

எங்களிடம் ஏதாவது பிழை இருக்காதா என்று எப்பனும் யோசிக்காமலே மற்றவர்கள் ஒருத்தரும் ஒழுங்கில்லை என்ற வருத்தத்திலேயே நாம் உழல்கிறோம்.

நாங்கள் மட்டும் என்ன ஒழுங்கு? நமது அரசியல் தலைவர்களாகச் சொல்லிக் கொள்பவர்கள் செய்யும் அரசியலில் ஏதேனும் ஒழுக்கம் உண்டா? நமது ஊடகங்கள் எழுதி வெளித்தள்ளும் எல்லாவற்றிலும் பொய்யும் புனைசுருட்டுகளும் கலக்காத ஊடக தர்மம் கொடிகட்டிப் பறக்கிறதா?

மற்றவர்கள் செய்த குற்றங்களையே திரும்பத் திரும்பச் சொல்லிவரும் நமக்கு, நாம் எந்தக் குற்றமும் அற்றவர்கள்தானா என்ற கேள்வியே வருவதில்லை. அல்லது அத்தகைய சுயவிமர்சனங்கள் எதுவும் தோன்றவிடாத, மட்டையடி நியாயங்களை ஓங்கிக் குரலெடுத்து முழங்கிக் கொண்டிருப்பவர்களின் நிழலிலேயே நாம் பதுங்கிக் கொள்கிறோம்.

நம் தமிழ்ச் சமூகத்தினிடம் உள்ள அறஉணர்வு, ஒழுக்கம், நியாயத்தன்மைகள் பற்றி நமக்குள் ஏதேனும் விவாதங்கள் உண்டா? மற்றவர்கள் செய்த குற்றங்களுக்காகப் பதறித் துடிக்குமளவிற்கு நம் சமூகம் ஒழுக்க, நியாயவுணர்வுகள் நிரம்பப் பெற்ற ஒன்றா? ஒழுக்கம், அறம் பற்றியெல்லாம் நம் சமூகத்தின் சிந்தனைப் போக்கு எப்படியாக இருக்கிறது?

ஒழுக்கம்தான் ஒருவருக்கு உயர்வு தருவது; அது உயிரினும் மேலானதாகக் கருதப்படுவது என்கிறார் திருவள்ளுவர். மக்கள் தேவர் என இரு சாரார்க்கும் ஒத்த முடிவின் ஓரறமானது பசிப்பிணி தீர்த்தலே என்கிறார் மணிமேகலை பாடிய சீத்தலைச் சாத்தனார்.

உலக ஒழுக்கம் அறிந்து ஒழுகுதலே மக்கட் பண்பாகும் என்கிறது கலித்தொகை. நம்மவர் – பிறர் என்ற பாரபட்சமில்லாது அனைவருக்கும் நம் மனத்தில் சமமான மதிப்பளித்தலே அந்த ஒழுக்கமாகும் என்றும் அது சொல்கிறது.

"நம்முடைய மனம் நோகாமலிருக்கப் பிறர் நம்மிடம் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்று ஆசைப்படுகிறோமோ அதே போல் நாம் பிறரிடம் நடந்து கொள்வதுதான் ஒழுக்கம் எனப்படும்." – இது ஒழுக்கம் குறித்த ஈ.வெ.ரா. பெரியாரின் புகழ்பெற்ற வரையறை.

ஒழுக்கம் என்று சொன்னவுடனே நமக்கு உடனடியாக நினைவுக்கு வருவது எது? 'குடிக்கக் கூடாது, புகை பிடிக்கக்கூடாது, திருடக்கூடாது, பொய் சொல்லக் கூடாது, அடுத்தவர் மனைவி மீது ஆசைப்படக்கூடாது...' – இதுபோன்றவைதான் நம் நீதிக்கதைகளில் இருந்து பாடப்புத்தகங்கள் வரை மீண்டும் மீண்டும் வலியுறுத்தப்படும் ஒழுக்கங்கள்.

ஆனால் தப்பித்தவறிக் கூட, இந்த 'கூடாது' பட்டியலில் 'பிறப்பின் அடிப்படையில் யாரையும் ஏற்றத்தாழ்வாகக் கருதக்கூடாது', 'பிறர் உழைப்பைச் சுரண்டக்கூடாது' ஆகியவை இடம்பெறவில்லை என்பதைக் கவனிக்கவேண்டும். ஏனெனில் மனிதர்களுக்குள் சமநிலையை சமநீதியை ஏற்காதவர்கள், உழைப்பவர்கள் சுரண்டப்படும் இந்த சமூக அமைப்பை ஏற்றுக்கொண்டவர்களே இங்கு எல்லோருக்குமான ஒழுக்கங்கள் இவை என்று தீர்மானிப்பவர்களாக இருக்கிறார்கள்.

இதே மேல்தட்டினர்தான் சாதாரண தமிழ் மக்களிடம் இயல்பாகவே இருக்கக் கூடிய அறவுணர்வுகளை, நியாயச் சிந்தனைகளைக் கொச்சைப்படுத்துவதாக நம் சமூகத்தின் முழுமொத்த சித்திரத்தைப் பாழடித்து வைத்திருக்கிறார்கள். - ஆசிரியர்.

# ஜெனிவா மாநாட்டிற்கு எதிராக மன்னாரில் ஆர்ப்பாட்டப் பேரணி

(மன்னார்)

அரசாங்கத்திற்கு ஆதரவு தெரிவித்தும் ஜெனிவா மனித உரிமைகள் மாநாட்டிற்கு எதிராகவும் மன்னாரில் நேற்றுக் காலை ஆர்ப்பாட்டப் பேரணி இடம்பெற்றது.

அரசாங்கத்திற்கு எதிராக மனித உரிமை மீறல் குற்றச்சாட்டில் மூன்றாவது தடவையாகவும் பிரேரணை அமெரிக்காவால் முன்வைக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், அரசாங்கத்திற்கு ஆதரவு தெரிவித்தும் ஜெனிவா மனித உரிமைகள் மாநாட்டிற்கு எதிர்ப்புத் தெரிவித்தும் குறித்த ஆர்ப்பாட்டப் பேரணி இடம்பெற்றது.

மன்னார் மக்கள் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டப் பேரணியின் போது, மன்னார் பிரதான பாலத்திலிருந்து ஒருதொகுதி மக்களும் மன்னார் விளையாட்டு மைதான வீதியிலிருந்து ஒரு தொகுதி மக்களும் பேரணியாக மன்னார் பஸார் பகுதியை வந்தடைந்தனர்.

பின்னர் இங்கிருந்து பேரணியாக மன்னார் மாவட்டச் செயலகத்திற்கு சென்று மாவட்ட அரசாங்க அதிபர் எம்.வை.எஸ். தேசப்பிரியவிடம் மகஜரைக் கையளித்தனர். ஜெனிவா மனித உரிமைகள் மாநாட்டிற்கு எதிராக எழுதப்பட்ட பதாதைகளை தாங்கியிருந்த இந்த ஆர்ப்பாட்டப் பேரணியில் கலந்துகொண்டோர், அரசாங்கத்திற்கு ஆதரவு தெரிவித்து கோஷங்களை எழுப்பினர்.

# முற்று முழுதான தடையை ஏற்றுக்கொள்ள முடியாது

இலங்கைக் கடற்பரப்பில் மீன்பிடிப்பதனை முற்று முழுதாக தடை செய்வதனை ஏற்றுக்கொள்ள முடியாது என தமிழக மீனவர்கள் தெரிவித்துள்ளனர். இரு நாடுகளினதும் மீனவர்கள் எதிர்நோக்கி வரும் பிரச்சினைகள் குறித்து இணக்கப்பாடுகளை ஏற்படுத்திக் கொள்வதில் எவ்வித சிரமமும் கிடையாது என இராமநாதபுரம் மாவட்ட மீனவர் சங்கத் தலைவர் எஸ்.ஜேசுராஜ் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனினும் இலங்கைக் கடற்பரப்பில் முற்று முழுதாகவே இந்திய மீனவர்கள் மீன்பிடிக்கக் கூடாது என்ற தடையை ஏற்றுக்கொள்ள முடியாது என அவர் தெரிவித்துள்ளார். குறிப்பிட்ட ஒரு சில நாட்களுக்காவது மீன்பிடியில் ஈடுபட சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டியது அவசியமானது என அவர் குறிப்பிட்டுள்ளார். கச்சதீவு புனித அந்தோனியார் திருவிழாவில் பங்கேற்ற போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

# இலங்கை பணிப்பெண்கள் சவுதி முகாம்களில் தடுப்பு

(கொழும்பு)

தொழிலுக்காக சவுதி அரேபியாவுக்குச் சென்ற சுமார் 150 இலங்கைப் பணிப்பெண்கள் ஜித்தாவிலுள்ள சுமேஷி முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

சட்டவிரோதமாக சவுதி அரேபியாவில் தங்கியிருந்ததால் அந்நாட்டு அதிகாரிகளால் கைது செய்யப்பட்ட மற்றும் தூதரக அதிகாரிகளிடம் தஞ்சமடைந்த பணிப்பெண்களே இவ்வாறு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

எவ்வாறாயினும் சுமேஷி முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தாம் உணவுப் பற்றாக்குறை உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளால் அசௌகரியத்தை எதிர்நோக்கிவருவதாக இலங்கையின் பணிப்பெண்கள் குற்றம் சுமத்துகின்றனர்.

இது தொடர்பில் ஜித்தாவிலுள்ள கொன்சியுலர் அலுவலகத்தின் முதன்மை செயலாளர் எம்.பி.எம்.சரூக்கிடம் வினவிய போது, குறித்த பணிப்பெண்களை இலங்கைக்கு அனுப்பிவைப்பதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்படுவதாக தெரிவித்தார்.

அவர்களுக்குத் தேவையான தற்காலிக கடவுச் சீட்டுகள் ஏற்கனவே விநியோகிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

# கூட்டமைப்புடன் முஸ்லிம் காங்கிரஸ் இணைந்து செயற்படத் தயார்

(கொழும்பு)

வடக்கில் நிர்வாகத்தில் உள்ளவர்களுடன் இணைந்து செயற்பட்டு மக்களின் தேவைகளை பூர்த்தி செய்யவும் தயாராக உள்ளதாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தெரிவித்துள்ளது.

தற்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வட மாகாண ஆட்சியில் உள்ள நிலையில் அதன் நிர்வாகத்துக்கு ஆதரவளிக்க தயாராக இருப்பதாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசின் பொருளாளர் அஸ்லம் மொஹமட் சலீம் தெரிவித்தார்.

இதுதவிர, எந்தவொரு கட்சியாயினும், அவர்களின் நிர்வாகத்தில் உள்ள மாகாண சபைகளுடன் இணைந்து செயற்பட்டு தமது மக்களின் தேவைகளை பூர்த்திசெய்யவுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

# கசிப்பு வைத்திருந்த இருவருக்கு தண்டம்

(கிளிநொச்சி)

அனுமதியின்றி கசிப்பு மற்றும் கள்ளு வைத்திருந்த இருவருக்கு கிளிநொச்சி நீதவான் நீதிமன்ற நீதவான் எம்.ஐ. வகாப்தீன் 20,000 ரூபா தண்டம் விதித்தார்.

இச்சந்தேக நபர்களை நேற்று நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தியபோது, கள்ளு வைத்திருந்தவருக்கு 5000 ரூபாவும் கசிப்பு வைத்திருந்தவருக்கு 15,000 ரூபாவும் நீதவான் தண்டம் விதித்தார். கிளிநொச்சி மாவட்டத்தின் அக்கராயன் பகுதியில் 6 போத்தல் கள்ளு வைத்திருந்த ஒருவரை கடந்த 2 ஆம் திகதி அக்கராயன் பொலிஸார் கைதுசெய்தனர். இதே வேளை, வட்டக்கச்சியில் 750 மில்லிலீற்றர் கசிப்பு வைத்திருந்த ஒருவரை கடந்த 13 ஆம் திகதி வட்டக்கச்சிப் பொலிஸார் கைதுசெய்தனர்.

# பட்டப்பகலில் வங்கிக்கொள்ளை தம்புள்ள நகரில் துணிகரம்

தம்புள்ள பொருளாதார மத்திய நிலையத்திற்கு அருகில் உள்ள தனியார் வங்கியொன்றில் புகுந்த கொள்ளையர்கள் பட்டப்பகலில் 5 இலட்சம் ரூபா பணத்தை கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர்.

காரில் வந்த மூவர் நேற்று மதியம் 1.50 மணியளவில் பணக் கொள்ளையில் ஈடுபட்டு தப்பிச் சென்றுள்ளனர். வங்கி ஊழியர்களான பெண்களை அச்சுறுத்தி 5 இலட்சத்திற்கும் மேற்பட்ட பணத்தை கொள்ளையர்கள் எடுத்துச் சென்றுள்ளனர். தம்புள்ள பொலிஸார் மேலதிக விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

# ஊழியர்களுக்கு நிரந்தர நியமனம்

(திருநெல்வேலி)

நல்லூர் பிரதேச சபையினால் 25 பேருக்கு சபை ஊழியர்களாக நிரந்தர நியமனம் வழங்கப்பட்டுள்ளது. சபையின் கேட்போர்கூடத்தில் கடந்த 13 ஆம் திகதி இடம்பெற்ற நிகழ்வொன்றில் வைத்து இந்நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டன.

நல்லூர் பிரதேச சபையின் தவிசாளர் ப.வசந்தகுமார் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் சபை உறுப்பினர்கள் பலர் கலந்துகொண்டனர்.

சுகாதாரத் தொழிலாளர்கள் 16 பேர், நூலகப் பரிசாரகர் 1, சாரதிகள் 2, மயானத் தொழிலாளி 1, வேலை வெளிக்களத் தொழிலாளர்கள் 3, காரியாலய சகாயர் 1, மின் இணைப்பாளர் 1 என இவர்களுக்கான நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டன. சபையின் செயலாளர், எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் பலர் உரை நிகழ்த்தியதுடன், நியமனக் கடிதங்களையும் வழங்கி வைத்தனர். (137)

ஏற்கனவே பொட்டம்மானையும், பிரபாகரனையும் சந்தித்து தங்களது பத்திரிகையை வாசிக்கக் கொடுத்துவிட்டு படம் எடுத்து தலைவருக்குப் பிடித்த பத்திரிகை இதுதான், பொட்டம்மானுக்குப் பிடித்த பத்திரிகை இதுதான் என்று செய்தி போட்டது போன்று சூசைக்குப் பிடித்த பத்திரிகை இதுதான் என்று எனக்கும் செய்தி போட்டுவிடுவார்கள் எனவே நான் அவர்களை சந்திக்க மாட்டேன். நீரே சந்தித்துக் கொள்ளும் என்று தளபதி மங்களேசிடம் கூறிவிட்டார் சூசை.



# விடுதலைப் புலிகளை அழித்த ஊடகங்கள்

# 68

■ வே.அர்ச்சுணன்

வெளிநாடுகளுக்கு தப்பிச்சென்ற கடற்புலிகள் போராளிகள் எரித்திரியா, தென்னாபிரிக்கா, இந்தியா, மலேசியா போன்ற நாடுகளிலும் பலர் மேற்குலக நாடுகளிலும் வாழ்வதாகவும் அவர்கள் பலர் தங்களது தனிப்பட்ட குடும்ப வாழ்வுடன் இணைந்து சுயமாக வாழ் வதாகவும் விடுதலைப் புலிகள் பற்றியோ கூட்டமைப்பினர் பற்றியோ அவர்கள் அலட்டிக் கொள்வது கிடையாது எனவும் கூறப்படுகிறது. தாங்கள் எந்தவொரு அமைப்புடனும் தொடர்பு இல்லாதவர்கள் போன்று வாழ்ந்து வருவதாக கூறப்படுகின்ற போதிலும் ஒரு சிலர் நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் பிரதமரான(?) உருத்திரகுமாரனுடனும், வேறு சிலர் நெடியவனுடனும் தொடர்புகளை பேணிய வாறு செயற்படுவதாகவும் கூறப்படுகிறது. இருந்தாலும் தாங்கள் அடுத்த கட்ட நடவடிக்கைகள் எதிலும் இலங்கையில் ஈடுபடமுடி யாது என்பது இவர்களுக்குத் திடமாக தெரிந்த விடயமாக இருக்கின்றது.

அதாவது தங்களுடைய இருப்பிற்காகவும் சுய இலாபத்திற்காகவும் இவர்களுடன் இணைந்து செயற்படுகின்ற போதிலும், பெரியளவிலான படைக் கட்டமைப்புக்களை பேணிய வாறு பிரபாகரனால் அடையமுடியாமற்போன இலக்கினை தங்களால் எப்படியும் அடைய முடியாது என்பது இவர்களுக்கு வெளிப்படையாக தெரிந்த விடயமாகவே இருக்கிறது.

கடற்புலிகளின் தளபதி சூசையுடன் இணைந்து செயற்பட்ட காலங்களில் வெளிநாடுகளில் இருந்து தொடர்பைப் பேணி கடற்புலிகளை வளர்ப்பதற்கு உதவிய பலரும் இன்று இந்த முன்னாள் கடற்புலித் தளபதிகளை கணக்கில் எடுக்காமல் செல்வதாக இவர்கள் அண்மையில் தங்களது நண்பர்களுடன் கதைக்கின்ற போது கவலையுடன் தெரியப்படுத்தி இருக்கின்றனர்.

சூசை இயக்கத்தில் இருந்த காலப்பகுதியில் தனது படைக் கட்டமைப்பை வளர்ப்பதற்கு வெளி நாடுகளில் இருந்து நேரடியாக நிதியுதவியைப் பெற்று தனது கட்டமைப்புக்களை வளர்த்து வந்தார். ஆனால் ஏனைய படைப்பிரிவினர் இவ்வாறு நேரடியாக நிதிநடவடிக்கைகளை கையாளு வதற்கு விடுதலைப் புலிகளின் நிதித்துறையைச் சேர்ந்த தமிழேந்தி அப்பாவும், தலைவர் பிரபா கரனும் கடுமையான தடையை விதித்திருந்தனர்.

கடற்புலிகளைப் பொறுத்தவரையில் அது சுயமாக இயங்குகின்ற ஒரு அமைப்பாக இயக்கத்தில் தனித்துவமாக செயற்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது. ஆரம்பத்தில் மரணதண்டனைகளில் இருந்து சிவில் நிர்வாகம் வரை அனைத்தையும் தமது கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் கடலோர பகுதிகளில் கடற்புலிகள் சுயமாகவே நடைமுறைப்படுத்தி வந்தனர். இறுதியாக வடமராட்சி மணற்காட்டுப் பகுதியில் இருந்த கடற்புலிகளின் பயிற்சிப் பாசறையில் பயிற்சி பெற்றுக்கொண்டிருந்த ஒரு கடற்புலிகள் அணிப் போராளிக்கும் ஒரு மகளிர் படையணி போராளிக்கும் இடையில் ஏற்பட்ட காதலானது சாடையாக கசிந்து போராளிகள் மட்டத்தில் பேசப்பட்டு சூசைக்கு தெரியவந்ததைத் தொடர்ந்து, மணற்காடு சவுக்கங்காட்டுப் பகுதி யில் உள்ள தங்களது கடற்புலி பாசறைக்கு இருவரையும் அழைத்து விசாரணை செய்தார் சூசை. இயக் கத்தில் காதல் என்பது முற்றாக தடைசெய்யப்பட்டுள்ளது என்று கூறி அனைத்து மகளிர் படையணி, மற்றும் கடற்புலிப் போராளிகள் முன்னிலையில் இருவருக்கும் பகிரங் கமாக மரணதண்டனையை வழங் கினார். தனது இடுப்பில் இருந்த பிஸ் ரலை எடுத்து சூசை நேரடியாகவே இருவரையும் சுட்டுக்கொன்றார்.

இதன் பின்னர் சூசைக்கு காதல் ஏற்பட்டு சூசை திருமண பந்தத்திற்குள் நுழைய காலடி எடுத்து வைத்தபோது பல தளபதிகள் சூசையின் மணற்காடு நடவடிக்கை தொடர்பில் தங்களுக்குள் பேசிக்கொண்டதுடன் சிலர் நேரடியாகவே சூசையிடம் தமது ஆதங்கத்தையும் வெளிப்படுத்திச் சென்றனர். இவர்களில் முக்கியமான ஒருவராக புலனாய்வுத்துறை பொறுப்பாளர் பொட்டம்மான் நேரடி யாகவே சூசையை நக்கல் அடித்து விட்டுச் சென்றார்.

இதன்பின்னர் பிரபாகரனுடன் நேரடி யாக கதைத்த சூசை ஒரு வயதுக் கட்டுப்பாட்டு நடைமுறையை அமுல் படுத்தி அதன் பிரகாரம் வயது வந்தவர்கள் விரும்பிக் கொள்கின்ற பட்சத்தில் அவர்களுக்கு திருமணத்தை நடத்தி வைக்கும் திட்டத்தை இயக்கம் தனது கொள்கையாக அமுல்படுத்தத் தொடங்கியது.

இதனைத் தொடர்ந்து இயக்கத்தில் இருந்த 20 வீதமானவர்கள் உடனடி யாகவே திருமணம் முடிக்கப்போவதாக விண்ணப்பித்திருந்தனர். இவர்களின் விண்ணப்பங்களை பரிசீலனை செய்த இயக்கத்தின் திருமணத் திற்குப் பொறுப்பான குழு 9வீதமானவர்களுக்கு அனுமதி அளித்தது. இதில் கடற்புலிகள் அணி யில் 2வீதத்தினரே ஆரம்பத்தில் உள்வாங்கப்பட்டனர். இவ்வாறு உள்வாங்கப்பட்டவர்கள் தங்களது காதல்கள் தொடர்பில் கடற்புலிகளின் தளபதிக்கு விண்ணப்பித்துவிட்டு அனுமதிக்காக காத்திருந்தனர்.

இருந்த போதிலும் பின்னைய நாட்களில் போராளிகளின் திருமணத்திற்கு பெரியளவில் கட்டுப்பாடுகள் இருக்கவில்லை. காதலிக்கின்ற அனைத்துப் போராளி களும் திருமண பந்தத்தில் இணை வதற்கு 90வீதமான அனுமதி வழங்கப்பட்டது. இவ்வாறு கூடுதலா னோர் திருமண பந்தத்தில் இணைந்து கொண்டமையும், இயக்கத்தின் தோல்விக்கு ஒரு காரணமாக தற்போது கூறப்படுகின்றது. இதிலும் ஓரளவிற்கு உண்மை இருக்கவே செய்கிறது.

அதாவது கடற்புலிகள் அணி வலுவுடன் இருந்த காலப்பகுதியில் வன்னிப் பகுதிக்கு படையெடுத்து வருகின்ற தென்னிலங்கை ஊடகவியலாளர்களும் வெளிநாட்டு ஊடகவியலாளர்களும் சூசையுடன் கலந்துரையாடி அவருடன் நேர் காணல் நடத்த முயற்சித்த போதி லும் சூசை இந்த வெளிநாட்டு, உள்நாட்டு தென்னிலங்கை ஊடகவியலாளர்களுடன் தொடர்புகளை பேணு வதை இயன்ற வரை தவிர்த்துவந்தார். இந்த ஊடகவியலாளர்களுடன் தொடர்புகளை பேணும் நடைமுறைக்கு பொறுப்பாக மங்களேஸ் என்ற கடற்புலி களின் தளபதியையே நியமித்திருந்தார்.

பெரும்பாலான ஊடகங்களும், ஊடகவியலாளர்களும் சூசையுடன் நேர்காணலை நடத்த விரும்பிய போதிலும் இதற்குரிய அனுமதியை சூசை வழங்குவதில்லை. சூசைக்கு பிடித்த ஊடகங்களாக புலிகளின் குரல், வீரகேசரி, ஐ.பி.சி, தினக்குரல் போன்ற ஊடகங்களே விளங்கிவந்தன. இதிலும் ஐ.பி.சி மற்றும் புலிகளின் குரல் செய்தியாளர்களுடன் மட்டுமே சூசை தொடர்புகளைப் பேணிவந்தார். குறிப்பாக புலிகளின்குரலின் பிரதம செய்தியாளர் தவபாலனுடனும், ஐ.பி.சி யின் யாழ்மாவட்ட செய்தியாளருடனும் சூசை நெருக்கமான தொடர்புகளையும் உறவுகளையும் பேணிவந்தார். அத்துடன் இவர்களுடன் அரசியல் விடயங்கள் தொடர்பிலும், கடற்புலிகளின் செயற்பாடுகள் தொடர்பிலும் அடிக்கடி சந்தித்து ஆலோசித்து வந்தமை குறிப்பிடத்தக்கது.

ஆனால் யாழ்மாவட்டத்தில் தங்களை முன்னணிப் பத்திரிகை என்று கூறிக்கொள்கின்ற பத்திரிகை ஒன்றின் பிரதம ஆசிரியர் வன்னிப் பகுதிக்கு சென்று சூசையைச் சந்திப்பதற்கு முயற்சி எடுத்த போதிலும் அந்த முயற்சி பலன் அளிக்கவில்லை. அதாவது ஏற்கனவே பொட்டம்மானையும், பிரபாகரனையும் சந்தித்து தங்களது பத்திரிகையை வாசிக்கக் கொடுத்துவிட்டு படம் எடுத்து தலைவருக்குப் பிடித்த பத்திரிகை இதுதான், பொட்டம்மானுக்குப் பிடித்த பத்திரிகை இதுதான் என்று செய்தி போட்டது போன்று சூசைக்குப் பிடித்த பத்திரிகை இதுதான் என்று எனக்கும் செய்தி போட்டுவிடுவார்கள் எனவே நான் அவர்களை சந்திக்க மாட்டேன். நீரே சந்தித்துக் கொள்ளும் என்று தளபதி மங்களேசிடம் கூறி மங்களேசுடன் மட்டுமே அவர்களது சந்திப்புகள் மட்டுப்படுத்தப்பட்டன.

நிற்க, முள்ளிவாய்க்கால் யுத்தத்தின் போது கடற்புலிகளிடம் பல நவீன ஆயுதங்களும் கலங்களும் இருந்தபோதும் அவற்றை இறுதி யில் ஏன் முழுமையாகப் பயன்படுத்தவில்லை என்பதை மேலோட்டமாக பார்த்துவிட்டு மேலே செல்வது பொருத்தமாக இருக்கும்.

வடமராட்சி மணற்காட்டுப் பகுதியில் இருந்த கடற்புலிகளின் பயிற்சிப் பாசறையில் பயிற்சி பெற்றுக்கொண்டிருந்த ஒரு கடற்புலிகள் அணிப் போராளிக்கும் ஒரு மகளிர் படையணி போராளிக்கும் இடையில் காதல் ஏற்பட்டபோது, இருவரையும் பாசறைக்கு அழைத்து விசாரணை செய்தார் சூசை. இயக்கத்தில் காதல் என்பது முற்றாக தடைசெய்யப்பட்டுள்ளது என்று கூறி அனைத்து போராளிகள் முன்னிலையில் இருவருக்கும் பகிரங்கமாக மரண தண்டனையை வழங்கினார். தனது இடுப்பில் இருந்த பிஸ்ரலை எடுத்து சூசை நேரடியாகவே இருவரையும் சுட்டுக்கொன்றார். இதன் பின்னர் சூசைக்கு காதல் ஏற்பட்டு சூசை திருமண பந்தத்திற்குள் நுழைய காலடி எடுத்து வைத்தபோது பல தளபதிகள் சூசையின் மணற்காடு நடவடிக்கை தொடர்பில் தங்களுக்குள் பேசிக்கொண்டதுடன் சிலர் நேரடியாகவே சூசையிடம் தமது ஆதங்கத்தையும் வெளிப்படுத்திச் சென்றனர். முக்கியமாக புலனாய்வுத்துறை பொறுப்பாளர் பொட்டம்மான் நேரடியாகவே சூசையை நக்கல் அடித்துவிட்டுச் சென்றார்.

(தொடரும்)

# நாட்டின் ஸ்திரத்தன்மையை குலைக்க முயற்சிக்கின்றார் மன்னார் பேராயர்

## குற்றம் சுமத்துகிறார் விமல்

(மன்னார்)


மன்னார் பேராயர் வணக்கத்திற்குரிய இராயப்பு ஜோசப் ஆண்டகை நாட்டின் ஸ்திரத்தன்மைக்கு குந்தகம் ஏற்படுத்த முயறசித்து வருவதாக வீடமைப்பு மற்றும் பொது வசதிகள் அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார். மேற்குலக நாடுகளுடன் இணைந்து கொண்டு அவர் இவ்வாறு நாட்டுக்கு எதிராக செயற்பட்டு வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

சிங்களப் பெரும்பான்மை மக்களினால் தமிழ் மக்கள் துன்புறுத்தப்படுவதாக பேராயர் ஜோசப், சர்வதேச ரீதியாக பிரசாரம் செய்து வருவதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.



வடக்கில் இடைக்கால நிர்வாகமொன்றை நிறுவ வேண்டுமென பேராயர் சர்வதேச சமூகத்திற்கு பரிந்துரை செய்துள்ளதாகத் தெரிவித்துள்ளார். மனித உரிமை மீறல்கள் இடம்பெற்று வருவதாகவும், வடக்கின் அனைத்து பெண்களையும் படையினர் பாலியல் ரீதியாக துன்புறுத்துவதாகவும் குற்றச்சாட்டுக்கள் முன்வைககப்பட்டு வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளினால் யுத்தம் செய்து பெற்றுக்கொள்ள முடியாதவற்றை ஐக்கிய நாடுகள் அமைப்பின் ஊடாக பேராயர் ஜோசப் பெற்றுக் கொள்ள முயற்சிக்கின்றார் என விமல் வீரவன்ச குற்றம் சுமத்தியுள்ளார்.



கொழும்பு கொச்சிக்கடை பொன்னம்பலவாணேஸ்வர இரதோற்சவத்தில் பக்தர்கள் புடைசூழ இரதம் பவனி வருகின்றது.


# இந்திய மீனவர் விடுதலை நன்றி தெரிவித்தார் ஜெயா



இலங்கை அரசாங்கத்தின் நடவடிக்கைகளுக்கு தமிழக முதல்வர் ஜெயலலிதா நன்றி தெரிவித்துள்ளார். இலங்கையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இந்திய மீனவர்களை விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டமைக்காக ஜெயலலிதா நன்றி தெரிவித்துள்ளார்.

இலங்கையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 177 மீனவர்களையும், 32 படகுகளையும் விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.தமிழகத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இலங்கை மீனவர்களும் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். நல்லெண்ண அடிப்படையில் மீனவர்கள் விடுதலை செய்யப்படுவதை அவர் வரவேற்றுள்ளார்.

# தேசப்பற்றுக்கொண்டது ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ்



(கொழும்பு)

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸிற்கு தேசப் பற்று உண்டு என கட்சியின் பொதுச் செயலாளர் ஹசன் அலி தெரிவித்துள்ளார்.

எனினும், அரசாங்கத்தின் அனைத்து உத்தரவுகளையும் பின்பற்றப்போவதில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார். நாட்டுக்கு எதிராக எவ்வித நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

கண்ணை மூடிக்கொண்டு அரசாங்கத்தின் அனைத்து நடவடிக்கைகளையும் ஆதரிக்க முடியாது எனவும் அது நடைமுறைச் சாத்தியமற்றது என்வும் அவர் குறிப்பிட்டுள்ளார். இஸ்லாமியர்களின் புனித நூலான குர்ஆனின் வழி நடப்பதரகவும், நாட்டுக்கு துரோகம் இழைக்கப் போவதில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.எமது பக்க நியாயங்களை சரியான முறையில் வெளிப்படுத்த வேண்டிய அவசியம் காணப்படுவதாகக் குறிப்பிட்டுள்ளார்.சிறுபான்மை இனம் என்ற காரணத்தினால் துரோகி முத்திரை குத்தப்படுவது ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல என அவர் சுட்டிக்காட்டியுள ளார்.

# போராட்டத்தில் வெற்றி கண்களுக்கு தெரிகிறது



(கொழும்பு)

அரசாங்கத்துக்கு எதிரான போராட்டத்தில் தற்போது வெற்றி தமது கண்களுக்கு தென்படுவதாக எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரம சிங்க தெரிவித்துள்ளார்.

மொரட்டுவையில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் உரையாற்றும் போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இந்த அரசாங்கத்தை வீட்டுக்கு அனுப்ப வேண்டிய காலம் வந்துள்ளது.இந்தநிலையில் வெற்றியும் தமது கண்ணுக்கு தெரிகிறது.தற்போதையை அரசாங்கத்தின் செயற்பாடுகளில் இலங்கையின் அனைத்து தொழிற்துறைகளும் வீழ்ச்சி அடைந்துள்ளன.

மகிந்த ராஜபக்சவின் குடும்பத்தினர் மாத்திரமே வளர்ச்சி அடைந்து வருகின்றனர் என்று அவர் கூறி இருக்கிறார்.

# இரசாயன ஆயுதங்களை படையினர் பயன்படுத்தியதில்லை

## என்கிறார் இராணுவப் பேச்சாளர்



இரசாயன ஆயுதங்களை படையினர் எப்போதும் பயன்படுத்தியதில்லை என இராணுவத்தினர் அறிவித்துள்ளனர்.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்தத்தின் போது இராணுவத்தினர் எல்லா சந்தர்ப்பங்களிலும் மரபு ரீதியான ஆயுதங்களை மட்டுமே பயன் படுத தியதாக இராணுவப் பேச்சாளர் ருவான் வனிகசூரிய தெரிவித்துள்ளார்.

ஜெனிவா மனித உரிமைப் பேரவை அமர்வுகளை இலக்கு வைத்து இவ்வாறான போலித் தகவல் ஒன்று வெளியிடப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார். படையினர் எப்போதும் இரசாயன ஆயுதங்களைப் பயன் படுத்தவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனினும், தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆயுதக் களஞ்சியங்களில இரசாயன ஆயுதங்கள் மீட்கப்பட்டிருந்ததாகத் தெரிவித்துள்ளார்.


அரசாங்கத்தையும் இராணுவத்தையும் அசௌகரியத்திற்குள் ஆழ்த்தும் நோக்கில் இந்த தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

# போலி நாணயத்தாள்களுடன் சந்தேக நபர் கைது

சீதுவ - லியனகேமுல்ல பகுதியில் போலி நாணயத்தாள்களுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

5000 ரூபா போலி நாணயத்தாள்கள் 67 மற்றும் 1000 ரூபா போலி நாணயத்தாள்கள் நான்கும் சந்தேகநபர் வசமிருந்து கைபற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளார். அத்துடன் ஒருபக்கம் மட்டும் அச்சிடப்பட்ட மேலும் சில நாணயத்தாள்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

# தங்க முலாம் பூசப்பட்ட வேலி சிவனொளிபாத மலையில் திறப்பு



சிவனொளிபாதமலையிலுள்ள இரும்பு வேலிகளை அகற்றி அதற்கு பதிலாக தங்கம் முலாம் பூசப்பட்ட வேலிகள் நேற்று முன்தினம் திறந்துவைக்கப்பட்டது.

இந்த நிகழ்வு சிவனொளிபாதமலைக்கு பொறுப்பான தேரர் பெங்கமுவே தம்மதின்ன தலைமையில் நடைபெற்றது.

தங்கம் முலாம் பூசப்பட்ட வேலிகள் நல்லதண்ணி, கல்ப்பருக்ச விகாரையிலிருந்து சிவனொளிபாதமலை உச்சிக்கு யாத்திரிகர்கள் மூலமாகவும் பொலிஸார் மூலமாகவும் கொண்டு சென்று பொருத்தப்பட்டன. கடந்த சில நாட்களாக விசேட பூஜைகள் இடம்பெற்றதோடு செங்கல் மற்றும் ஏனைய பொருட்களால் கட்டப்பட்ட மதில்களை அகற்றி கருங்கல் மூலம் கட்டடங்கள் அமைக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# இறுதியாக வெளியான காணொளியும் போலியானது

## ஜீ.எல். பீரிஷ்



இலங்கை இராணுவத்தினர் தொடர்பில் செனல் 4 தொலைகாட்சி இறுதியாக வெளியிட்டிருந்த காணொளியும் போலியானது என்று, வெளிவிவகார அமைசசர் ஜீ.எல்.பீரிஷ் தெரிவித்துள்ளார்.

லண்டனில் இடம்பெற்ற பொதுநலவாய நாடுகளின் அமைச்சர்கள் மட்ட கூட்டத்தைத் தொடர்ந்து நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

நடைபெற்றுக் கொண்டிருக்கும் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் மாநாட்டை இலக்கு வைத்து, சமயம் பார்த்து இந்த காணொளி வெளியிடப்பட்டுள்ளதாக அமைச்சர் இதன் போது குற்றம் சுமத்தினார்.


இந்தச்செய்தியாளர் சந்திப்பில் கலந்துக் கொண்டிருந்த செனல் 4 தொலைகாட்சியின் செய்தியாளர்களான கெலம் மெக்ரே மற்றும் ஜொனதன் மிலர் ஆகியோர் இலங்கை அரசாங்கம் தொடர்பில் கேள்விகளை எழுப்பி இருந்த நிலையிலேயே அமைச்சர் இந்தச் கருத்தை தெரிவித்துள்ளார்.

# 20 பொலிஸாருக்கு உடனடி இடமாற்றம்

உடனடியாக அமுலாகும் வகையில், அனுராதபுரம் திரப்பனே பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி உள்ளிட்ட 20 பொலிஸ் அதிகாரிகளுக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

பொலிஸ் ஊடகப் பேச் சாளஅஜித் ரோஹன இதனைத் தெரிவித்துள்ளார்.

குறித்த பொலிஸ் அதிகாரிகளின் பிழையான நடத்தை தொடரபில் கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் இந்த உடனடி இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது. அவர்களின் வெற்றிடங்களுக்கு அதே மாவட்டத்தைச் சேர்ந்த பொலிஸார் நியமிக்கப்பட்டுள் ளார்.




யாழ். மண்ணில் சிறியோர் முதல் முதியோர் வரை பல சமுகப்பணிகளைச் செய்து வரும் சின்மய மிஷனின் யாழ்.கிளையினரால் இசை ஆசிரியர்கள், மாணவர்கள், மற்றும் இசை ஆர்வலர்களுக்காக கடந்த சனிக்கிழமை சின்மய ஞானவேல் மண்டபத்தில் இசை ஆசான் வர்ண இராமேஸ்வரனின் வழிகாட்டலில் ஒழுங்கு செய்யப்பட்ட குரலிசைப் பயிற்சியின் போது.. (48)

# சமுர்த்தி மன்றத்தின் ஊடாக வறிய மாணவர்களுக்கு நிதி

(வடமராட்சி)

வாழ்வாதார ரீதியாக வறுமையில் வாழ்ந்து வரும் மாணவர்களின் கல்வியை மேம்படுத்தும் முகமாக சமுர்த்தி சமூக அபிவிருத்தி மன்றத்தின் ஊடாகச்சேர்க்கப்பட்ட நிதி இத்தகைய மாணவர்களுக்கு வழங்கப்பட்டு வருவதாக கரவெட்டிப் பிரதேச செயலர் எஸ்.சிவஸ்ரீ தெரிவித்தார்.

உடுப்பிட்டி சமுர்த்தி வங்கியின் கட்டுப்பாட்டுச் சபை பொதுக்கூட்டமும், நிர்வாகத் தெரிவும் அண்மையில் உடுப்பிட்டி பெண்கள் உயர்தரப் பாடசாலையில் திருமதி வி. தேவமலர் தலைமையில் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில், இலங்கையில் வறுமையை ஒழிப்பதற்காக அரசாங்கம் பல்வேறு வேலைத்திட்டங்களை ஒவ்வொரு வருடமும் முன்னெடுத்து வருகின்றது.

அந்தவகையில், சமுர்த்தி வேலைத்திட்டம் நிலைத்து நிற்கின்ற வறுமை ஒழிப்புத் திட்டமாக உள்ளதுடன் படிப்படியாக வறுமை நிலையைக் குறைப்பதற்கான வேலைத திட்டங்களை வாழ்வெழுச்சி திட்ட அபிவிருத்தி திணைக்கள மூடாக சமுர்த்திதிட்ட உதவிகள் வழங்கத் தயாரா்கவுள்ளது.

அந்தவகையில், ஒவ்வொரு பிரதேச செயலக பிரிவுகளிலும் சமுர்த்தி சமூக அபிவிருத்தி மன்றின் ஊடாக கொடி வாரத்தை முன்னிட்டு கடந்த வருடம் பல இலட்சம் ரூபா திரட்டப்பட்டு கரவெட்டிப் பிரதேசத்தில் வசித்து வரும் வறுமைக் கோட்டின் கீழ் உள்ள மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காக வழங்கப்பட்டுள்ளது.

இதில் சுமார் 400 மாணவ மாணவிகள் தெரிவு செய்யப்பட்டு மாதாந்தம் உதவி வழங்கப்பட்டு வருகிறது. எனினும் இவ்வாறு வழங்கப்படும் உதவிகளைப் பெற்றோர்கள் சரியான முறையில் பயன்படுத்தி கல்வியில் சிறந்தவர்களாக வாழ வைக்கவும் அர்ப்பணிப்புடன் செயலாற்ற வேண்டும் என்றார். (116)

# நற்கருணைப் பேரணி

அமலமரித்தியாகிகள் சபையினரால் ஒழுங்குபடுத்தப்பட்ட நற்கருணைப் பேரணி நேற்று முன்தினம் முல்லைத்தீவில் சிறப்புற நடைபெற்றது.

ஆயிரக்கணக்கான மக்கள் பங்குபற்றிய இப்பேரணி நேற்று முன்தினம் மாலை 3.30 மணிக்கு சிலாவத்தையில் ஆரம்பமாகி தீர்த்தக்கரை, கள்ளப்பாடு, முல்லைநகரம் ஊடாகச் சென்று செல்வபுரத்திலுள்ள யூதாததேயு ஆலயத்தில் நிறைவடைந்தது.

மகாஞான ஒடுக்கத்தை வலியுறுத்தியே இப்பேரணி நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (67)

# கவிதைகள் வெளியிடும் அளவுக்கு விமர்சனங்களை வெளியிடுவது அரிது

## மதிசூதனன் தெரிவிப்பு

சமீப காலத்தில் கவிதைகள் வெளிவரும் அளவிற்கு விமர்சனங்கள் வெளிவருவது குறைவாக உள்ளது என தெ.மதுசூதனன் தெரிவித்தார்.

அவுஸ்ரேலியாவில் புலம்பெயர்ந்து வாழ்ந்து வரும் கவிஞை ஆழியாளின் கருநாவு என்ற கவிதைத்தொகுதி அறிமுக நிகழ்வு தூண்டி இலக்கிய வட்டத்தின் ஏற்பாட்டில் கடந்த ஞாயிற்றுக்கிழமை பி.ப 3.00 மணிக்கு கேணியடி திருநெல்வேலியில் இடம்பெற்றது. அதில் கலந்துகொண்டு தலைமையுரையாற்றும்போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வாசிப்பிற்கும் விமர்சனத்திற்கும் இரண்டு புள்ளிகள் என்பதற்கு அப்பால் விமர்சனம் என்னும் பெயரில் சொல்வது சில குறிப்பிட்ட கவிதைகளை வாசித்து சொல்வதையே நடைமுறையில் வருவதைப் பார்க்கின்றோம். கவிதை பற்றிய உரத்த சிந்தனைகளை கூறும் அளவிற்கு கவிஞர்கள் தொடர்பான கூற்றுக்கள் பற்றிச் சொல்வது குறைவாக உள்ளது.

துறைசார்ந்த விமர்சனங்கள் 1960 ஆம் ஆண்டு காலப்பகுதியில் வைத்து பார்க்கும்போது கூட குறைவதாகத்தான் உள்ளது. நவீன கவிதைகளை வாசிப்பதற்கான அணுகுமுறைகள் உள்ளன.

மொழி மாறுகின்ற போது விமர்சன மொழியும் மாற வேண்டும். நூல் பற்றிய உரைகளை சு. குணேஸ்வரன் சி.ரமேஷ் நிகழ்த்தினர். நூலின் அறிமுகப்பிரதியை கவிஞர் சோ.பத்மநாதன் வழங்கிவைக்க எழுத்தாளர் சட்டநாதன் பெற்றுக் கொண்டார்.

இந்நிகழ்வில் இலக்கிய ஆர்வலர்கள் கவிஞர்கள் எனப்பலர் கலந்துகொண்டனர். (63)

# சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸின் 10 வருட சேவைக்கான விருது

(திருநெல்வேலி)

சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸில 10 வருடங்களுக்கு மேல் சேவை புரிந்தவர்களுக்கு விருதுவழங்கும் நிகழ்வு கடந்த 8 ஆம் திகதி சனிக்கிழமை சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் தேசிய தலைமையகத்தில் நடைபெற்றது.

சென். ஜோன்ஸ் அம்புலன்ஸின் இலங்கைக்கான பிரதம தளபதி டாக்டர் பாலித அபயக்கோன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த 15 அங்கத்தவர்களுக்கான விருதுகளை சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸின் யாழ்மாவட்ட ஆணையாளர் செ.செல்வரஞ்சனிடம் கையளிக்கப்பட்டது.

மேலும் சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் சேவையில் 45 வருட நிறைவை செ.செல்வரஞ்சன் செயதிருப்பது குறிப்பிடத்தக்கது

இந்நிகழ்வில் சென்.ஜோன்ஸ அம்புலன்ஸின் தலைவர் டாக்டா பாலித ரன்தெனியா, ஆணையாளர் பிரசாந் டால்வி அல்விஸ், டாகடர் சரத் சமரக்கோன் பணிபபாளர் பயிற்சியாளர் ஆகியோருடன் மாவட்ட ஆணையாளர் தரத்துக்கு மேற்பட்ட பதவியில் உள்ள அனைவரும் கலந்துகொண்டனர்.

மேலும் யாழ். மாவட்டத்தில் விருது பெறுவதற்கான 15 அங்கத்தவர்களின் பெயர் விபரங்கள் வருமாறு,

டாக்டர் பீ.திருமாறன், ஆர். அசோகன், எஸ்.ஈழநேசன், ஆர்.தவகோபால், கோ.சுப்பிரமணியம் ஏ.ஹென்றி, வீ.சிறிதரன், எஸ்.ஸ்ரீலோகநாதன், எஸ்.சொக்கலோகநாதன், திருமதி. எஸ். வசந்தாதேவி, திருமதி. எஸ். ஜயந்திமதி, திருமதி எஸ்.சின்னத்துரை, திருமதி ஏ.ஆர்.வாசுகி, திருமதி. எஸ். கிஷாந்தி ஆகியோராவார். (137)

# கும்பாபிஷேகம்

(தெல்லிப்பீளை)

தெல்லிப்பளை வீணா கடவை ஸ்ரீ.காசிவிநாயகர் தேவஸ்தான மகாகும்பாபிஷேகம் நாளை புதன் கிழமை நடைபெறவுள்ளது.

இதில் இன்று செவ்வாய்க் கிழமை காலை 7 மணி முதல் மாலை 5 மணிவரை அடியார்களின் எண்ணெய் காப்பு சாத்தும் வைபவம் இடம்பெறவுள்ளது.

# முரசின் இன்றைய பலன்



18.03.2014.செவ்வாய்க்கிழமை

விஜய வருஷம் பங்குனி மாதம் 04 ஆம் திகதி.
மக நட்சத்திரம் மு.ப. 11.21 வரை. பின் பூரம்.
சதுர்த்தசி / அமிர்தசித்தம்.
இராகு காலம் 09.21 - 10.51 வரை. சுபநேரம் 03.21 - 04.51 வரை.

ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

**மேடம்** நிறை குறைந்த உணவுப்பண்டம் விற்றதால் தண்டம், குடும்பத்தில் நிலவிய முரண்பாடு அற்றுப்போய் கவின் நிலை ஏற்படல்.

**ரிஷபம்** முகப்புத்தகம் மூலம் கௌரவக் குறைவு ஏற்படலாம் என துக்கித்தல், மொழிப்பிரச்சினையால் கருத்தினைக் கூறமுடியாது அவதிப்படல்.

**மிதுனம்** நட்டாற்றில் கைவிட்ட நண்பரை எண்ணித் துக்கமடைதல். பெற்றோரின் வற்புறுத்தலால் விவாகஞ் செய்ய முற்படுதல்.

**கடகம்** கால்நடைகளைக் கட்டுப்படுத்தாமையால் பயிரழிவு ஏற்படல், திருட்டுச் செயலில் ஈடுபடல்.

**சிம்மம்** வீதி ஒழுங்கு முறைகளை மீறியதால் தண்டனை. பிதாவின் தேகநலம் சீரடைவதை எண்ணி மகிழ்வேற்படல்.

**கன்னி** வாடகைக்கு குடியமர்ந்தவரை அகற்ற காவல்துறை செல்லல், திருமணத்திற்காக வெளிநாட்டிலிருந்து வருகை தரல்.

**துலாம்** மஞ்சள் கோட்டுக்கடவையிலும் விபத்து ஏற்படும் அபாயம், வறுமை காரணமாக உயர்கல்வியைத் தொடர வழியின்றி சஞ்சலப்படல்.

**விருச்சிகம்** மின் ஒழுக்குபற்றி கவனமெடுத்தால் அபாயம் விலகிப்போதல், வாக்குறுதியை நிறைவேற்றியதால் பதகளிப்பு நீங்கிவிடல்.

**தனுசு** கலாச்சார சீரழிவினை புத்திமதி புகட்டி மீட்டல், புதிய முயற்சியில் ஈடுபட பணஉதவி செய்ய வெயியூர் உறவினர் முன்வருதல்.

**மகரம்** பந்தயங்களில் சாதனையும் பரிசில்களும் கிட்டும், வெளிநாட்டில் கல்வி தொடர வாய்ப்பு.

**கும்பம்** பதிவினை மேற்கொள்ளப் பின்நின்றமையினால் நிலுவை பற்றிய பிரச்சினை ஏற்படல், திருட்டுப் போகலாம்.

**மீனம்** கௌரவப்பதவி கிட்ட பிரமுகர் சிபார்சு செய்தல், நோய் குணமடைய தெய்வதலங்களுக்கு விஜயம் மேற்கொள்ளல்.

ICC WORLD TWENTY20
Bangladesh 2014

## இன்றைய ஆட்டம்

**ஆப்கானிஸ்தான் எதிர் ஹொங்கொங்**
**இடம்: சிட்டாகொங் நேரம் 3.30 மணி**

**நேபாளம் எதிர் ஐக்கிய பங்களாதேஷ்**
**இடம்: சிட்டாகொங் நேரம் : 7.00 மணி**

# சங்கா வழியில் மஹேல



உலகக் கிண்ண ருவெண்ரி-20 தொடரின் பின்னர் சர்வதேச ருவெண்ரி-20 போட்டிகளிலிருந்து ஓய்வுபெறவுள்ளதாக இலங்கை அணியின் முன்னணித் துடுப்பாட்ட வீரர்களான குமார் சங்கக்கார மற்றும் மஹேல ஜெயவர்த்தன ஆகியோர் அறிவித்துள்ளனர்.

இது குறித்து குமார் சங்கக்கார குறிப்பிடுகையில், நிச்சயமாக எந்த சந்தேகமும் இல்லை. இதுதான் எனது கடைசி ருவெண்ரி-20 உலகக் கிண்ணம். இதற்குப் பின்னர் நான் எந்த ஒரு ருவெண்ரி-20 சர்வதேச போட்டிகளிலும் விளையாடப் போவதில்லை.

இது கவலை அளிக்கிறது என்றபோதும் இதுதான் உண்மை. எனினும் இது எனது ருவெண்ரி-20 போட்டிகளின் முடிவு அல்ல. கழக அடிப்படையிலான ருவெண்ரி-20 போட்டியில் தொடர்ந்து விளையாடுவேன். உலகக் கிண்ண எதிர்பார்ப்புகள் முடிந்தவுடன் அடுத்த தலைமுறை வீரர்களுக்கு இடமளிக்க வேண்டும். அதுதான் இயற்கையானது.

இதேவேளை, 2015ஆம் ஆண்டு நடைபெறவுள்ள உலக கோப்பை போட்டியில் களம் இறங்குவதே எனது உடனடி இலக்கு. அதுவரை ஆட்டத்திறன் மற்றும் உடல்தகுதியை தொடர்ந்து தக்க வைத்துக் கொள்வேன் என்று நம்புகிறேன். எனது எதிர்காலம் குறித்து தேர்வாளர்களுடன் பேசுவேன் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

36 வயதான சங்கக்கார இதுவரை 50 ருவெண்ரி-20 போட்டிகளில் விளையாடி 1311 ஓட்டங்களைக் குவித்துள்ளார்.

இதேவேளை, இலங்கை அணியின் நட்சத்திர துடுப்பாட்ட வீரர்களில் ஒருவரான மஹேல ஜெயவர்தன, தான் சர்வதேச ருவெண்ரி-20 போட்டிகளில் இருந்து ஓய்வு பெறுவதாக நேற்று அறிவித்துள்ளார். உலகக் கிண்ண ருவெண்ரி-20 போட்டிகள் நிறைவடைந்ததும் தான் ஓய்வு பெறுவதாக மஹேல ஜெயவர்தன தெரிவித்துள்ளார்.

49 சர்வதேச ருவெண்ரி-20 போட்டிகளில் ஆடியுள்ள மஹேல ஜெயவர்த்தன, கூடுதலான ஓட்டங்களைப் பெற்றவர்களில் இரண்டாமிடத்திலுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. மூன்றுவித சர்வதேச கிரிக்கெட் போட்டிகளிலும் சதமடித்த பெருமையும் மஹேல ஜெயவர்தனவுக்கு உண்டு.

19 ருவெண்ரி-20 போட்டிகளுக்கு தலைமை தாங்கியுள்ள மஹேல ஜெயவர்த்தன இலங்கை அணியின் முதலாவது ருவெண்ரி-20 அணிக் கப்டன் என்ற பெருமைமையும் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, சர்வதேச ருவெண்ரி- 20 போட்டிகளில் இருந்து ஓய்வுபெறுவது குறித்து சங்கக்கார இதுவரை உத்தியோகபூர்வமாக எமக்கு அறிவிக்கவில்லை என இலங்கை கிரிக்கெட் சபை வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நேபாளம் அசத்தல் வெற்றி



(சிட்டகொங்)

ஹொங்கொங் அணிக்கு எதிரான ருவெண்ரி-20 உலக கோப்பை தகுதிச் சுற்றில், நேபாள அணி 80 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அசத்தல் வெற்றி பெற்றது.

பங்களாதேஷில், 5ஆவது ருவெண்ரி-20 உலக கோப்பை தொடர் நடைபெற்று வருகின்றது. சிட்டகொங்கில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஏ பிரிவு சூப்பர்-10 தகுதிச் சுற்றுப் போட்டியில், நேபாளம், ஹொங்கொங் அணிகள் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய நேபாள அணி 20 ஓவர்கள் நிறைவில் எட்டு விக்கெட்டுக்களை இழந்து 149 ஓட்டங்களைப் பெற்றது. இதில் சுபாஷ் காகுரல் 22, சாகர் புன் 13, பரஸ் 41, மல்லா 48 ஓட்டங்களைப் பெற்றனர்.

பதிலுக்கு 150 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய ஹொங்கொங் அணி 17 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 69 ஓட்டங்களுக்குள் சுருண்டது. இதில் பாபர் ஹயாத் 20, மார்க் காப்மன் 13, வக்காஸ் பர்கத் 18 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் சக்தி சவுசன் மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

# சிம்பாப்வேயை வீழ்த்தியது அயர்லாந்து

(சில்ஹெறாட்)

சிம்பாப்வே அணிக்கெதிரான தகுதிச் சுற்றுப் போட்டியில் அயர்லாந்து அணி மூன்று விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது.

நேற்று சில்ஹெறாட்டில் நடைபெற்ற பி பிரிவுக்கான சூப்பர்-10 தகுதிச் சுற்றுப் போட்டியில் அயர்லாந்து, சிம்பாப்வே அணிகள் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற அயர்லாந்து அணி முதலில் களத் தடுப்பைத் தீர்மானித்தது. இதற்கமைய முதலில் ஆடிய சிம்பாப்வே அணி ரெய்லரின் சிறப்பான துடுப்பாட்டத்தின் மூலம் வலுவான ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றது. இறுதியில் சிம்பாப்வே அணி 20 ஓவர்கள் நிறைவில் ஐந்து விக்கெட்டுக்களை இழந்து 163 ஓட்டங்களைப் பெற்றது. இதில் பி. ரெய்லர் 46 பந்துகளை எதிர்கொண்டு ஆறு பவுண்டரிகள், இரண்டு சிக்ஸர்கள் அடங்கலாக 59, சிக்கும்புறா 21 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் டோக்ரீல், பிரைன் ஆகியோர் தலா இரு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 164 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய அயர்லாந்து அணி 20 ஓவர்கள் நிறைவில் ஏழு விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் போல் ஸ்ரிலிங் 34 பந்துகளை எதிர்கொண்டு 9 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் அடங்கலாக 60, வில்லியம் பேர்ற் பீல்ட் 31 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் பன்யான்கர நான்கு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். போட்டியின் ஆட்டநாயகனாக போல் ஸ்ரிலிங் தெரிவு செய்யப்பட்டார்.

## பயிற்சிப் போட்டியில் பாக். வெற்றி

நியூசிலாந்து அணிக்கெதிரான பயிற்சிப் போட்டியில் பாகிஸ்தான் அணி ஆறு விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது. உலகக் கிண்ண ருவெண்ரி-20 தொடரின் பயிற்சி ஆட்டமொன்று நேற்று டாக்காவில் நடைபெற்றது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய நியூசிலாந்து அணி 20 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்டுக்களை இழந்து 145 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்கு ஆடிய பாகிஸ்தான் அணி 19.5 ஓவர்கள் நிறைவில் 4 விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது.

# பரிபாஸ் ஓப்பன் ரென்னிஸ் ஜோகோவிச் சம்பியன்



(இந்தியன் வேல்ஸ்)

பரிபாஸ் ஓப்பன் ரென்னிஸ் ஒற்றையர் பிரிவில், சேர்பியாவின் ஜோகோவிச் சம்பியன் பட்டம் வென்றார்.

அமெரிக்காவில் உள்ள இந்தியன் வேல்ஸ் நகரில், பரிபாஸ் ஓப்பன் ரென்னிஸ் தொடர் நடைபெற்றது. ஆண்கள் ஒற்றையர் பிரிவு இறுதிப் போட்டியில், சுவிஸின் ரோஜர் பெடரர், சேர்பியாவின் ஜோகோவிச் மோதினர். முதல் செட்டை பெடரர் 6-3 எனக் கைப்பற்றினார். பின் எழுச்சி கண்ட ஜோகோவிச், இரண்டாவது செட்டை 6-3 என தன்வசப்படுத்தி பதிலடி கொடுத்தார். வெற்றியாளரை நிர்ணயிக்கும் மூன்றாவது செட் டைபிரேக்கர் வரை சென்றது. இதில் அபாரமாக ஆடிய ஜோகோவிச் 7-6 என வென்றார். முடிவில் சேர்பியாவின் ஜோகோவிச் 3-6, 6-3, 7-6 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்று, மூன்றாவது முறையாக சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றினார். முன்னதாக 2008, 2011ஆண்டுகளில் கிண்ணம் வென்றமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, பெண்கள் ஒற்றையர் பிரிவு இறுதிப் போட்டியில், இத்தாலியின் பிளவியா பெனிட்டா, போலந்தின் அக்னிஸ்கா ரத்வான்காவை எதிர்கொண்டார். அபாரமாக ஆடிய பிளவியா பெனிட்டா 6-2, 6-1 என்ற நேர் செட் கணக்கில் வெற்றி பெற்று, முதன்முறையாக சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றினார்.

# ஹோலி சம்பியன் வீரர்

(லாகூர்)

துடுப்பாட்டத்தில் பல நுணுக்கங்களை வெளிப்படுத்தி வரும் ஹோலி சர்வதேச கிரிக்கெட் சபை சாதனைகளை ஏற்படுத்த அதிக வாய்ப்பிருக்கின்றது. அவர் இன்று உலகின் சம்பியன் வீரராகத் திகழ்கின்றார் என பாகிஸ்தான் அணியின் முன்னாள் துடுப்பாட்ட வீரர் ஜாகீர் அப்பாஸ் தெரிவித்துள்ளார்.

சர்வதேச கிரிக்கெட்டில் அனைத்து சாதனைகளையும் முறியடிக்க கூடிய ஒரே துடுப்பாட்ட வீரராக ஹோலி உள்ளார். இந்திய துடுப்பாட்ட வரிசையில் முன்னணி வீரராக திகழும் அவரது ஆட்டம் மிகவும் சிறப்புடன் காணப்படுகிறது. அவரால் எல்லாச் சாதனைகளையும் முறியடிக்க முடியும்.

பாகிஸ்தானிலும் திறமை வாய்ந்த துடுப்பாட்ட வீரர்கள் உள்ளனர். ஆனால் அவர்களை உருவாக்கி செயற்படுத்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இளம் வீரரான அகமது ஷேசாத் திறமை வாய்ந்த துடுப்பாட்ட வீரர். இனிவரும் கால கட்டங்களில் சிறந்த வீரரான அவர் முதிர்ச்சியடைவார்.

ருவெண்ரி- 20 உலக கோப்பைக்கு டோனி திரும்பி இருப்பதால் இந்திய அணி பலம் பெற்றுள்ளது. பாகிஸ்தான் அணி இந்தியாவை எதிர்கொள்ள எல்லா வகையிலும் தயாராக இருக்கிறது. ஆசிய கோப்பையில் இந்தியாவை வீழ்த்தி இருந்தால் பாகிஸ்தான் அணி நம்பிக்கையுடன் உள்ளது. ருவெண்ரி-20 போட்டித் தொடர் சவால் நிறைந்ததாக இருக்கும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# பாடசாலைகளுக்கிடையிலான மெய்வல்லுநர் போட்டி




வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி 01



சுன்னாகம் மயிலணி சைவ மகாவித்தியாலயம் 54




சாவகச்சேரி மேற்கு நுணாவில் அ.த.க. பாடசாலை 11



அல்வாய் அம்பாள் வித்தியாலயம்






சென். ஜோண்ஸ் கல்லூரி ஆரம்பப் பிரிவு 20




நெடுங்கேணி பட்டிக்குடியிருப்பு அ.த.க பாடசாலை





அளவெட்டி அருணோதயக் கல்லூரி 93

# யார் துரோகிகள்?



(மருத்துவர் மகேஸ்வரன் உமாகாந் எழுதிய 'ஈழத்தின் வலி' புத்தகத்தில் உள்ள கட்டுரையிலிருந்து.)

கடந்த 60 வருடங்களுக்கு மேலாக தமிழ் மக்கள் அரசியல் ரீதியாகவும், ஆயுத ரீதியாகவும் உரிமையைக் கேட்டனர். இதே காலங்களில் தமிழர் மத்தியில் பயன்படுத்தப்பட்டு வந்த சொற்பதமே "துரோகி" என்பதாகும்.

தமிழனின் தனிச்சிறப்பே மற்றவனின் உயர்வில் பொறாமைப் படுவதும், தனது பதவிக்காக மற்றவர்களை காட்டிக்கொடுக்கும் தன்மையும், தருணம் பார்த்து காலை வாரிவிடும் குணமும் ஆகும். இவற்றின் வெளிப்பாடே மற்றவர்களைத் துரோகி என ஒரு வசனத்தில் இழிவு படுத்துவதுமாகும்.

எஸ்.ஜே.வி.செல்வநாயகம், ஜி.ஜி.பொன்னம்பலம், அமிர்தலிங்கம் காலத்தில் நாம் எமக்கு எதிரானவர்களை அரசியல் துரோகிகள் என்றும், புல்லுருவிகள் என்றும் கூறி தமிழ் மக்களிடையே துரோகிகள் கலாசாரத்தை வளர்த்து விட்டோம். பின்னர் ஆயுதப் போராட்டம் ஆரம்பித்த வேளையில், தமிழ் ஆயுதக் குழுக்களிடையே மோதல்கள் உருவானது. ஈழம் என்ற கொள்கையுடன் உருவாக்கப்பட்ட அனைத்து இயக்கங்களையும் துரோகிகள் சுடப்பட்டனர் என்று பொது மேடைகளில் கூறுமளவிற்கு எமது கலாசாரம் வளர்ந்தது.

1986ஆம் ஆண்டு யாழ். கல்வியங்காட்டுப் பகுதியில் வைத்து தமிழீழ விடுதலை இயக்க (ரெலோ) உறுப்பினர்கள் பலர் விடுதலைப்புலிகளால் ஈவிரக்கமின்றி கொல்லப்பட்ட பின்னர் பொது மேடைகளில் துராகிகள் அழிக்கப்பட்டனர் எனக் கூறினர். இதில், தமிழீழக் கொள்கைக்காக போராடச் சென்ற இளைஞர்கள் துரோகிகளா...?

ஆயுதப் போராட்டத்தின் உச்சத்தில் அதனை வளர்த்த தமிழ் அரசியல் கட்சி உறுப்பினர்கள் துரோகிகள் ஆக்கப்பட்டனர். பின்னர் போராட்டம் சற்று திரிபடைந்து, போராட்டக் குழுக்களிடம் நியாயமான கேள்வி கேட்டவர்கள் துரோகிகளாக்கப்பட்டனர். பின்னர் விடுதலை இயக்கங்களுக்கு நிதி உதவி செய்ய மறுத்தவர்கள் துரோகிகள் ஆக்கப்பட்டு சுடப்பட்டதும் உண்டு. மேலும், போராட்டக் குழுக்கள் பற்றி விமர்சனங்கள் எழுதியவர்கள் துரோகிகள் ஆக்கப்பட்டு சுட்டுக் கொல்லப்பட்டனர்.

1989ஆம் ஆண்டு யாழ். மருத்துவ பீடத்தில் உடற்கூற்றியல் விரிவுரையாளரான ராஜினி திரணகம விடுதலைப் புலிகளால் சுட்டுக் கொல்லப்பட்ட பின்னர் மருத்துவ பீடத்திலிருந்து களையைப் பிடுங்கி விட்டோம் எனக் கூறிய வேளை, படித்த புத்திஜீவிகள் வாய் திறவாதிருந்தனர். இதில் வாய் திறவாதிருந்த யாழ்.புத்திஜீவிகள் துரோகிகளா? அல்லது, யாழ்.மருத்துவ பீட வளர்ச்சிக்காக மருத்துவ பீடத்தில் தன்னை இணைத்து கொண்ட விரிவுரையாளர் துரோகியா? அல்லது சுட்டவர்கள் துரோகியா?

ஆயுதக் கலாசார காலத்தில் இலங்கை இராணுவத்துடன் கதைத்தவர்கள், இராணுவத்துடன் தொடர்பு வைத்திருந்தவர்கள் அனைவரும் துரோகிகளாக பார்க்கப்பட்டு, மின் கம்பங்களில் கட்டி மரண தண்டனை விதிக்கப்பட்டது.

முஸ்லிம் போராளிகள் துரோகிகளாகப் பார்க்கப்பட்டு இயக்கத்திலிருந்து விலக்கப் பட்டனர். விடுதலைப்புலிகள் இயக்கத்திலிருந்து கருணா அம்மான் பிரிந்த வேளை, அவர் துரோகியாக பார்க்கப்பட்டார்.

பின்னர், இறுதிச் சமர் காலங்களில் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியிலிருந்து இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு வந்த மக்கள் துரோகிகளாக பார்க்கப்பட்டனர். தப்பியோட முயன்ற பொது மக்கள் பலர் புலிகளால் சிறைப்பிடிக்கப்பட்டு புலிகளின் சிறைகளில் போடப்பட்டனர். இதில் ஒரு மருத்துவரும் அடங்குவார். மேலும் இறுதிக் காலங்களில் புலிகள் இயக்கத்திலிருந்து விலகியவர்கள் துரோகிகளாக்கப்பட்டு சுடப்பட்டனர்.

புலிகளுக்கு பிள்ளைகளை கொடுக்க மறுத்த குடும்பங்கள் துரோகிகள் கூட்டமென்று விமர்சிக்கப்பட்டன. பின்னர் பிள்ளைகளை பலாத்காரமாக பெற்றோர் முன்னிலையில் இழுத்துச் சென்ற போது அதனைத் தடுக்க முற்பட்ட பெற்றோரை துரோகத்தனம் செய்ய வேண்டாம் என்று கூறினர்.

இதன் பின்னர், கிட்டத்தட்ட 11ஆயிரம் விடுதலைப்புலிகள் இராணுவத்தினரிடம் சரணடைந்த பின்னர், அவர்களில் சிலரால் புலிகளுக்கு உணவு வழங்கியவர்கள், உறைவிடம் வழங்கியவர்கள், பல்வேறு விதங்களில் உதவி செய்தவர்கள் என்று பல தமிழ் மக்கள் காட்டிக் கொடுக்கப்பட்டுக் கொண்டே இருக்கின்றார்கள்.

இப்போது யார் துரோகிகள்..?

நாம் துரோகிகள் என்ற பதத்தை எங்கு, எதற்கு பாவிக்கின்றோம் எனத் தெரியாமல் பாவிக்கத் தொடங்கியுள்ளோம். தமிழன் தலை நிமிர வேண்டும் என்றால்,"துரோகி" "எதிரி" என்ற பதங்களை அகராதியிலிருந்து அகற்ற வேண்டு[ம்]. இன்று நாம் துரோகிகள் என்ற சொல்லின் மூலம் எத்தனையோ தமிழ் இளைஞர்களை, புத்திஜீவிகளை இழந்துள்ளோம்.

இதற்கு யார் காரணம் என கூடியிருந்து கதைத்தால் இறுதியில் எமக்கு கிடைப்பது, இனவாதம், பிரதேசவாதம், தலைமை மோகம் அத்துடன் சாதிபேதம். மீண்டும் இவற்றை வளர்த்தால் எமக்கு கிடைப்பது யுத்தமும் அழிவும் தான்.

# "நான் சினிமாவே பார்க்கிறதில்லை!" கவுண்டமணியின் அடேங்கப்பா பேட்டி

- ம.கா.செந்தில்குமார் -

"பேட்டி" என்றாலே விலகிச்செல்லும் அல்லது விரட்டிவிடும் நம்ம கவுண்டரேதான். "ஒரு ஃப்ரெண்டா வா... ரசிகனா வா... எவ்வளவு நேரம் வேணும்னாலும் எது வேணும்னாலும் பேசலாம். ஆனா, பத்திரிகைக்காரனா வராத!" என்று அன்பாக அதட்டும் அதே கவுண்டமணி. "இதுக்குத்தான் ஊருக்குள்ள ஒரு ஆல் இன் ஆல் அழகுராஜா வேணும்கிறது" முதல் "அரசியல்ல இதெல்லாம் சாதாரணமப்பா" வரை சாகாவரம் பெற்ற பன்ச்களின் நாயகன் இதோ என் முன் அமர்ந்திருக்கிறார்.


பல மாதத் துரத்தல், வற்புறுத்தல், ஏகப்பட்ட உரையாடல்களுக்குப் பிறகு நிகழ்ந்த பேட்டி இது. அரியலூர் அருகே "49ஓ" படத்தின் படப்பிடிப்பு இடைவேளைகளில் கவுண்டமணியிடம் பேசியது அப்படியே இங்கே...

"தம்பி... பேட்டினு உக்காந்துட்டேன். ஆனா, நீ பாட்டுக்குக் கேள்வி கேட்டுட்டே இருந்தா எனக்குப் பிடிக்காது. நானா மனசுல தோணுறதைச் சொல்றேன். நீ குறிச்சுக்க. அதுல குறுக்குக் கேள்விலாம் கேட்டா, நான் எனி செகண்டு எந்திரிச்சுப் போயிடுவேன் ஓ.கே-வா!" - அவரின் அதே அக்மார்க் அதட்டல்! "ரொம்ப வருஷம் கழிச்சு நடிக்கிறீங்க. இந்தக் கதையை எப்படி..." (கேள்வியை முடிக்கவிடாமல்)

"பார்த்தியா... பத்திரிகைகாரன் வேலையைக் காட்டுற. ரொம்ப வருஷம் கழிச்சுலாம் இல்லைப்பா. ரெண்டு, மூணு வருஷம் இருக்கும். அவ்ளோதான்! இது ஒரு சின்ன கேப். இதுக்கே, "நீண்ட இடைவெளிக்குப் பிறகு"னு நீட்டி முழக்கி பில்ட்-அப் குடுத்துருவீங்களே! ஏதோ 14 வருஷம் ராமர் வனவாசம் போன மாதிரி ஃபீல் பண்ணாதீங்க.

2010இல "ஜக்குபாய்", "பொள்ளாச்சி மாப்ள"னு நான் நடிச்ச புடங்கள் ரிலீஸ் ஆச்சு. இப்போ "49ஓ"ல நடிக்கிறேன். ஒரு நடிகன்னு இருந்தா நடுவுல திடீர்னு கொஞ்சம் கேப் விடுவான். பிறகு, சரசரனு நடிப்பான். அவ்வளவுதான். இதை ஏதோ உலக கின்னஸ் சாதனை கணக்கா விளக்கம் கேட்டுக்கிட்டு இருக்கிறதா? கொஞ்சம் வெயிட் பண்ணு... நான் ஒரு ஷாட் நடிச்சுட்டு வர்றேன்" என்று எழுந்து செல்கிறார்.

தான் தேர்தலில் நிற்கவைக்கும் சுயேட்சை வேட்பாளருக்காக சங்கு சின்னத்தில் கவுண்டமணி ஆதரவு திரட்டுவது போன்ற காட்சி. அப்போது குவியும் பத்திரிகையாளர்களிடம் சரமாரியாகப் பேட்டி அளிக்கிறார் கவுண்டர். அந்தக் காட்சி நான்கைந்து டேக்குகள் கடக்க, வேடிக்கை பார்க்கும் கூட்டத்தைப் பார்த்து, "பார்த்தீங்களா... இப்படித்தான் ஒரே சீனை நாள் பூரா எடுத்துட்டு இருப்போம். இப்பவே பார்த்துப் போரடிச்சுட்டா, அப்புறம் படம் பார்க்க வர மாட்டீங்க. கிளம்புங்க... கிளம்புங்க" என்று கவுண்டமணி செல்லமாக அதட்ட, "அட... சினிமால இதெல்லாம் சாதாரணமப்பா" என்று "கவுண்டர்" கொடுக்கிறது கூட்டம்.



கவுண்டமணி



"ஏ ஆத்தி... எமகாதப் பயலுகளா இருக்கானுங்கப்பு!" என்று சிரித்துக் கொள்கிறார் கவுண்டமணி.

"நீங்க ஹீரோ மாதிரி படம் முழுக்க வருவீங்களா?"

"மாதிரி என்ன மாதிரி... ஹீரோவே நான்தான்! ஆனா, தொடர்ந்து இப்படியே நடிப்பேன்னு சொல்ல முடியாது. இந்தப் படத்தோட கதைக்கு நான் ஹீரோ. அவ்வளவுதான்!"

"ஒருத்தருக்குப் பட்டப் பேர் வெச்சுக் கலாய்ச்சு காமெடி பண்ணி, கிண்டல் அடிக்கிற உங்க ஸ்டைலைத்தான் இப்போ எல்லாருமே காப்பி அடிக்கிறாங்க!"

"பண்ணிட்டுப் போகட்டுமே! "நான் மட்டும்தான் மத்தவங்களைக் கிண்டல் அடிப்பேன்"னு உரிமை வாங்கி வெச்சிருக்கேனா என்ன? எல்லாரும் எல்லாரையும் கலாய்க்கட்டும்!"

"ஜூனியர் கவுண்டர்"னு பேர் வாங்கிட்டார் சந்தானம். "கவுண்டரைச் சந்திப்பது உண்டு"னு அவர் பேட்டிகள்ல சொல்லிட்டு வர்றார்!"

"உண்டுனு சொன்னார்னா உண்டுனு போட்டுக்கங்க. அவர் என்ன பொய்யா சொல்லப்போறார்?"

"வடிவேலு, சந்தானத்தைச் சந்திச்சா என்ன பேசிப்பீங்க?"

"எல்லா நடிகர்களுமே நமக்கு ஃப்ரெண்டுதான். அதனால அப்பப்ப எப்பயாச்சும் போன்ல பேசிப்போம். அதுல விசேஷமா சொல்ல என்ன இருக்கு?"

"எண்பதுகளில் மணிவண்ணன், சத்யராஜ், ஆர். சுந்தர்ராஜன்னு ஒரு டீம்ல வேலை பார்த்ததுக்கும், இப்போ இளைய தலைமுறை இயக்குநர்களோட வேலை பார்க்கிறதுக்கும் என்ன வித்தியாசம்?"

"எல்லாமே சினிமாதானே. எல்லா படத்தையும் தியேட்டர்லதானே போடுறாங்க. அப்புறம் என்ன வித்தியாசம் இருந்துடப்போகுது!"

"சமீபத்துல பார்த்ததுல என்ன படம்லாம் பிடிச்சது?"

"உண்மையைச் சொல்றேனே... தமிழ், இந்தி, மலையாளம், கன்னடம்னு எந்த இந்திய மொழிப் படங்களையும் பார்க்கிறதே இல்லை. படம் பார்க்கணும்னு நினைச்சா ஹாலிவுட் படங்கள்தான் பார்ப்பேன்!"

"தமிழ் படங்களைக்கூட பார்க்காம இருக்க என்ன காரணம்?"

"நான் ஏன் பார்க்கணும்னு நீங்க காரணம் சொல்லுங்க. நான் ஏன் பார்க்கிறதில்லைனு அப்புறம் பதில் சொல்றேன்!"


"நீங்க நடிச்ச படங்களைக்கூட பார்க்க மாட்டீங்களா?"

"பார்க்க மாட்டேன்! நாம பேட்டி கொடுத்தாலும் கொடுக்காட்டியும் நம்ம படங்கள் டி.வி-ல ஓடுது. காமெடி சேனல்லயும் அதுதான் ஓடுது. அதைத் தாண்டி நான் பேட்டில என்னத்தைச் சொல்லிடப்போறேன். ஒரு நடிகர் சும்மா இருக்கார்னா சும்மா இருக்கார்னு எழுதிடுவீங்க. நடிக்கிறார்னா நடிக்கிறார்னு எழுதிடுவீங்க. இப்படி நீங்களே எல்லாத்தையும் எழுதின பிறகு, தனியா நான் எதுக்குப் பேசணும்? இப்பவே ரொம்ப பேசிட்டேன்னு நினைக்கிறேன். போதும்!"

(நன்றி: ஆனந்தவிகடன்)

# பாம்புதாராவும் பறவை பார்த்தலும்

– அதிஷா –




க்ரியா பதிப்பகத்தின் நூல்கள் எல்லாமே வாசிக்க இன்பமாக இருக்கிறதோ இல்லையோ, அதன் வடிவ நேர்த்திக்காகவே ஒன்று வாங்கி வீட்டில் வைத்துக்கொள்ள தூண்டுகிறவை, ஜனவரி புத்தகக் காட்சியில் அப்படி அதன் புத்தக வடிவமைப்பின் அழகில் மயங்கி வாங்கிய நூல் "பறவைகள் - அறிமுக கையேடு" என்கிற நூல். செல்போன் சைஸில் குட்டியா கைக்கடக்கமாக இருக்கிற இந்நூல் முழுக்க வண்ண அச்சில் வந்திருப்பது.

ORNITHOLOGY என்கிற பறவையியல் குறித்த நூல் இது. தமிழகத்தில் வாழும் எண்ணற்ற பறவைகள் பற்றிய எளிய குறிப்புகள். நமக்கு குட்டியாய் இருப்பதெல்லாம் குருவி, கறுப்பாக இருப்பதெல்லாம் குயில், வெள்ளையாய் இருந்தால் கொக்கு, வேகமாக பறந்தால் புறா, பெரிதாக இருந்தால் கழுகு என பறவைகள் குறித்த பார்வை எப்போதுமே மங்கல்தான்! ஆனால் நம்மை சுற்றி எவ்வளவு குட்டி குட்டி பறவைகள் வித விதமான உடலமைப்புகளோடு வித்தியாசமான குணாதிசியங்களோடு வாழ்கின்றன என்பதையெல்லாம் இந்நூலின் மூலம் [illegible]ந்துகொள்ள முடிகிறது.

புறாவிலேயே மணிப்புறா, மாடப்புறா, பஞ்சவர்ணப்புறா என எவ்வளவு வகைகள்! பருந்துகளில் குருவிகளில் எவ்வளவு வகைகள். கொக்குக்கும் நாரைக்கும் எத்தனை வேறுபாடு. பறவைகளுக்கு எவ்வளவு வித்தியாசமான பெயர்கள். மஞ்சள் திருடி என்கிற கழுகு, கரண்டிவாயன் என்கிற நாரை தைலாங்குருவி, தையல்சிட்டு என்பதுமாதிரி இன்னும் நிறைய நிறைய பறவைகள். இந்த பறவைகளுக்கே உரிய பிரத்யேகமான குணாதிசயங்களும் அவை வாழுமிடங்கள் உண்ணும் உணவுகள் முதலான தகவல்களும் உண்டு. 88 பறவைகள் பற்றிய விளக்கங்களும் 166 வண்ணப்படங்களும் கொண்ட இந்நூல் பறவைகள் குறித்து தெரிந்து கொள்ள விரும்புபவர்களுக்கு ஒரு பொக்கிஷம். மிக எளிய மொழியில் அறிவியல் சார்ந்த விஷயங்களை எழுதியுள்ளனர் ஆசையும் ப.ஜெகந்நாதனும்.

பறவைபார்த்தல் (BIRD WATCHING) [illegible]டி செய்யவேண்டும், குரலை வைத்து, இறகை வைத்து, கூடுகளை வைத்து பறவைகளின் வகைமையை அறிதலும், பறவை பார்க்க செல்லும்போது செய்ய வேண்டியவை என புதிதாக பறவைபார்த்தலுக்கு தயாராகிறவர்களுக்கான தகவல்களும் நூலில் உண்டு.

வாசித்து முடித்ததும், சரி நாமும் பறவை பார்க்க களமிறங்குவோம் என்று வீட்டுக்கு பக்கத்தில் இருக்கிற ஏரி ஒன்றை தேர்ந்தெடுத்து அங்கே கண்ணில் படுகிற பறவைகளை குறித்து வைத்துக்கொண்டேன். பிறகு இந்நூலை ஒரு கைடாக பயன்படுத்தி அது என்ன பறவை என்று தேட ஆரம்பித்தேன்"

நான் பார்த்த ஒரு பறவையின் பெயர் மடையான் (INDIAN POND HERON) என்று போட்டிருந்தது. அதுதானா என்பதை உறுதிப்படுத்திக்கொள்ள அதன் உடலமைப்பு இறகு, அலகு என சரிபார்த்துக்கொண்டேன் (அப்படித்தான் சரிபார்க்க வேண்டும் என்று இந்த நூலிலேயே போட்டிருக்கிறது). அதற்குப்பிறகு சாம்பல் நிறத்தில் நீண்ட கழுத்துள்ள ஒரு பறவையை கண்டேன். அது பெரிய நீர்க்காகம் என்று நானாக நினைத்துக்கொண்டேன். ஆனால் பெரிய நீர்காகத்தின் அலகு அமைப்பு அதற்கு இல்லை. நீர்க்காகத்தின் அலகு வாத்தின் அலகினைப்போல தட்டையாக இருக்கும். ஆனால் இதற்கு கூரான அலகுகள்.


அது பாம்புதாரா (ORIENTAL DARTER) என்கிற பறவை என்று நூலில் போட்டிருந்தது. அதற்குப் பிறகு இத்தனை நாளும் கொக்கு என்று நினைத்துக்கொண்டிருந்த பறவைக்கு "உண்ணி கொக்கு" என்பதே சரியான பெயர் என்பதை அறிந்துகொள்ள முடிந்தது.

இயற்கை குறித்து பறவைகள் பற்றி சூழலியல் தொடர்பாக குழந்தைகளுக்கு அறிமுகப்படுத்தி வைக்க நினைக்கிறவர்கள் இந்த நூலை வாங்கி பரிசளிக்கலாம். பறவை பார்த்தலில் ஆர்வமுள்ளவர்களும் கட்டாயம் வாங்கி வாசிக்கலாம். வாசிப்பதோடு நிற்காமல் கையில் ஒரு கமெரா அல்லது பைனாகுலரோடு களமிறங்கி பறவைகளை தேட ஆரம்பித்தால் நாம் கூட இயற்கையின் ஓர் அங்கம்தான் என்பதை உணரலாம்.



# இளவரசியின் நெக்லஸ்!

பிரித்தானிய இளவரசர் வில்லியமின் மனைவி, கேத் வில்லியம், குழந்தை பிறந்த பின், மீண்டும் பொது நிகழ்ச்சிகளில் பங்கேற்று வருகிறார். சமீபத்தில் லண்டனில் நடந்த நிகழ்ச்சியில், அவர் கலந்து கொண்டார். அந்த விழாவுக்கு வந்திருந்த ஒட்டு மொத்த, வி.ஐ.பி. களின் கண்களும், கேத் வில்லியமின் கழுத்தையே, வைத்த கண் வாங்காமல் பார்த்தன. அவர் அணிந்திருந்த வைர நெக்லஸ், விழா அரங்கில் இருந்த விளக்குகளின் வெளிச்சத்தையும் மீறி, ஜொலி ஜொலித்தது தான் அதற்கு காரணம். இந்த நெக்லஸ், இந்தியாவில் ஹைதராபாத் சமஸ்தானத்தை ஆண்ட நிஜாமுக்கு சொந்தமானது. பிரித்தானிய மகாராணி எலிசபெத்தின் திருமணத்துக்கு, இந்த வைர நெக்லசை பரிசளித்தாராம் நிஜாம். இந்த நிகழ்ச்சியில் பங்கேற்பதற்காக, இளவரசர் வில்லியமின் பாட்டியும், பிரித்தானிய ராணியுமான எலிசபெத்திடம், இந்த நெக்லசை இரவல் வாங்கி அணிந்து வந்திருந்தார் கேத் வில்லியம்.



# சொத்தும்... சொர்க்கமும்...

சீக்கிய மதத்தின் நிறுவனரும் முதல் குருவுமாகிய குரு நானக் அவர்கள் ஒரு பெரும் பணக்காரரிடம் ஒரு ஊசியைத் தந்து, "இதை நான் கேட்கும்போது திருப்பித் தர வேண்டும்" என்றார். கூறிய பிறகு சென்றுவிட்டார். பணக்காரரின் மனைவி "குருநானக் பெரியவர். வயதானவர். அவர் தந்த ஊசியை அவரிடமே கொடுத்து விடுங்கள்" என்று கூறினார். சிரமப்பட்டு, குருநானக்கைக் கண்டுபிடித்து "நல்ல வேளை, ஊசியை உங்களிடம் கொடுத்து விட்டேன். இல்லாவிட்டால் இறந்த பிறகு சொர்க்கத்தில் கொண்டு வந்து தரமுடியுமா" என்று சொல்லியிருக்கிறார் பணக்காரர். அதற்கு குருநானக், "இந்தச் சின்ன ஊசியையே உன்னால் சொர்க்கத்திற்கு எடுத்து வர முடியாது என்றால், இவ்வளவு சொத்துக்களையும் எப்படி எடுத்து வருவாய்?" என்று கேட்டாராம். செல்வந்தருக்குப் புரிந்துவிட்டது. கஞ்சத்தனத்தைவிட்டு விட்டு, தான தர்மங்கள் செய்ய ஆரம்பித்து விட்டார்!.

# நமது இன்னல்களைப் பிறர் தவறாகப் பாவிக்க உதவுவது முட்டாள்த்தனம்

– கோகர்ணன் கட்டுரையிலிருந்து.

அமெரிக்கா, கிருஷ்ண பரமாத்மா தன்னைப் பற்றிச் சொன்னதுபோல, தர்மம் நலிந்து அதர்மம் தழைத்தோங்கும் போது தர்மத்தை நிலைநாட்ட யுகந்தோறும் மீள மீளத் தோன்றுகிற ஒரு சக்தியின் நவீன வடிவமல்ல என்று நமக்கு இப்போதைக்காவது விளங்கியிருக்கும்.

இன்றைய அமெரிக்கா, அதாவது இரண்டாம் உலகப்போருக்குப் பின்பான அமெரிக்கா எங்காவது தர்மம் தலைதூக்கும் வாய்ப்பு இருந்தால் அதைத் தன் முள்ளுச் சப்பாத்தால் மிதித்து அழிக்க ஆயத்தமாயுள்ள ஒரு பிசாசின் அவதாரமாகவே தெரிகிறது.


எனவேதான், அமெரிக்கா உண்மையிலேயே தமிழருக்குச் சார்பாக நிற்கிறதென்றால், [illegible]மிழர் மிக மோசமான ஒரு சமூகமாக இருக்கும் வாய்ப்பு அதிகம்.

தமிழ் மக்களை அமெரிக்காவுக்குப் பின்னால் அலையத் தூண்டும் மேய்ப்பர்கள் எல்லோருக்கும் விளங்க வேண்டிய உண்மைகள் சிலதுண்டு.

இலங்கை, அமெரிக்காவுக்குக் கேந்திர முக்கியமான ஒரு தீவு. தனது நோக்கங்கட்கு இசைவான ஒரு ஆட்சி இலங்கையில் இருப்பதை அது விரும்புகிறது.

எனவே, அதன் தெரிவு தமிழருக்கும் சிங்களவருக்குமிடையிலானதாக இருக்கும் என்றால், அது யார் தரப்பில் நிற்கும் என்று நமக்கு விளங்கவேண்டும்.

அமெரிக்கா இலங்கையில் அதிகம் விரும்பக்கூடிய ஆட்சி மகிந்த ராஜபக்ஷ ஆட்சி




அல்ல என்று ஊகிப்பது கடினமல்ல. எனவே, ராஜபக்ஷ ஆட்சியைக் கவிழ்க்க அது உள்ளூர விரும்பலாம்.

எந்த ஆட்சிக் கவிழ்ப்பு முயற்சிக்கேனும் அமெரிக்கா ஆதரவு தெரிவித்தால், அந்த ஆட்சியின் இடத்தில் வரப்போவது நல்லாட்சியாயிருக்கும் என்று எதிர்பார்ப்பவர்களிடம் அரசியல் விவேகத்தை எதிர்பார்க்க இயலாது.

சீனாவை விட முக்கியமாக இலங்கை அரசாங்கத்தைப் பாதுகாக்கும் அக்கறை இந்தியாவுக்கு உண்டு. ஏனெனில், இலங்கை மீதான

அமெரிக்க ஆதிக்கம் இந்தியாவின் பிராந்திய மேலாதிக்க நோக்கங்கட்குத் தடையாயிருக்கும்.

இலங்கையில் ஒரு இராணுவத் தளத்தை நிறுவும் வாய்ப்போ இலங்கையை வேறுவகையில் தனது இராணுவ நோக்கங்கட்காக இந்தியாவுக்கு எதிராகப் பாவிக்கும் வாய்ப்போ சீனாவுக்கு இப்போதைக்கு இல்லை என இந்தியா அறியும்.

இலங்கையில் ஏற்படக்கூடிய எந்த ஆட்சி மாற்றமும் இந்தியாவுக்கு அதிகம் உடன்பாடான ஒரு அரசாங்கத்தைக் கொண்டு வரும் வாய்ப்பில்லை என இந்தியா அறியும்.

எனவே இலங்கை மீதான

அமெரிக்க மேற்குலக பொருளாதாரத் தடை எதுவும் நிச்சயமாகத் தமிழர் உட்பட அனைத்து மக்களையும் பாதிக்குமளவுக்கு அரசாங்கத்தை கவிழ்க்க உதவுமா என்பது ஐயத்திற்குரியது.

மேற்குலகின் அக்கறைகள் தமிழர் நலன் சார்ந்தனவல்ல என நமக்கு விளங்கவேண்டும். மேற்குலகு முன்னெடுக்கும் வேலைத்திட்டம் அதன் உலக ஆதிக்க நோக்கங்களாலும் அதை நடைமுறைப்படுத்துவதற்கு உள்ள வாய்ப்பு வசதிகளாலும் அதற்குத் தடையாயுள்ள பிராந்தியக் காரணிகளாலும் முடிவாகிறதே ஒழிய, குறுந் தமிழ்த் தேசியவாத விருப்பு வெறுப்புக்களால் அல்ல.

எனவே, தங்களாலேயே சர்வதேசம் இலங்கையைக் குறிவைக்கிறது என்ற பொய்யைப் பரப்புவதினின்று தமிழ்த் தலைமைகளும் அவர்களுடைய புலம்பெயர்ந்த போஷகர்களும் விலகுவது அறிவுடைமை. நமது இன்னல்களை கருத்துரைப்பது முக்கியம். அதைப் பிறர் தவறாகப் பாவிக்க உதவுவது முட்டாள்த்தனம்.

மேற்குலகை "வசப்படுத்தும்" முயற்சிகளில் ஒரு சிறு பங்கையேனும் இந்த அரசாங்கத்தின் இடத்தில் பேரினவாத நோக்கற்றுச் சமூக நீதியையும் சனநாயகத்தையும் நிலைநிறுத்த முயலும் சிங்களச் சக்திகளுடன் நல்லுறவை நோக்கி முன்னெடுக்க நம்மால் ஏன் இயலவில்லை?




## அறிவியல் வினாவிடைகள்

1. அமெரிக்கா தயாரித்துள்ள, ஏவுகணை களைவிட வேகமாகச் செல்லும் வானூர்தித் தொழில் நுட்பத்தின் பெயர் என்ன?
2. வியாழன் கோளைவிடப் பெரிதாக உள்ள கோளைக் கண்டு பிடித்து அனுப்பிய விண்கலத்தின் பெயர் என்ன? புதிய கோளுக்கு வைக்கப்பட்டுள்ள பெயர் என்ன?
3. ஜப்பான் நாட்டின் புதிய பிரதமர் யார்?
4. தமிழ் ஈழத் தேசியக் கொடி கொண்டு செல்லப்பட்ட ஜெர்மனியின் கால்பந்து ஸ்ரேடியத்தின் பெயர்?
5. தமிழக அரசின் புதிய ஆளுநர் யார்?
6. நேபாள நாட்டின் புதிய பிரதமர் யார்?
7. சிங்கப்பூரில் முதன்முறையாக வாக்குரிமையின் மூலம் நடைபெற்ற அதிபர் பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டவர் பெயர் என்ன?
8. ஒரிசா மாநிலத்தின் புதிய பெயரையும், ஒரியா மொழியின் புதிய பெயரையும் குறிப்பிடுக.
9. மேற்குவங்க மாநிலத்தின் புதிய பெயர் என்ன?
10. பாகிஸ்தானில் முதல் பெண் துணை இராணுவ தளபதியாக நியமிக்கப்பட உள்ளவரின் பெயர் என்ன?

**விடைகள்**

1. பால்கன் எச்டிவி - 2
2. கெப்லர் விண்கலம், ட்ரெஸ் - 2பி
3. யோஷிஹிக்கோ நோடா
4. வெஸ்ட் பாலன்ஸ்டேடியான்
5. கோ.ரோசய்யா
6. பாபுராம் பட்டாராய்
7. டோனி டேன்
8. ஒடிஷா, ஒடியா
9. பஷ்சிம்பங்கா
10. ஷாகிதா பத்ஷா

**அறிவியல் சோதனை**

# மின்சாரத்தால் மீன் பிடிப்போமா?

**தேவையான பொருள்கள் :**

இலேசான தகரத்தகடு, பசை மின் கலம், காப்பிட்ட கம்பி அல்லது ஜரிகை


அகலமான பிளாஸ்டிக் தட்டு, கத்தரிக்கோல், பெரிய ஆணி. கத்தரிக்கோலால் தகரத்திலிருந்து சிறு சிறு மீன் வடிவங்களைக் கத்தரித்துக் கொள்ளுங்கள். பிளாஸ்டிக் தட்டில் தண்ணீரை நிரப்பிக்கொண்டு தகரவடிவ மீன்களை அதில் போடுங்கள்.

பெரிய ஆணியின் மேல் பூக்காகிதச் சுருளைச் சுற்றுவதுபோல் ஜரிகை அல் லது காப்பிட்ட கம்பியை ஒரு சுருள் மற்றொரு சுருளைத்தொடாமல் நெருக்கமாகச் சுற்றுங்கள். சுற்றிய இரு நுனி களையும் மின்கலத்தோடு மேலும் கீழுமாக இணையுங்கள். ஆணியின் தலைப்பகுதியை தண்ணீர் மட்டத்தில் பிடியுங்கள். தகர மீன்கள் தண்ணீரை விட்டு வெளியே துள்ளிவந்து ஆணியின் தலைப பைக் கவ்விக்கொள்ளும்.

**ஏன்? எப்படி?**

காந்தம் இரும்பை இழுக்கும் தன்மை கொண்டது. மின்கலத்திலிருந்து வரும் மின்சாரம் கம்பிச் சுருள்களின் வழியே வரும்பொழுது மின்சக்தி காந்த சக்தியாக மாறி ஆணியைத் தற்காலிகக் காந்த மாக மாற்றுகிறது. ஆகவே, இரும்பு மீன்துண்டுகள் ஆணியில் ஒட்டுகின்றன.

## நீதிக்கதை




ஒரு ஊரில் ஒரு இளைஞன் இருந் தான். அவன் எப்போதும் கோபப் படும் சுபாவத்தை கொண்டவன். ஒரு முறை அவனது நண்பன் அவனி டம் ஆணிகள் நிரம்பிய பையை கொடுத்தான். நீ எப்போதெல்லாம் கோபப்படுகி றாயோ அப்போதெல்லாம் ஒரு ஆணியை இந்தச் சுவரில் அடிக்கவும் என்றான். இளைஞனும் அப்படியே செய்து வந்தான். முதல் நாள் அவன் 35 ஆணிகளை அடித்தான். மறு நாள் 30, மறுநாள் 25 எனப் படிப்படியாகக் குறைந்து கொண்டு வந்தது. சில நாட்கள் கழித்து அவன் கோபப்படு வதை நிறுத்தி விட்டான். அதனால் அவன் ஆணிகளை அடிககவில்லை. அதை அவனது நண்பன் பார்தது பெருமைப்பட்டான். அவனை முழுவதுமாக திருத்த ஆசைப்பட்ட நண்பன் அவனிடம் அடித்த ஆணிகளைப் பிடுங்கச் சொன்னான். இளைஞனும் அப்படியே செய்தான். அதைப்பார்த்த அவன் நண்பனிடம் சொன்னான். என் நண்பனே! நீ, நான் சொன்ன படியே எல்லா வேலைகளையும் செய்தாய். இப்போது நீ அடித்த ஆணிகள் பிடுங்கப்பட்டு விட்டன. ஆனால் ஆணி அடித்த இடங்களில் உள்ள ஓட்டைகளைப் பார். இந்தச் சுவர் முன்னால் இருந்த மாதிரி இல்லை. எல்லா இடங்களிலும் ஓட்டைகள் உள்ளன. அது போலத்தான் நீ கோபத்தில் சொல்லும் வார்த்தை களும், செயல்களும் ஒரு வடுவை உண்டாக்கி விடும். நீ என்ன தான் உன் செயல்களுக்கு மன் னிப்புக் கேட்டாலும் அந்த வடு மாறாது, மறையாது.

நீ வார்த்தைகளால் உன்டாக்கும் வடுவிற்கும், செயல்களால் உண்டாக்கும் வடுவிற்கும் எந்த ஒரு வித்தியாசமும் இல்லை. என் நண்பனே உண்மை யைச் சொல்லப்போனால் நண்பர்கள் ஒரு அரிய பொக்கிஷங்கள். அவர்கள் உன்னை சிரிக்க வைப்பார கள். உன் வாழ்க்கையில் நீ உயர உன்னைத் தட்டிக் கொடுப்பார்கள். நீ சொல்வதைக் காது கொடுத்து கேட்பார்கள்.

நீ நல்ல நிலைக்கு வரும் போது உன்னைப் புகழ்வார்கள். அதையும் இதயபூர்வமாகச் செய் வார்கள். அதைத்தான் நான் இப்போது செய்தேன்.

*"தீயினால் சுட்ட புண் உள்ளாறும் ஆறாதே*
*நாவினால் சுட்ட வடு"*

# உலகின் பெரிய பனிக்குகையின் வயது 8 கோடி



ஆஸ்திரியா நாட்டின் சால்ஷ் பெர்க் நகரின் பக்கத்தில் வெர்பென் எனும் பகுதி யில் கோச்கோகெல் மலைகளுக்கு அருகே உள்ளது. உலகின் மிகப் பெரிய பனிக குகையான எஸ்ரிசென்வெல்ட்(Eisriesenwelt) .42 கி.மீ. நீளத்தையுடைய இந்தப் பனிக்குகை, முதல் ஒரு கி.மீ. தூரத்திற்கு பனிக்கட்டிகளாலும் மீதமுள்ள பகுதி முழுவதும் சுண்ணாம்புக்கல்லாலும் ஆனது. எனினும், அவை முழுவதும் பனியால் சூழப்பட்டுள்ளதே இதன் சிறப்பம்சமாகும். 75 அடி உயரம் உடைய பனிக் கோபுரம் ஓர் இடத்தில் அமைந்துள்ளது. இந்தப் பனிக்குகைகள் 6 முதல் 8 கோடி ஆண்டு களுக்கு முன்பு உருவாகி இருக்கலாம் என்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். எஸ்ரிசென்வெல்ட் பனிக்குகை 1879 ஆம் ஆண்டு சாலஷ்பெர்க் நகரத்தைச் சேர்ந்த ஆண்டோன் லாசெட் என்ற ஆய்வாளரால் கண்டுபிடிக்கப்பட்டது.

1912 ஆம் ஆண்டு அலெக்சாண்டர் வான் மார்க் என்பவர் ஆராய்ச்சி நோக்கில் குகைக்கு வந்தார். தொடர்ந்து பல ஆய்வாளர்கள் வருகை புரிந்ததால் 1920 ஆம் ஆண்டு குகையில் தனி அறைகள் ஆராய்ச்சி செய்பவர்களுக்காக அமைக் கப்பட்டன. 1955 ஆம் ஆண்டு கேபிள் கார்கள் குகைக்குச் செல்ல ஏற்படுத்தப்பட்டன. குகையின் நீளம் 42 கி.மீ. இருந்தபோதிலும், 1 கி.மீ. தூரம் வரையே சுற்றுலாப் பயணிகள் சென்றுவரும் வசதி செய்யப்பட்டுள்ளது. அனுமதித்துள்ள 1 கி.மீ. பாதையைச் சுற்றிப் பார்த்து வரவே 1 மணிநேரம் ஆகுமாம்.

ஆஸ்திரியாவின் பிரபலமான சுற்றுலாத் தலமாகத் திகழும் இந்தக் குகையைப் பார்வையிட ஆண்டுக்கு 2 இலட்சம் பேர் வந்து செல்கின்றனர்.குகை உள்ள பகுதியில் கடுமையான மழை பெய்து அங்குள்ள சால்ஜென் நதியில் வெள்ளம் ஏற்பட்டு குகைக்குள்ளும் வெள்ள நீர் பாய்ந்திருக்கலாம். பின், கடுமையான பனிப்பொழிவின் காரணமாக அந்தத் தண்ணீர் பனியாகியிருக்கலாம் என்றும் ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.



## வரைந்து பழகுவோம்




# மக்களுக்கான அபிவிருத்திகளை எதிர்ப்பரசியலால் முன்னெடுக்க முடியாது

## அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வடமாகாண சபையின் அதிகாரம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கு கிடைத்திருந்த போதிலும் அவர்களால் புதிய அபிவிருத்தி திட்டங்களை முன்னெடுக்க முடியாதவர்களாகவே இருக்கின்றனர் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா சுட்டிக் காட்டியுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அமைச்சரின் செயலகத்தில் யாழ்.பல்கலைக்கழகத்தில் புதிதாக நியமனப் பெற்றுக் கொண்ட எழுதுவினைஞர்கள், பாதுகாப்பு மற்றும் சுகாதார சேவை உத்தியோகத்தர்களுடன் நேற்று முன்தினம் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே அவர இவ்வாறு தெரிவித்துள்ளார்.



அவர் மேலும் தெரிவிக்கையில், எமக்கும் அரசுக்கும் உள்ள நல்லுறவுகளின் நிமித்தமாகவும், இணக்க அரசியல் மூலமாகவும் எமது மக்களுக்கு வேலைவாய்ப்பு உள்ளிட்ட பல்வேறுபட்ட அபிவிருத்தி மற்றும் மேம்பாட்டு செயற்றிட்டங்களை முன்னெடுக்கக் கூடியதாகவுள்ளது.

ஆனால், எதிர்ப்பு அரசியலை முன்னெடுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரால் இவ்வாறான அபிவிருத்தி மற்றும் மேம்பாட்டு செயற்றிட்டங்களை முன்னெடுக்க முடியாது.

இந்நிலையில், வடமாகாண சபை அதிகாரத்தை நாம் கைப்பற்றியிருப்போமானால் அரசுடனான நல்லுறவைப் பயன்படுத்தி எம்மால் பல்வேறுபட்ட அபிவிருத்தி மேம்பாட்டு செயற்றிட்டங்களை முன்னெடுக்கக் கூடியதாக அமைந்திருக்கும்.

இதன்மூலம் நீங்கள் ஒரு விடயத்தை தெளிவாக புரிந்து கொள்ள வேண்டும். அது என்னவெனில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பொறுத்தவரையில் அவர்களுக்கு தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு நிரந்தர தீர்வு காண்பதற்கு விருப்பமில்லாதவர்களாகவே காணப்படுகின்றனர்.

இப்பிரச்சினையை தீராப்பிரச்சினையாக வைத்துக் கொண்டு தமது சுயலாப அரசியலை முன்னெடுப்பதே அவர்களது பிரதான நோக்கமாக காணப்படுகின்றது.

ஆனால் நாம் எமது மக்களின் பிரச்சினைகளுக்கு நிரந்தர தீர்வினை கண்டு அதனூடாக நிம்மதியான சுதந்திரமான வாழ்வை பெற்றுக் கொடுக்கும் அதேவேளை, மக்களுக்கான வாழ்வாதாரத்தை மேம்படுத்திக் கொள்வதுமே எமது இலக்காகவுள்ளது.

இவ்வாறாக மக்களுக்கான எமது உழைப்பும் அரசியல் நிலைப்பாடுமே ஏனைய கட்சிகளுக்கு எம்மீதான காழ்ப்புணர்விற்கு காரணமாக அமைகின்றது என்றும் சுட்டிக்காட்டினார்.

இதனிடையே தொழில் வாய்ப்பை பெற்றுக் கொண்டுள்ள நீங்கள் தொழிலுக்கு விசுவாசமாகவும் நேர்மையாகவும் நடந்து கொள்ள வேண்டுமென்பதுடன் உயரதிகாரிகளுக்கு கீழ்ப்படிந்து பல்கலைக்கழகத்தின் மேம்பாட்டுக்காகவும், உயர்விற்காகவும் ஒன்றிணைந்து உழைக்க வேண்டுமெனவும் கேட்டுக் கொண்டார்.

இதன்போது ஈ.பி.டி.பி.யின் கோப்பாய் பிரதேச இணைப்பாளர் ஐங்கரன், ஈ.பி.டி.பி.யின் மானிப்பாய் பிரதேச இணைப்பாளர் ஜீவா, ஈ.பி.டி.பி.யின் தென்மராட்சி இணைப்பாளர் சாள்ஸ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# தொழில் வழிகாட்டல் கருத்தரங்கு

வலி. தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச சம்மேளனத்துடன் ஐ.ஓ.எம். நிறுவனம் இணைந்து நடாத்தும்,சாதாரணதரம் மற்றும் உயர்தரப் பரீட்சைக்குத்தோற்றி சித்திபெற்ற மாணவர்களுக்கான இருநாள் தொழில் வழிகாட்டல் கருத்தரங்குஎதிர்வரும் 20 ஆம் 21ஆம் திகதிகளில் சண்டிலிப்பாய் பிரதேசசெயலகத்தில் இடம்பெறவுள்ளது.

காலை 9 மணிக்கு ஆரம்பமாகி 3 மணிக்கு நிறைவடையும் கருத்தரங்கில் சிறப்பு தேர்ச்சியாளர்களுக்கு உடனடி வேலைவாய்ப்புக்களும் வழங்கப்படவுள்ளது,சண்டிலிப்பாய் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட அனைத்து இளைஞர் யுவதிகளையும் கலந்து கொள்ளுமாறு வலி தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச சம்மேளனத்தினர் அழைப்பு விடுத்துள்ளனர். (114)

# "உடல் உறுப்புக்களை பாதிக்கும் புற்றுநோய்" கணேசலிங்கத்தின் நூல் வெளியீடு

(திருநெல்வேலி)

நல்லூர் தியாகி அறக்கொடை நிறுவனத்தின் அனுசரணையுடன் பேராசிரியர் வீ.கே. கணேசலிங்கம் எழுதிய புற்றுநோய் பல உடல் உறுப்புக்களைப் பாதிக்கும் ஒரு நோய், என்னும் நூல் வெளியீடு நேற்று முன்தினம் முற்பகல் தியாகி அறக்கொடை நிலைய சொர்ணாம்பிகை மண்டபத்தில் நடைபெற்றது.



வவுனியா, சர்வோதய தலைவர் ஏ.கே. சிவசுப்பிரமணியம் தலைமையில் இடம்பெற்ற இந்நூலின் வெளியீட்டுரையை யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடாதிபதி டாக்டர் எஸ். பாலகுமார் நிகழ்த்தினார். நூல். விமர்சன உரைகளை யாழ்ப்பாணம், புற்று நோயாளர் காப்பகத்தின் தலைவர் டாக்டர் என். சிவராஜா, கோப்பாய் லயன்ஸ் கழகத் தலைவர் டாக்டர் வீ. தியாகராஜா பதுளை மார்பு நோய் மருத்துவ நிலைய டாக்டர் எஸ். யமுனானந்தா, பேராசிரியர் என். சண்முகலிங்கன் பழம் தமிழர் கழகத் தலைவர் விசாகநேசன் ஆகியோர் வழங்கினர்.

நூலாசிரியர் வீ. கே. கணேசலிங்கம் தியாகி அறக்கொடை நிலைய நிறுவுனர் தியாகேந்திரனால் பொன்னாடை போர்த்தப்பட்டு மாலை அணிவிக்கப்பட்டுக் கௌரவிக்கப்பட்டார். அத்துடன் நூலாசிரியரிடமிருந்து முதல் பிரதியையும் பெற்றுக் கொண்டார்.

பேராசிரியரும், நூலாசிரியருமான வீ.கே.கணேசலிங்கம் ஏற்புரை நிகழ்த்தினார். (137)

# பதிவிருக்கப் பெட்டகம்

இந்தியாவுக்கு வந்த திபெத்திய அகதிகளுக்கு நேருவின் காலத்தில் ஐந்தாண்டுகளுக்குள் குடியுரிமை அளிக்கப்பட்டது. வங்க அகதிகள் எட்டாண்டுகளில் குடியுரிமை பெற்றார்கள். ஆனால் இருபத்தைந்தாண்டுகளாகக்கூட குடியுரிமை அளிக்கப்படாதவர்கள் இலங்கை அகதிகள். ஒருநாட்டில் பிறந்த குழந்தைக்கு அங்கே இயற்கைக்குடியுரிமை உண்டு என்பது சர்வதேசச் சட்டம். அந்த உரிமைகூட இவர்களுக்கில்லை. இந்திய மண்ணில் பிறந்த பல்லாயிரம் குழந்தைகளுக்கு அகதி என்ற அடையாள அட்டையை வழங்கியிருக்கும் இந்திய அரசுக்காக நாம் வெட்கிக் கூச வேண்டும்.

மேலோட்டமான உணர்ச்சிக்கொந்தளிப்புகளையே நாம் அரசியல்நடவடிக்கை என நினைத்துக்கொண்டிருக்கிறோம். அதற்காக இனவெறி மொழிவெறி ஆகியவற்றை பொதுவெளியில் கக்குகிறோம். வெற்று கோஷங்களை எழுப்பி நம் மீது நாமே பழிகளை தேடிக்கொண்டு நமது நியாயமான கோரிக்கைகளையும் வெறும் இனவெறியாக நாமே சித்தரித்துக்கொள்கிறோம்.

இலங்கைத்தமிழர் துயரை அதற்கான ஒரு முகாந்திரமாகவே எண்ணுகிறோம். நமக்கு அம்மக்கள் மீது உண்மையான ஈடுபாடு இருந்திருந்தால் நமது கவனம் இந்த அகதிமுகாம்களை நோக்கியே முதலில் திரும்பியிருக்கும். இன்று ஆக்கபூர்வமாகச் செயல்பட்டு இம்மக்களை அவர்கள் விழுந்துள்ள இக்கட்டிலிருந்து மீட்காவிடில் அது ஒரு பெரும் வரலாற்றுப்பழியாகவே நம் மீது எஞ்சும்.

இந்திய அளவில் முற்போக்காகவும் மனிதாபிமானநோக்கிலும் சிந்திக்கும் அனைவரின் ஆதரவையும் திரட்டுவதே முதலில் செய்யவேண்டியது. எவருமே மறுக்கமுடியாத கோரிக்கைகள் இவை.

அதேசமயம் இன, மொழி வெறுப்பையும் பிரிவினைக்கோரிக்கைகளையும் இதனுடன் இணைப்பது இந்த நியாயமான எளிய விஷயத்தை முழுமையாகத் தோற்கடிக்கவும் செய்யும். ஏழு பேர் விடுதலையை இனவாதக்கோரிக்கை என ஏற்கனவே இந்திய ஊடகங்கள் சித்தரிக்க நம்முடைய சமநிலை இல்லாத, தர்க்கபூர்வசிந்தனை சற்றும் இல்லாத கூச்சல்கள் வழி வகுத்துவிட்டன. காங்கிரஸ் கட்சியும் இந்திய அரசும் இலங்கை அகதிகள் மீது காட்டிவரும் பாரபட்சத்தை இந்தக்கோரிக்கை மேலும் அழுத்தமாகச் சுட்டிக்காட்டுவது அதற்கான பதிலாகவும் அமையும்.

இந்தியாவில் பத்தாண்டுகளுக்கும் மேலாக இருந்துவரும் இலங்கை அகதிகளுக்கு இங்கே குடியுரிமை வழங்கவும் இங்கேயே பிறந்த குழந்தைகளுக்கு இயல்பான குடியுரிமையை அளிக்கவும் இந்திய அரசை கட்டாயப்படுத்தியாகவேண்டும்.

– ஜெயமோகன்

இந்தியாவை மீறி இந்தப் பிராந்தியத்திற்குள் யார் நுழைந்தாலும் அதற்கு அடிப்படையிலான வரையறைகள் உண்டு. ஜெனிவாவை நோக்கி நாட்டின் முழுக் கவனமும் குவித்திருக்கும் இந்நாட்களில் அதன் மிகச் சரியான பொருளிற் கூறின், புதுடில்லிதான் தமிழர்களிற்கு ஜெனிவா. புதுடில்லி அசையவில்லை என்றால் ஜெனிவாவில் எதுவும் அசையாது. எனவே, புதுடில்லியை எப்படி அசைப்பது என்பதே தமிழ் ராஜிய முயற்சிகளின் இறுதி இலக்காக இருக்க வேண்டும்.

ஆனால், அனைத்துலக தமிழ்லொபி எனப்படுவது அவ்வாறுதான் உள்ளதா? இல்லை. அது பெரிதும் மேற்கை நோக்கியே திரும்பியிருக்கிறது. அல்லது மேற்கில் எடுக்கப்படும் முடிவுகளிற்கு ஆதரவு கொடுக்குமாறு புதுடில்லியை நோக்கி லொபி செய்வதாகவே உள்ளது. அதாவது, தமிழ் லொபியானது புறவளமாக இருக்கிறது. இது இன்று நேற்று ஏற்பட்ட ஒரு வளர்ச்சி அல்ல. இலங்கை – இந்திய உடன்படிக்கைக்கும் முன்பிருந்தே இது தொடங்கியது. விடுதலைப்புலிகள் இயக்கம் ஏனைய இயக்கங்களைத் தோற்கடித்து ஈழத் தமிழ் அரசியலை புலிகள் மைய அரசியலாக மாற்றியபோது இது தொடங்கியது. ரஜீவ் கொலைக் கேஸோடு ஈழத்தமிழர் அரசியலுக்கும் புதுடில்லிக்கும் இடையில் ஒரு சட்டப் பூட்டு உருவாகியது. அதைத் தொடர்ந்து ஒரு துருவ உலக ஒழுங்கின் எழுச்சி மற்றும் சக்தி மிக்க தமிழ் டயஸ்பொறாவின் எழுச்சி ஆகிய இரு பிரதான காரணங்களினாலும் தமிழ் லொபியானது அதிகபட்சம் மேற்கை நோக்கி திரும்பிவிட்டது.

ஆயுத மோதல்கள் முடிவுக்கு வந்த பின் இலங்கை அரசாங்கம் சீனாவை நோக்கிச் சாயச் சாய மேற்கு நாடுகளும் தமிழ் லொபிக்கு அதன் சக்திக்கு மீறிய முக்கியத்துவம் கொடுத்து அதை ஒரு கருவியாகப் பயன்படுத்தத் தொடங்கின. ஜெனிவாவைச் சுற்றி மாயைகள் கட்டியெழுப்பப்பட இதுவும் ஒரு காரணம்தான்.

– நிலாந்தன்

## மின்கட்டணம் செலுத்தாதோரின் மின் இணைப்புக்கள் துண்டிப்பு

மன்னார் மாவட்டத்தில் மின்கட்டணம் செலுத்தாதோரின் வீட்டு, வர்த்தக நிலையம, தொழிலகம் என்பவற்றின் மின் இணைப்புக்கள் துண்டிக்கப்பட்டு வருகின்றது.

ரூபாய் 300 முதல் பல்லாயிரம் ரூபாய்கள் வரையில் மின் கட்டண பாக்கிக்காக மின்சாரம் துண்டிக்கப்பட்டு வருவதாக மன்னார் மின்சார சபை தெரிவித்துள்ளது. இவ்வாறு துண்டிககப்பட்டவர்கள் மீண்டும் மின் இணைப்பைப் பெற மேலதிகமாக ரூபாய் ஆயிரம் செலுத்த வேண்டும் என்ற நிபந்தனையும் விதிக்கப்பட்டுள்ளது.

ஆயினும் பணம் செலுத்தி மின்சாரம் பெற்றவர்கள் அந்த ஒளியை சுயமாக அனுபவிக்க முடியவில்லை, மாறாக கடந்த மூன்று தினங்களாக நகரில் மின் துண்டிப்பு அமுல் செய்யப்படுகின்றது.

மேலும் எதிர்வரும் 25ஆம், 27ஆம் திகதிகளில் மீண்டும் ஒரு முழு நாள் மின் வெட்டு அமுல்படுத்தப்படும் என்று மன்னார் மின்சாரசபை பொறியியலாளர் தெரிவித்துள்ளார்.

## தேர்தலை எதிர்கொள்வதற்கு அஞ்சுகின்றன எதிர்க்கட்சிகள்



(கொழும்பு)

இந்த நாட்டின் எதிர்க்கட்சிகள் தேர்தலுக்கு அஞ்சி வருவதாக பொருளாதார அபிவிருத்தி அமைசசர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.


உலகின் ஏனைய நாடுகளில் எதிர்க்கட்சிகள் தேர்தலை நடாத்துமாறு கோரி வருகின்ற போதிலும், இலங்கையில் எதிர்க்கட்சிகள் தேர்தலை விரும்பவில்லை. மிகவும் அதிசயமான எதிர்க்கட்சிகள்.

கடந்த காலங்களில் ஐக்கிய தேசியக் கட்சியிடம் தோல்வியடைந்த போது, கவலையடைந்திருக்கின்றோம். எனினும், இன்று ஐக்கிய தேசியக் கட்சியின் தோல்வியை பார்த்து ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்களே மகிழ்ச்சி அடைகின்றனர்.இந்த தலைவரை விரட்டியடிக்க வேண்டுமென முயற்சிக்கின்றனர் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

கம்பஹாவில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டமொன்றில் பங்குபற்றிய போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

## இலங்கையை தண்டிக்க வேண்டும் என்பது கூட்டமைப்பின் நோக்கமல்ல

### என்கிறார் சம்பந்தன்



(கொழும்பு)

இலங்கையைத் தண்டிக்க வேண்டும் என்பது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நோக்கம் கிடையாது என அதன் நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

இலங்கையைத் தண்டிக்கும் நோக்கில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை அமர்வுகளில் தீர்மானம் நிறைவேற்றபபட வேண்டுமென கோரவில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சில முக்கியமாக ஆற்றப்படவிருந்த கடமைகளை இலங்கை அரசாங்கம் இதுவரையில் முன்னெடுக்கத் தவறியுள்ளமையை சுட்டிக்காட்டுவதே நோக்கம் என அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசாங்கம் வலுவான, ஸ்திரமான தீர்மானங்களை எடுக்கும் அரசாங்கமாக கருதப்பட்ட போதிலும், பிழையான பாதையில் செல்வதே வருத்தமளிக்கின்றது என அவர் தெரிவித்துள்ளார்.

தேசிய பிரச்சினைக்கு அரசியல் ரீதியான தீர்வுத் திட்டமொன்று முன்வைக்கப்பட வேண்டும் என்பதே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நோக்கமாகும் என அவர் குறிப்பிட்டுள்ளார். அதிகாரப் பகிர்வுடன் கூடிய தீர்வுத் திட்டமொன்றை முன்வைக்க வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

வடக்கில் நிலைநிறுத்தப்பட்டுள்ள இராணுவத்தினர் பல்வேறு பொதுமக்கள் விவகாரங்களில் தலையீடு செய்து வருவதாகத் தெரிவித்துள்ளார். மாகாணசபை முறைமை முழுமையாக அமுல்படுத்தப்பட வேண்டியது அவசியமானது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## சிறந்த சந்ததியை உருவாக்குவதே அபிவிருத்தியின் இறுதி நோக்கம்

### ஜனாதிபதி



(கொழும்பு)

நாட்டிலுள்ள அனைத்து பிள்ளைகளுக்கும் சிறந்த எதிர்காலத்தை உருவாக்கிக்கொடுப்பதே அபிவிருத்தி செயற்பாடுகளின் இறுதி நோக்கம் என ஜனாதிபதி .மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

உலகை வெற்றிகொள்ளக்கூடிய பண்புமிக்க எதிர்கால சந்ததியொன்றை இலங்கையில் உருவாக்க வேண்டும் எனவும் ஜனாதிபதி குறிப்பிட்டுள் ளார்.

மாத்தறை ஹித்தெட்டிய ரஜமகா விஹாரையை புனித பூமியாக பிரகடனப்படுத்தும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஸ இதனைக் கூறியுள்ளார்.

சமூகத்தில் ஒழுக் கத்தை ஏற்படுத்த முடியாமற்போனால் அபிவிருத்தியின் நற்பலன்களை அடைய முடியாது எனவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார்.

## அத்தியட்சகராக பதவி உயர்வு

ஹங்வெல்ல - துன்னான பிரதேசத்தில் தொழிற்சாலை ஒன்றிற்கு எதிராக பொதுமக்கள் மேற்கொண்ட ஆர்ப்பாட்டத்தின் போது காயமடைந்து உயிரிழந்த பொரளை பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரி பிரசாத் சிறிவர்தன பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது.

பொலிஸ் மா அதிபரின் ஆலோசனைக்கு அமைய பொலிஸ் பொறுப்பதிகாரியாக இருந்த பிரசாத் சிறிவர்தன பொலிஸ் அத்தியட்சகர் பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளதாக அறிவிக்கபபட்டுள்ளது.

## கைத்தொழில் வணிகர் மன்றத்தினால் உதவித்தொகை வழங்கி வைப்பு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத்தின் 35 ஆவது வருடாந்த பொதுக்கூட்டம் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

வணிகர் மன்றத்தலைவர் வ.சிறிபிரகாஷ் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம அதிதிகளாக சாவகச்சேரி பிரதேச செயலர் திருமதி அ.சாந்தசீலன், தென்மராட்சி கல்விப் பணிப்பாளர் சு. கிருஷ்ணகுமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வின் போதே மேற்படி உதவித்தொகை வழங்கப்பட்டன. இதற்கான நிதியினை சாவகச்சேரி கைத்தொழில வணிகர் மன்றத்தின் வர்த்தகர்கள் மற்றும் தென்மராட்சி பிரதேச மக்கள் மற்றும் புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் வசிககும் தென்மராட்சிப் பிரதேச மக்கள் உள்ளிட்டோர் வழங்கினார்கள்.

இதனைவிட குறித்த பகுதி மக்களின் நிதியுதவியின் மூலம் யாழ் பல்கலைக்கழக மருத்துவபீடத்தில் கல்விப் பயிலும் மாணவியொருவருக்கு கல்விச் செலவிற்காக மாதாந்தம் 3750 ரூபா ஏற்கனவே வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## புதிய திட்டம் ஒன்றை அமுல்படுத்த ஆராய்வு

எல்லைத்தாண்டிய இலங்கை கடற்பிராந்தியத்தில் தொழிலில் ஈடுப்படும் இந்திய மீனவர்களின் படகுகளை விடுவிக்க புதிய திட்டம் ஒன்றை அமுல்படுத்துவது குறித்து ஆராயப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தடுத்து வைக்கப்படும் இந்திய மீனவப் படகுகளை விடுவிக்க பெருமளவான தண்டப் பணம் அறவிடுவது குறித்து ஆலோசித்து வருவாதாக கடற்றொழில் திணைக்களத்தின் இயக்குனர் நாயகம் என் டி ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

இந்திய, இலங்கை மீனவர்களுக்கு இடையே எதிர்வரும் 25ஆம் திகதி இடம்பெறவுள்ள பேச்சுவார்த்தைகளில் போது இந்த விடயம் குறித்தும் கலந்துரையாடப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்

## இறைச்சிக்காக கடலாமை; வெட்டியவருக்கு மறியல்

மன்னார், பள்ளிமுனை பகுதியில் கடலாமையொன்றை இறைசசிக்காக வெட்டிய குற்றச்சாட்டின் பேரில் கைதுசெய்யப்பட்ட மீனவர் ஒருவரை எதிர்வரும் 20ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு மன்னார் நீதவான் ஆனந்தி கனகரட்ணம் உத்தரவிட்டுள்ளார்.

சந்தேக நபரை மன்னார் நீதவான் முன்னிலையில் நேற்றுமுன்தினம் ஆஜர்படுத்தியபோதே அவர் இந்த உத்தரவைப் பிறப்பித்தார்.

இது தொடர்பில் கிடைத்த தகவலைத் தொடர்ந்து பள்ளிமுனை பகுதிக்குச் சென்ற மன்னார் பொலிஸார், சுமார் 03 கிலோகிராம் ஆமை இறைச்சியுடன் இச்சந்தேக நபரை நேற்று முன்தினம் காலை கைது செய்தனர்.

## ஆர்தர் சி.கிளார்க் நிலையத்தில் பதவிக்கு விண்ணப்பம்

(யாழ்ப்பாணம்)

தொழில் நுட்பவியல் மற்றும் ஆராய்ச்சி அமைச்சினால் நவீன தொழில்நுட்பவியல்களுக்கான ஆர்தர் சி.கிளாக் நிலையத்தினால் சிரேஷ்ட பிரதிப் பணிப்பாளர் பதவிக்கு தகைமையுடைய இலங்கை பிரஜைகளிடமிருந்து விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

விண்ணப்பிப்போர் 33-55 வயது வரை இருத்தல் வேண்டும் ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்துக்கான தகுதி தன்மையுடன் நிரந்தரமான பதவியுமாகும்.

விண்ணப்பதாரிகள் முழுமையான சுயவிபரங்கள், சான்றிதழ் வழங்கக் கூடிய உறவினரல்லாத இருவரின் பெயர்கள் மற்றும் முகவரிகள் ஆகியன அடங்கப்பெற்ற விண்ணப்பங்களை எதிர்வரும் 28 ஆம் திகதிக்கு முன்னதாக பதிவுத்தபாலில் கடித உறை யின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரைக் குறிப்பிட்டு பணிப்பாளர் மற்றும் பிரதான நிறைவேற்று அலுவலர், நவீன தொழில்நுட்பவியலாளர்களுக்கான ஆர்தர்.சி கிளார்க் நிலையம் கட்டுபெத்த. மொறட்டுவ என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.





கிளிநொச்சி புளியம்பொக்கனை நாகதம்பிரான் ஆலயத்தின் வருடாந்த பொங்கல் உற்சவத்தை முன்னிட்டு யாழ்.மீசாலை வடக்கு நாகதம்பிரான் ஆலயத்தில் இருந்து பாரம்பரிய முறைப்படி ஆலயத்திற்கு பண்டம் கொண்டுவரப்படுகிறது (29)


பகுதி I

- பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

01) முதலில் தரப்பட்டுள்ள படத்திற்கு பொருத்தமான படத்தை தெரிவு செய்க.




02) கீழே உள்ள படங்களில் பொருத்தமற்ற படத்தினை தெரிவு செய்க.




(i) (ii) (iii)


03) பின்வரும் உருவிலுள்ள வெற்றிடத்துக்குப்பொருத்தமானா பகுதியைத் தெரிவு செய்க.



04) கீழே தரப்பட்டுள்ள கோலங்களின் ஒழுங்கை இனங்கண்டு அவ்வொழுங்கு முறைக்கேற்ப இடைவெளியில் வரவேண்டிய உருவைத் தெரிவு செய்க.



05) முதலாவது உள்ள காரின் பகுதியைக்கொண்டு தயாரிக்கக்கூடிய சரியான காரின் உருவத்தை தெரிவு செய்க.





# தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2014

பகுதி - II
1 மணி 15 நிமி

# கல்வி முரசு



(கடந்த ஞாயிற்றுக்கிழமை வெளியான பரீட்சை வினாத்தாளின் தொடர்ச்சி...)

28) ஒரு கிலோமீற்றர் அல்லது அதன் பகுதித் தூரத்தைச் செல்வதற்கு வாடகைக்கார் ஒன்றிற்கு செலுத்தவேண்டிய கட்டணம் ரூபா 20.00ஆகும் ரூபா 130.00 ஐ வைத்திருக்கும் காந்தன் வாடகைக் காரில் செல்லக்கூடிய ஆகக்கூடிய தூரம் எவ்வளவு?

(i) 6 கிலோமீற்றர் (ii) 7 கிலோமீற்றர் (iii) 8 கிலோமீற்றர்


29) வேலி ஒன்றின் ஒரு நிரையில் 8 தூண்கள் நடப்பட்டிருந்தன. ஒவ்வொரு தூணுக்குமிடையில் 2 மீற்றர் தூரம் விடப்பட்டிருந்தது எனின் முதலாவது தூணில் இருந்து எட்டாவது தூண் வரையான தூரம் எவ்வளவு?

(i) 14 மீற்றர் (ii) 16 மீற்றர் (iii) 18 மீற்றர்


- **30 - 32 வரையான வினாக்களுக்கு தரப்பட்ட தகவல்களைக் கொண்டு விடை தருக.**

குறியீடுகளின் நிறைகளுக்குச் சமனான நிறைகளைக் கொண்ட குறியீடுகளை அவதானித்துக் கேட்கப்பட்ட வினாக்கள் ஒவ்வொன்றுக்குமான விடையின் கீழ் கீறிடுக.


△ இன் நிறை = □ இன் நிறை
□ இன் நிறை = ○○ களின் நிறை

30) 

இதன்படி அருகே உள்ள தராசுத் தட்டுக்கள் இரண்டிற்கும் சமனிறையில் இருப்பதற்கு தராசின் வலது பக்கத்தட்டில் சேர்க்கப்படவேண்டிய நிறையை உள்ளடக்கும் விடை பின்வருவனவற்றுள் எது?




31) அருகே உள்ள தராசுத்தட்டுக்கள் இரண்டும் சமனிறையில் இருப்பதற்கு தராசின் வலது பக்கத்தட்டில் சேர்க்கப்படவேண்டிய நிறை எது?



(i) △ (ii) □ ○○ (iii) △△


32) இரண்டு தட்டுக்களும் சமனிறையில் காணப்படும் தராசு எது?



33) **அது அழகான மலர்** என்ற வாக்கியம் △ ○ □ எனக்குறியீடுகளால் காட்டப்பட்டது. இதற்கேற்ப **அதிதிக்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டது.** எனும் வாக்கியம் எழுதப்படத் தக்க முறையைக் காட்டும் விடை எது?

(i) △ □ × ⊙ (ii) + □ ⊕ ⌐ (iii) × + ⊙ ⊡

34) கீழே உள்ள மாதிரியுருவை மடித்து அமைக்கத்தக்க பெட்டி எது



- கீழே தரப்பட்டுள்ள எழுத்துக்களின் நிரைகளை அவதானித்துக் கேட்கப்பட்ட வினாக்களுக்கான விடையின் கீழ் கீறிடுக.

| | |
|---|---|
| நிரை 1 | SMSYLLMX |
| நிரை 2 | MSMMYYMR |
| நிரை 3 | MMSSMSYX |
| நிரை 4 | SPMYLLPR |

35) நிரை 1 இலும் நிரை 3 இலும் காணப்படுவதும், நிரை 2 இலும் நிரை 4 இலும் காணப்படுவதுமான ஓர் எழுத்து எது?

(i) L (ii) M (iii) R

36) முகம் பார்க்கும் கண்ணாடியில் பார்க்கும் போது மாறித்தெரியக்கூடிய எழுத்துக்கூட்டம் எது?

(i) AOV (ii) MXW (iii) BNP

37) கீழுள்ள வினா சம்பவம் ஒன்றின் 5 சந்தர்ப்பங்கள் ஒழுங்கின்றி தரப்பட்டுள்ளன. அவற்றின் சரியான ஒழுங்கை காட்டும் விடையைத் தெரிந்து கீறிடுக.

A - அவர் ஆட்டமிழந்து மைதானத்தை விட்டு வெளியேறினார்
B- துடுப்பாட்ட வீரர் பந்தை ஓங்கி அடிக்க முனைந்தார்
C - துடுப்பாட்ட வீரர் பந்தை அடித்தாட தயாராக நின்றார்
D - பந்து துடுப்பில் படாது நேரே விக்கட்டை தாக்கியது
E - பந்து வீச்சாளர் அவரை நோக்கி வேகமாக பந்தை வீசினார்

(i) BEDCA (ii) CEBDA (iii) EBDCA



- 38- 40 வரையான வினாவுக்கு அட்டவணையில் A,B,C,D எனத்தரப்பட்ட நிரல்களில் சொற்களை அவதானியுங்கள்

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| K | வரம் | ஆட்டம் | நன்று | அருவம் |
| L | கரம் | வாட்டம் | இன்று | அருமை |
| M | தரம் | ஊட்டம் | கன்று | அருகு |
| N | சரம் | நாட்டம் | மென்று | அருவி |
| O | | | | |

A,B,C ஆகிய மூன்று நிரல்களும் ஒத்த ஓசைச் சொற்களால் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன . நிரல் D இல் உள்ள சொற்களின் முதல் இரு எழுத்துக்களும் ஒரே வகையானவை. இந்த நான்கு நிரல்களிலும் உள்ள எந்தவொரு சொல்லும் நான்கிற்கு மேற்பட்ட எழுத்துக்களை கொண்டிருக்கவில்லை. இதன் அடிப்படையில் பின்வரும் வினாக்களுக்கு விடையைத் தெரிந்து கீறிடுக.

38) நிரல் B யில் சேர்க்க முடியாத சொல் எது?

(i) பாட்டம் (ii) தேட்டம் (iii) காட்டும்


39) நிரல் A யில் சேர்க்கக்கூடிய சொல் எது?

(i) காரம் (ii) அகரம் (iii) உரம்

40) நிரை O வில் சேர்த்துக் கொள்ளத்தக்க சொற்கள் எவை?

(i) பரம், விட்டம், சிறந்து, பருத்தல்
(ii) சுரம், கூட்டம், தின்று, அருணன்
(iii) சுரங்கம், கட்டம் , ஒன்று , அருவருக்கு
(iv) மரம், கோட்டம் , உழன்று, அரும்பும்





சமூகசோதி த.பரராசசிங்கத்தால் எழுதப்பட்ட புகழ்பூத்த நீர்வேலி நூலின் வெளியீட்டு விழா நேற்று முன்தினம் மாலை நீர்வேலி றோ.க.த.க. பாடசாலை மண்டபத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் நூல் வெளியீட்டுரையை யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவக் கற்கைகள் வணிக பீட பீடாதிபதி பேராசிரியர் தி.வேல்நம்பி மதிப்பீட்டுரையை கோப்பாய் ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் ச.லலீசன் ஆகியோர் வழங்குவதையும் வலிகாமம் கிழக்கு பிரதேச செயலர் ம.பிரதீபன் நூலை வெளியிட்டு வைக்க தொழிலதிபர் பொ.கிருஷ்ணானந்தன் முதற்பிரதியைப் பெற்றுக் கொள்வதையும் காணலாம். (90,63,48)

# அனர்த்தம் குறித்த விழிப்புணர்வே சுனாமி ஒத்திகை நிகழ்வாகும்

## யாழ்.மாவட்ட அனர்த்த முகாமைத்துவ உதவிப் பணிப்பாளர் தெரிவிப்பு

அரச சட்டதிட்டங்களுக்கு அமைய தேசிய அனர்த்த முகாமைத்துவ சபையினால் கரையோர கிராமங்களில் ஒவ்வொரு வருடமும் பொதுமக்கள் மத்தியில் அனர்த்தம் தொடர்பான விழிப்புணர்வையும், சுனாமி ஒத்திகை நிகழ்வையும் நடாத்தி வருகின்றோம் என யாழ்.மாவட்ட அனர்த்த முகாமைத்துவ உதவிப் பணிப்பாளர் எஸ்.ரவி தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்ட கரையோரங்களை அண்டியுள்ள பகுதிகளில் அனர்த்த முகாமைத்துவ சபையினால் நடைபெற்றுவரும் சுனாமி ஒத்திகை நிகழ்வு பருத்தித்துறை சென்.தோமஸ் பெண்கள் பாடசாலையில் பிரதேசசெயலர் இ.த.ஜெயசீலன் தலைமையில் அண்மையில் நடைபெற்ற போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் இது தொடர்பாக தகவல் தருகையில்,

எதிர்காலத்தில் அனர்த்தங்களினால் ஏற்படும் இழப்புகளை தவிர்க்கும் வகையில் ஒத்திகை செயற்பாடு முன்னெடுக்கப்படுவதுடன் . இச்செயற்பாடு விழிப்புணர்வை ஏற்படுத்துவதாக அமைந்துள்ளது.

இதன்படி சுனாமி அறிவுறுத்தல் விடுக்கப்படும் போது பொதுமக்கள் கரையோரப் பகுதிகளில் உள்ள பொது இடங்களை தயவு செய்து தெரிவு செய்ய வேண்டாம். பிரதேச செயலர மூலம் அறிவிக்கப்பட்ட கடற்கரையோரத்திலிருந்து 3 கிலோமிற்றர் தொலைவில் உள்ள இடங்களை தெரிவு செய்வதுடன் அவ்விடத்தை பற்றி ஏனையோர்களுக்கு தெரியப்படுத்திக் கொள்ள வேண்டும்.

இதேவேளை யாழ்.மாவட்டத்தில் சுனாமி எச்சரிக்கை கோபுரங்கள் 5 உள்ள போதிலும் அவற்றில் ஏதாவது ஒன்று தொழில்நுட்ப கோளாறினால் செயலிழந்து காணப்பட்டால் அரச மத்திய மற்றும் வளிமண்டலவியல் திணைக்களம் ஆகியன தமது அறிவிப்பை 5 நிமிடத்துக்குள் யாழ்.மாவட்டத்தில் அரச அதிபர் ஊடாக ஒவ்வொரு பிரதேச செயலாளர்களுக்கும் அறிவிக்கப்பட வேண்டும்.

அதன் மூலம் கிராம சேவையாளர்களுக்குப் தொலைபேசி ஊடாகவும் அறிவித்து கிராமங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட 5 முக்கிய பிரமுகர்கள் ஊடாக பொது மக்களுக்கு அவை தெரியப்படுத்தப்படும். இதன் மூலம் மக்களை காப்பாற்றுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (116)

# சண்டிலிப்பாய் பிரதேசத்தில் தென்னங்கன்று வழங்கல்

(யாழ்ப்பாணம்)

சண்டிலிப்பாய் பிரதேச செயலக பிரிவில் 28 கிராம அலுவலர் பிரிவுகளுக்கும் தலா 50 குடும்பங்களிற்கு தென்னங்கன்றுகள் வழங்கப்படவுள்ளன.

இப்பகுதிகளில் தென்னை பயிரிட விரும்புபவர்கள் தங்கள் பகுதி பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்களுடன் தொடர்பு கொண்டு தென்னங்கன்றுகளை பெறுவதற்கான பதிவுகளை மேற்கொள்ள முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை தென்னங்கன்றுகள் நாட்டுவதற்கான இடவசதி மற்றும் ஆர்வம் உள்ளவர்களிற்கே இக் கன்றுகள் வழங்கப்படவுள்ளன.

# சுகாதார பணிமனையால் விழிப்புணர்வுப் பேரணி



நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினால் ஒழுங்கு செய்யப்பட்ட சுகாதார விழிப்புணர்வுப் பேரணி ஒன்று கோண்டாவிலிருந்து திருநெல்வேலிச் சந்தி வரை இடம்பெற்றது.

கடந்த வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்குக் கோண்டாவில இராம கிருஷ்ண வித்தியாலயத்திலிருந்து ஆரம்பமான இப் பேரணி பலாலி வீதியூடாக திருநெல்வேலி சந்திக்கு வந்து ஆடியபாதம் வீதி வழியாக பாடசாலை வீதியை அடைந்து மீண்டும் பலாலி வீதிக்கு வந்து திருநெல்வேலி இந்து இளைஞர் மன்றத்தில் நிறைவடைந்தது.

நல்லூர் பிரதேசத்தைச் சேர்ந்த பாடசாலை மாணவர்கள், சுகாதார அதிகாரிகள் குடும்ப நல மாதுக்கள், கிராமசேவையாளர்கள், பிரதேசசபை மற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் ஆசிரியர்கள், யாழ்.பிராந்திய சுகாதார சேவைப்பணிப்பாளர் கல்வி சார் உத்தியோகத்தர்கள் எனப் பலர இதில் கலந்து கொண்டனர்.

மதுபானம் மற்றும் புகைத்தலுக்கு எதிராகவும், ஆரோக்கியத்தைப் பேணும் விழிப்புணர்வை ஏற்படுத்தவும் இப் பேரணி, சுகாதாரவாரத்தை முன்னிட்டு ஒழுங்குபடுத்தப்பட்டிருந்தது. (137)

# மொழிமுனை விவாதப் போட்டி வடமாகாணத்தின் முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

இலங்கை தமிழ் விவாதிகள் கழகத்தினால் நாடளாவிய ரீதியில் நடாத்தப்பட்ட மொழிமுனை 2014 விவாதச் சுற்றுப் போட்டியில் வடமாகாணத்தில் மாவட்ட ரீதியாக முதன் மூன்று இடங்களை பெற்ற பாடசாலைகளின் விபரம் வெளியிடப்பட்டுள்ளது.

பாடசாலை மாணவர்களிடையே அருகிவரும் விவாதக் கலையினைவளர்த்தெடுக்கும் நோக்குடனும் மாணவர்களிடையே ஆளுமையை விருத்தி செய்யும் நோக்குடனும் இப் போட்டி நடாத்தப்பட்டது.

இப்போட்டியில் மாவட்ட ரீதியில் முதல் இரு இடங்களைப் பெற்ற பாடசாலைகள் அகில இலங்கை ரீதியிலான இறுதிச் சுற்றுப் போட்டியில் கலந்து கொள்ளவுள்ளன.

மாவட்ட ரீதியாக போட்டி முடிவுகள் வருமாறு,

மன்னார் மாவட்டத்தில் 8 பாடசாலைகள் பங்குபற்றின.

சித்தி விநாயகர் இந்துக் கல்லூரி, புனித சவேரியார் ஆண்கள் கல்லூரி, புனித சவேரியார் பெண்கள கல்லூரி என்பன வெற்றி பெற்றன.

வவுனியா மாவட்டத்தில் 14 பாடசாலைகள் பங்குபற்றின. இதில் இறம்பைக்குளம் மகளிர் மகாவித்தியாலயம், புதுக்குளம் மகாவித்தியாலயம், இலங்கைத் திருச்சபை தமிழ் மகா வித்தியாலயம் என்பன வெற்றி பெற்றன.

கிளிநொச்சி மாவட்டத்தில் 9 பாடசாலைகள் பங்கு பற்றின. இதில் கிளிநொச்சி மத்திய கல்லூரி, உருத்திரபுரம் மகா வித்தியாலயம், கிளிநொச்சி பாரதி வித்தியாலயம் என்பன வெற்றி பெற்றன.

யாழ்.மாவட்டத்தில் 16 பாடசாலைகள் பங்குபற்றின. இதில் வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை, தெல்லிப்பழை யூனியன் கல்லூரி, பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி என்பன வெற்றி பெற்றன.

முல்லைத்தீவு மாவட்டத்தில் 3 பாடசாலைகள் பங்கு பற்றின. இதில் முல்லைத்தீவு வித்தியானந்த கல்லூரி, முல்லைத்தீவு மகா வித்தியாலயம், அளம்பில் உரோமன் கத்தோலிக்க தமிழ் மகா வித்தியாலயம் என்பன வெற்றி பெற்றன. (63)




வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :- ...................................

முகவரி :- ...................................

பிறந்த ஆண்டு :- ...................................

கூப்பன் ஐந்தும், புகைப்படமும்

...............................

பெற்றோர் கையொப்பம்

# காங்கிரஸ் கட்சியை தூக்கி எறிந்தால் இந்தியா வளமான வல்லரசாகும்

## முதல்வர் ஜெயலலிதா



காங்கிரஸ் கட்சியைத் தூக்கி எறிந்துவிட்டு மக்கள் அனைவரும் மக்களவைத் தேர்தலில் அ.தி.மு.க.வுக்கு வாக்களித்தால் இந்தியா வல்லரசாகும் என்று கள்ளக்குறிச்சி பிரசாரப் பொதுக் கூட்டத்தில் அ.தி.மு.க. பொதுச் செயலாளரும் முதல்வருமான ஜெயலலிதா தெரிவித்துள்ளார்.

கள்ளக்குறிச்சி அருகே உலகங்காத்தானில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை கள்ளகுறிச்சி மக்களவை அ.தி.மு.க. வேட்பாளர் காமராஜை ஆதரித்து ஜெயலலிதா பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றினார். கூட்டத்தில் அவர் பேசியதாவது:

நடைபெற உள்ள தேர்தல் ஆட்சி மாற்றத்திற்கான சாதாரண தேர்தல் அல்ல. இந்திய மக்கள் விடுதலை பெறும் தேர்தலாகும். 2 ஜி ஊழலை முன்னின்று நடத்திய கட்சி தி.மு.க. காங்கிரஸும் தி.மு.க.வும் இணைந்து சாமான்யமக்களுக்கு எதிராக செயற்பட்டதால் பொருளாதாரம் ஸ்தம்பித்தது.

மத்திய அரசின் மாற்றாந் தாய் மனப்பான்மையால் கடந்த 33 மாதங்களில் தமிழகத்திற்கு கிடைக்கவேண்டிய திட்டங்கள் கிடைக்கவில்லை. ஆனாலும் தமிழக மக்களுக்கு சலுகை விலையில் அத்தியாவசிய பொருட்களை அளித்துள்ளேன். மேலும் சமையல் எரிவாயுக்கான மதிப்புகூட்டு வரியை இரத்து செய்துளளேன். இந்து, முஸ்லீம், கிறிஸ்துவ மக்கள் புனிதப் பயணம் மேற்கொள்ளவும் மானியம் அளித்துள்ளேன்.

அது மட்டுமன்றி காங்கிரஸ் ஆட்சியை தூக்கி எறியவேண்டும். நீங்கள் வேறுகட்சிக்கு வாக்களித்தால் உங்கள் வாக்கு வீணாகிவிடும். அ.தி.மு.க. வுக்கு வாக்களித்தால் இந்தியா வளமான வல்லரசாகவும், வலிமையான நல்ல ரசாகவும் அமையும் என்று ஜெயலலிதா தெரிவித்தார்.

# பாரதிய ஜனதா கூட்டணிக்கு என்.ஆர். காங்கிரஸ் ஆதரவு

நாடாளுமன்ற தேர்தலில் தமிழக அளவில் பாரதீய ஜனதா கூட்டணியில் தே.மு.தி.க., பா.ம.க., ம.தி.மு.க. உள்ளிட்ட கட்சிகள் இடம் பெற்றுள்ளன. புதுவையில் ஆளும் கட்சியான என்.ஆர். காங்கிரஸ் இந்த கூட்டணியில் இடம் பெற்றுள்ளது.

பா.ம.க. வேட்பாளராக ஏற்கனவே அனந்தராமன் அறிவிக்கப்பட்டிருந்தார். அவர் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டு வருகிறார். இதற்கிடையே என்.ஆர். காங்கிரஸ் இராதாகிருஷ்ணனை வேட்பாளராக அறிவித்துள்ளது.

பாரதீய ஜனதா கூட்டணியில் என்.ஆர்.காங்கிரஸ் இடம் பெற்றிருப்பதாக பாரதீய ஜன்தா டில்லி மேலிடம் ஏற்கனவே அறிவித்துள்ளது. இதனால் பா.ம.க. வேட்பாளர் அனந்தராமன் வாபஸ் பெறுவார் என்று எதிர்பார்க்கப்பட்டது.

இது சம்மந்தமாக ஆலோசனை நடத்த மாநில பா.ம.க. பொதுக் குழுக் கூட்டம் நடைபெற்றது. அதில் பா.ம.க. வேட்பாளர் வாபஸ் பெறுவதில்லை என்று முடிவு எடுக்கப்பட்டது.

இதன் காரணமாக புதுவையில் பாரதீய ஜனதா கூட்டணி உடைந்துள்ளது. என்.ஆர்.காங்கிரஸ், பாரதீய ஜனதா கூட்டணியில் இடம் பெற்றுள்ளதால் புதுவை மாநில பாரதீய ஜனதா என்.ஆர்.காங்கிரசுக்கு ஆதரவாக செயல்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது

# ஆயுதமேந்திய கும்பலின் தாக்குதலில் நைஜீரியாவில் நூறு பேர் கொலை

மத்திய நைஜீரியாவில் உள்ள 3 கிராமங்களுக்குள் அதிரடியாக புகுந்து ஆயுதமேந்திய கும்பல் நடத்திய பயங்கர தாக்குதலில் 100 பேர் கொல்லப்பட்டனர்.

தானியங்கி துப்பாக்கிகள், வீச்சரிவாள் உள்ளிட்ட ஆயுதங்களுடன் வந்த சுமார் 40 பேர் அங்வான் கதா, சென்ஷியி, அங்வான் சங்வாய் ஆகிய கிராமங்களுக்குள் புகுந்து கண்மூடித்தனமாக தாக்கினர். வீடுகளையும் தீவைத்து கொளுத்தினர் என தெரியவந்துள்ளது.

உலகச் செய்திகள்

# ஒரிஸா தொழிலாளர்கள் தொடர்பாக தலைமைச் செயலாளர்களிடம் கேள்வி

## தேசிய மனித உரிமை ஆணையம்

தமிழகத்தில் செங்கல் சூளைகளில் பணிபுரியும் ஒரிஸா மாநில ஒப்பந்தத் தொழிலாளர்கள் மக்களவைத் தேர்தலில் வாக்களிக்க முடியாதது குறித்து விளக்கம் கேட்டு, தமிழகம் உள்ளிட்ட 3 மாநிலங்களின் தலைமைச் செயலர்களுக்குஅறிவிப்பு கடிதம் அனுப்ப, தேசிய மனித உரிமைகள் ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

தமிழ்கம், ஆந்திரம் மற்றும் கர்நாடகத்தில் உள்ள செங்கல் சூளைகளில், ஒரிஸா மாநிலத்தைச் சேர்ந்த 3 இலட்சத்துக்கும் மேற்பட்ட ஒப்பந்தப் பணியாளர்கள் வேலை செய்கின்றனர்.

இவர்களின் ஒப்பந்த காலம் எதிர்வரும் ஜூன் மாதம் வரை உள்ளதால், ஒரிஸாவில் ஏப்ரல் 10 மற்றும் 17ஆம் திகதிகளில் நடைபெற உள்ள மக்களவைத் தேர்தலில் இப்பணியாளர்கள் வாக்களிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக அண்மையில் செய்தி வெளியானது.

இந்த செய்தியின்படி, குறிப்பிட்ட மாநிலங்களில் பணியாற்றும் ஒடிஸா மாநில ஒப்பந்தத் தொழிலாளர்கள் மக்களவைத் தேர்தலில் வாக்களிக்க முடியாத நிலை இருந்தால், அது அவர்களின் மனித உரிமையை மீறுவதாகும். எனவே, இதுதொடர்பாக, தமிழகம், ஆந்திரா மற்றும கர்நாடக மாநில தலைமைச் செயலர்கள் இரண்டு வாரங்களுகுள் உரிய விளக்கம் அளிக்க வேண்டும் என தேசிய மனித உரிமைகள் ஆணையம் உத்தரவிட்டுள்ளது

# மெக்சிக்கோ சென்ற விமானம் அமெரிக்காவில் தரையிறக்கம்



சன்விங் ஏயாலைன்ஸ் என்ற தனியார் விமான நிறுவனத்தின் போயிங் 737 விமானம் ஒன்று 181 பயணிகளுடன் கனடாவிலிருந்து புறப்பட்டு மெக்சிகோவிற்கு பறந்து கொண்டிருந்தது. இந்த விமானத்ம் புறப்பட்ட சிறிது நேரத்தில் காற்றில் ஏற்பட்ட மாறுபாட்டினால் விமானம் குலுங்கத் தொடங்கியது. அப்போது விமான ஊழியர் ஒருவர் தலையில் இடித்துக் கொண்டதில் காயமடைந்துள்ளார். மற்றொரு பணிப் பெண்ணும் உயரத் தூக்கியடிக்கப்பட்டு கீழே விழுந்துள்ளார்.

இதனால் அந்த விமானம் அமெரிக்காவின் மான்டெனா பகுதியில் இருந்த ஹெலினா பிராந்திய விமான நிலையத்தில் அவசரமாகத் தரையிறக்கம் செய்யபபட்டது. அடிபட்ட அந்த இரு ஊழியர்களும் மருத்துவ சிகிச்சைக்காக அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர். பின்னர் நேற்று முன்தினம் மாலை மற்றொரு விமானத்தில் அவர்கள் அனைவரும் மெக்சிகோவின் புவர்டோ வல்லர்டாவிற்கு அனுப்பிவைக்கப்பட்டதாக விமான நிலைய அதிகாரிகள் தெரிவித்தனர்.

# மலேசிய விமானத்தை தீவிரவாதிகள் கடத்தி இந்தியாவை தாக்க முற்படலாம்

## நியூயோர்க் டைம்ஸ் நாளிதழ் அதிர்ச்சித்தகவல்

அமெரிக்காவின் உலக வர்த்தக மைய இரட்டை கோபுரங்கள் மீது விமானத்தை மோதியது போன்று மலேசிய விமானத்தைக் கடத்தி ஏதாவது ஒரு இந்திய நகரம் மீது தாக்குதல் நடாத்த தீவிரவாதிகள் திட்டமிட்டிருக்கலாம் என்று நியூயோர்க் டைம்ஸ் நாளிதழ் திடுக்கிடும் தகவலை வெளியிட்டுள்ளது.

மலேசிய தலைநகர் கோலாலம்பூரில் இருந்து சீனத் தலைநகர் பெய்ஜிங்குக்கு கடந்த 8ஆம் திகதி புறப்பட்ட மலேசியன் ஏயாலைன்ஸ் விமானம் நடுவானில் மாயமாய் மறைந்தது. அந்த விமானம் கடலில் விழுந்திருக்கலாம் என்று முதலில் சந்தேகிக்கப்பட்டது.

ஆனால் ரேடாரில் இருந்து மறைந்த பிறகு 7 மணி நேரத்துக்கும் அதிகமாக அந்த விமானம் பறந்திருப்பது செயற்கைக் கோளில் பதிவாகியுள்ளது.

எனினும் விமானம் எங்கு பறந்தது என்பதை துல்லியமாகக் கண்டுபிடிக்க முடியவில்லை. அநேகமாக அந்தமான் கடல் பகுதி அல்லது கஜகஸ்தான் எல்லையில் விமானம் பறந்திருக்கலாம் என்று புலனாய்வு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதுவரை கிடைத்த தகவல்களின் அடிப்படையில் போயிங் விமானத்தை நன்கு கையாளத் தெரிந்தவர்களே விமானத்தை திட்டமிட்டு கடத்தியிருக்கலாம் என்று உறுதியாக நம்பப்படுகிறது.

இந்நிலையில் அமெரிக்க முன்னாள் அதிபர் பில் கிளின்டன் நிர்வாகத்தில் வெளியுறவுத் துறை துணைச் செயலாளராகப் பணியாற்றிய ஸ்டோரப் தபோத் என்பவர் டுவிட்டர் சமூக வலைதளத்தில் அதிர்ச்சி தகவல்களை வெளியிட்டுள்ளார்.

மலேசிய விமானம் பறந்த திசை, அதன் எரிபொருள் கொள்ளளவு, அதிக தொலைவுக்குப் பறக்கும் திறன் ஆகியவற்றைக் கணக்கிடும்போது சில விஷயங்கள் நெருடுகின்றன. அமெரிக்காவின் உலக வர்த்தக மைய இரட்டை கோபுரங்களை அல்-காய்தா தீவிரவாதிகள் விமானங்களை மோதி தகர்த்தது போன்று இந்தியாவின் ஏதாவது ஒரு நகரம் மீது தாக்குதல் நடத்த தீவிரவாதிகள் சதித்திட்டம் தீட்டியிருக்கலாம் என்று அவர் தெரிவித்துளளார்.

இந்தச் செய்தி நியூயோர்க் டைம்ஸ் நாளிதழில் வெளியாகி பெரும் அதிர்ச்சி அலைகளை ஏற்படுத்தியுள்ளது.

கடந்த 9 நாட்களாக விமானத்தை தேடியும் இதுவரை எந்தத் தடயமும் கிடைக்கவில்லை. இந்நிலையில் விமானி ஜகாரி அகமது ஷா (வயது-53) மற்றும் துணை விமானி பாரிக் அப்துல் ஹமீது (27) ஆகியோரின் வீடுகளில் மலேசிய பொலிஸார் சோதனை நடத்தியுள்ளனர். விமானி ஜகாரி அகமது ஷாவின் வீட்டில் விமானத்தின் மாதிரி கட்டுப்பாட்டு அறை அமைக்கப்பட்டிருந்தது. .அங்கிருந்த கருவிகளை பறிமுதல் செய்த பொலிஸார் ஆய்வுக்காக எடுத்துச் சென்றுள்ளனர்.

மேலும் விமானி மற்றும் துணை விமானியின் அரசியல் தொடர்புகள்,



மதரீதியான செயற்பாடுகள் குறித்தும் தீவிரமாக விசாரணை நடத்தப்பட்டு வருகிறது.

மலேசிய போக்குவரத்துத் துறை அமைச்சர் டாடக் செரி ஹிஸ்காமுதின் டன் ஹுசைன் கோலாலம்பூரில் நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் கூறியதாவது:

விமானத்தில் 8 மணி நேரம் பறப்பதற்கான எரிபொருள் மட்டுமே நிரப்பப்பட்டிருந்தது. கூடுதல் எரிபொருள் இல்லை. தீப்பிடிக்கும் பொருட்களும் விமானத்தில் இல்லை.

விமானம் கடத்தப்பட்டதா, தீவிரவாதிகளின் கைவரிசையா என்பதை உறுதியாகக் கூற முடியவில்லை. தொடர்ந்து விசாரணை நடத்தி வருகிறோம். பிணைத தொகை கோரி இதுவரை எந்த அமைப்பும் தொடர்பு கொள்ளவில்லை. விமானத்தில் இருந்த சீனப் பயணிகள் மற்றும இந்திய பயணிகள் குறித்து இருநாடுகளும் முழு விவரங்களை அளித்துள்ளன. இதர நாடுகளிடம் இருந்து தகவல்களை எதிர்பார்த்திருக்கிறோம்.

இப்போது கடற் பகுதி மட்டுமின்றி 11 நாடுகளின் நிலப்பரப்புகளிலும் தேடுதல் பணியை மேற்கொண்டிருக்கிறோம் என்றார்.

# கிரைமியா ரஷ்யாவுடன் சேர இணக்கம்

உக்ரேயின் நாட்டின் பகுதியான கிரை மியாவை ரஷ்யாவின் இணைப்பது குறித்து நேற்று முன்தினம் பொது வாக்கெடுப்பு நடாத்தப்பட்டது.

இதில் 95 சதவீதம் பேர் ரஷ்யாவுடன் இணைய விருப்பம் தெரிவித்துள்ளனர். இதன் மூலம் 1954இல் அப்போதைய சோவியத் குடியரசான ரஷ்யாவுடன் இணைந்திருந்த கிரைமியா மீண்டும் இப்போது ரஷ்யாவுடன் இணையும் வாய்ப்பு உருவாகியுள்ளது. 15 இலட்சம் வாக்காளர்களில் 83 சதவிகிதத்தினர் வாக்களித்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிரைமியா குறித்த வாக்கெடுப்பு, சட்டப்பூர்வமானது என்றும், சர்வதேச விதிகளுக்கு உட்பட்டது என்றும் அமெரிக்க அதிபர் ஒபாமாவிடம் தொலைபேசியில் பேசிய ரஷ்ய அதிபர் விளாதிமிர் புதின் தெரிவித்துள்ளார். எனினும், தனது முடிவில் ரஷ்யா உறுதியாக இருககுமானால், அதன் மீது பொருளாதாரத் தடை விதிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அமெரிக்கா தெரிவித்துள்ளது.

# பாலியல் துஷ்பிரயோகத்தை தடுக்க சமூக மட்டத்தில் விழிப்புணர்வு தேவை




(யாழ்ப்பாணம்)

இன்றைய காலத்தில் பெண்கள், சிறுவர்கள் மீதான துஷ்பிரயோகம், சடங்குகள் சம்பிரதாயங்கள், மூடப்பழக்கவழக்கங்கள் போன்றவற்றில் விழிப்புணர்வு அவசியம் தேவையாகவுள்ளது. விழிப்புணர்வின் ஊடாக மட்டுமே இதனை இல்லாதொழிக்க முடியும் என பெண்கள் விழிப்புணர்வு அரங்கத்தின் தலைவர் ஞானசக்தி நடராசா தெரிவித்தார்.

பெண்கள் விழிப்புணர்வு அரங்கத்தின் சர்வதேச பெண்கள் தின நிகழ்வு கடந்த 9 ஆம் திகதி யாழ். பொது நூல் நிலைய உணவு விடுதியில் நடத்தப்பட்டது. இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

103 ஆவது சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு இங்கு கூடியிருக்கிறோம். இவ்வளவு சவால்களைத் தாண்டி பெண்கள் பல்வேறு துறைகளில் முன்னேறிய போதும் அடிப்படையில் பாரிய சமூக மாற்றங்கள் நிகழவில்லை. பெண்களை சமமாக நோக்கும் நிலை உருவாகவில்லை.

அரசியல் ரீதியாக பெண்கள் ஒரு சில பொறுப்புக்களை வகித்தாலும் ஒட்டு மொத்தமாக 5 வீதம் கூட இல்லாதது வருந்தத்தக்கது. அரசியலில் அவர்களது பிரதிநிதித்துவத்தை அதிகரிக்காமல் சமூக வளர்ச்சியையோ மாற்றங்களையோ அடைந்து விடமுடியாது.

அவற்றை அடைவதற்கு எமது சமூக அமைப்பு முறையே தடையாக இருக்கிறது. கிராமங்களில் பெண்கள் பொருளாதார ரீதியாக பின்தங்கியிருப்பதும் தம்மைச் சுற்றியிருக்கும் ஒடுக்கு முறைகளை அறியாதவர்களாக இருப்பதும் அவர்களுக்கு பின்னடைவாக இருக்கிறது.

இதற்கு போதிய விழிப்புணர்வு இன்மையே காரணமாகும். அந்தவகையில் கிராமங்களில் பின்தங்கிய பிரதேசங்களில் இது தொடர்பில் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் என்றார்.

இந்நிகழ்வில் தொடர்ந்து புங்குடுதீவைச் சேர்ந்த தணிகாம்பிகை உரையாற்றும் போது, கிராமங்களில் மதுபாவனையால் பெண்கள் மன, உடல் ரீதியாக பொருளாதார ரீதியாக பாதிக்கப்படுவதாக எடுத்துரைத்தார். அவர்களுக்கு சமூக பாதுகாப்பு இல்லாதததால் தற்கொலை போன்ற அனர்த்தங்களும் நிகழ்கின்றன என்றார்.

தொடர்ந்து பூம்புகாரைச் சேர்ந்த ரஞ்சனாதேவி, உரும்பிராய் மாதர் சங்கத்தைச் சேர்ந்த புஸ்பமலர், கீரிமலை மாவை கலட்டியைச் சேர்ந்த அற்புதவதனி, கைதடி நவபுரத்தைச் சோந்த சுதர்மிளா, ஆசிரியர் வளர்மதி நுணாவில் அன்னை திரேசா, மலர், சசி தங்கராசா, ஹெலன் ஆகியோரும் உரையாற்றினர்.

## மேற்குலகின்...

முடிவெடுக்கப்பட்டுள்ளதா என்பது குறித்து எமக்கு எதுவும் தெரியாது.

எவ்வாறெனினும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைவதும் இணையாமல் இருப்பதும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸை பொறுத்த விடயமாகும். அது அவர்களது விருப்பமுமாகும்.

தற்போதைய நிலைமையில் அமைச்சர் ரவூப் ஹக்கீம் அரசாங்கத்தை விட்டு விலகிச் செல்லமாட்டார் என்று நம்புகின்றோம். ஆனால் அவ்வாறு விலகிச் சென்றாலும் எங்களுக்குப் பிரச்சினை இல்லை.

முஸ்லிம் காங்கிரஸ் கூட்டமைப்புடன் இணைவது அரசாங்கத்துக்கு ஆபத்தான விடயமல்ல என்பதனை அரசாங்கத்தின் சார்பில் தெளிவான முறையில் கூறுகின்றோம் என அவர் மேலும் தெரிவித்தார்.

## அன்பகம்...

போதும் நீதவான் வஹாப்தீன் வவுனியா அன்பகம் சிறுவர் இல்லத்தில் அவரை அனுமதித்துள்ளார்.

மகாதேவா சிறுவர் இல்லம், செஞ்சோலை சிறுவர் இல்லம் என்பன சிறுவர் நன்நடத்தை அதிகாரிகளினால் சிபார்சு செய்யப்பட்ட போதிலும் வவுனியா அன்பகம் சிறுவர் இல்லம் அருட்சகோதரிகளின் பராமரிப்பில் இருப்பதால் விபூசிகாவும் அண்மையில் பூப்படைந்த சிறுமி என்பதாலும் பெண்களின் பராமரிப்பிலுள்ள அன்பகத்திற்கு கிளிநொச்சி நீதிமன்று அனுமதிதுள்ளது. இதனைத் தொடர்ந்து விபூசிகா அருட்சகோதரிகளால் வவுனியாவிற்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளார்.

நீதிமன்றில் பெரும்பாலான சட்டத்தரணிகள் அனைவரும் நேற்றைய தினம் விபூசிகாவிற்கு ஆதரவாக தங்கள் வாதங்களை முன்வைத்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (29)

## சீரணி...

வசித்துவந்த குறித்த வயோதிபர் மனநோயினால் பாதிக்கப்பட்டிருந்ததாகவும், அங்கிருந்து சண்டிலிப்பாய்க்கு தனியே வந்திருந்த இவர் தனது சகோதரனுடன் வசித்து வந்த நிலையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை வீட்டிலிருந்து காணாமற்போயிருந்ததாகவும், இதன் பின்னர் நேற்றுக்காலை குறித்த கிணற்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் குறித்த வயோதிபர் கயிறு ஒன்றைப் பயன்படுத்தி தன்னைக் கட்டிக்கொண்டு குறித்த கிணற்றில் பாய்ந்து தற்கொலை புரிந்திருப்பதாகவும் இந்தச் சம்பவம் குறித்து மேலும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தச் சம்பவம் குறித்து மானிப்பாய் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர். விசாரணைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (பா)

## நடமாடும்...

என்ற சட்டத்தின் பாரதூரமான விளைவுகளை எடுத்துக் காட்டுவதாகவும் அமைந்திருக்கிறது என தெரிவித்தார்.

ஐ.நா.வின் மனித உரிமைகள் அவையில் இலங்கைக்கு எதிராகப் பிரேரணையொன்று கொண்டுவரப்படவுள்ள சந்தர்ப்பத்தில் மிகவும் முக்கியமான மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள் இருவரைக் கைதுசெய்திருப்பதானது, இலங்கையின் மனித உரிமைச் செயற்பாட்டு நிலைமைகள் தொடர்பில் சர்வதேச விசாரணையொன்று அவசியம் என்ற சர்வதேச அழுத்தத்தை மேலும் அதிகரிக்கவே வழிகோலியுள்ளது என்றும் கீர்த்தி தென்னக்கோன் தமது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

## கண்ணீர்...

நிகழ்வும் இடம்பெற்றது. இதனையடுத்து பூதவுடல் அவரது உறவினர்கள், கல்லூரியின் பழைய மாணவர்கள் உட்பட பல்வேறு தரப்பினரின் கண்ணீர் காணிக்கையுடன் கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

நேற்றைய இறுதிக் கிரியை நிகழ்வில் பொலிஸாரின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது.

இதேவேளை அமலனின் துயர நிகழ்விற்கு அனுதாபம் செலுத்தும் வகையில் நேற்றைய தினம் பற்றிக்ஸ், யாழ்ப்பாணக் கல்லூரிகளில் கல்விச் செயற்பாடுகளும் நடைபெறவில்லை.

### இடமாற்ற சர்ச்சை

# பொதுச்சுகாதார பரிசோதகர்கள் யாழ். மாவட்டத்தில் பணிப்புறக்கணிப்பு

சுகாதாரத் திணைக்களத்தின் கீழ் யாழ். மாவட்டத்தில் பணியாற்றும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் நேற்றுக் காலை முதல் வெளிக்கள வேலைப் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.

சுகாதாரத் திணைக்களத்தின் கீழ் மாற்றப்பட்ட பொதுச் சுகாதார பரிசோதகர்கள் மூவரையும் மீண்டும் பிரதேச சபைகளின் கீழ் மாற்றவேண்டும் எனக்கோரியே பொதுச் சுகாதார பரிசோதகர்கள் வெளிக்களப் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

யாழ். மாவட்டத்தின் சங்கானை, நல்லூர், தெல்லிப்பழை ஆகிய பிரதேச சபைகளின் கீழ் பணியாற்றி வந்த பொதுச்சுகாதாரப் பரிசோதகர்கள் மூவருக்கு "காடர்" (பணியாற்றுவதற்கான அனுமதி) இல்லாத காரணத்தினால் அவர்களை சுகாதாரத் திணைக்களத்தின் கீழ் இடமாற்றம் செய்யுமாறு வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி கடந்த வெள்ளிக்கிழமை உத்தரவிட்டிருந்தார்.

அதற்கமைய பிரதேச சபைகளின் கீழ் கடமையாற்றி வந்த பொதுச்சுகாதாரப் பரிசோதகர்கள் பிராந்திய சுகாதாரப் பணிமனையில் கையெழுத்திட்டு தங்கள் பணிகளை மேற்கொண்டு வந்தனர்.

இந்நிலையில் குறித்த பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களை மீண்டும் பிரதேச சபைக்கு மாற்றும்படி சுகாதாரத் திணைக்களத்தின் கீழ் யாழ்.மாவட்டத்தில் பணியாற்றும் 70 இற்கும் மேற்பட்ட பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் வெளிக்கள வேலைப் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.

அலுவலகங்களுக்கு வருகை தரும் இவர்கள் வெளிக்கள வேலைகளில் ஈடுபடாமல் இந்தப் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (25)

### யாழ். நகரப் பகுதியில்

# ஆபாசப்பட இறுவட்டுக்களை விற்பனை செய்தவர்கள் கைது

யாழ். நகரில் ஆபாசப்பட இறுவட்டுக்களை விற்பனை செய்த 2 இறுவட்டு விற்பனை நிலையங்கள் நேற்றைய தினம் முற்றுகையிடப்பட்டதுடன், சந்தேகத்தின் பேரில் இருவரை கைது செய்ததாகவும் யாழ்ப்பாணப் பொலிஸ் நிலைய பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ். நாவலர் வீதியிலும் கன்னாதிட்டி சந்தியிலுமுள்ள 2 இறுவட்டு விற்பன்ன நிலையங்களே முற்றுகையிடப்பட்டன. மேற்படி விற்பனை நிலையங்களிலிருந்து 20 ஆபாசப்பட இறுவட்டுக்களை கைப்பற்றியதாகவும் பொலிஸார் கூறினர்.

மேற்படி விற்பனை நிலையங்களில் ஆபாச இறுவட்டுக்கள் விற்பனை செய்யப்படுவதாக யாழ். மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் றொஹான் டயஸின் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த தகவலைத் தொடர்ந்து, அவ்விடத்திற்குச் சென்ற பொலிஸ் குழுவினர் இம்முற்றுகையை மேற்கொண்டதாகவும் பொலிஸார் கூறினர்.

# மாற்றுத்திறனாளிகளை சந்தித்தது உலக வங்கிக்குழு

யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்துள்ள உலக வங்கி குழுவினர் நேற்றைய தினம் வலி தெற்கு பிரதேச செயலகத்தில் விசேட தேவையுடையோரை சந்தித்தது. நேற்றுக் காலை 10.30 மணியளவில் உடுவில் பிரதேச சபை மண்டபத்தில் இச்சந்திப்பு இடம்பெற்றது.

வலி. தெற்கு பிரதேசத்தில் உலக வங்கியின் நிதியுதவி பெறும் 50 மாற்றுத் திறனாளிகளை சந்தித்து கொடுப்பனவுகளைப் பெறுவதில் அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக கலந்துரையாடினர்.

இதேவேளை மாலை 3 மணிக்கு வலி. வடக்கு பிரதேச சபையில் மாற்றுதிறனாளிகள் மூவரைச் சந்தித்து அவர்களது கொடுப்பனவு தொடர்பான பிரச்சினைகள் பற்றிக் கலந்துரையாடினர்.

இச்சந்திப்பில் சமூக சேவை அமைச்சின் அதிகாரிகள், உலக வங்கியின் அதிகாரிகள் மற்றும் யாழ். மாவட்ட செயலக சமூக அபிவிருத்தி அதிகாரிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

## இளைஞர்...

நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்தார். இவரை குடும்பத்தினர் சென்று சந்தித்து உரையாட அனுமதிக்கப்பட்டனர். பின்னர் இவரை நீதிமன்றத்தில் ஆஜர்செய்ய பொலிஸார் ஏற்பாடு செய்திருந்தனர்.

அதேவேளை பயங்கரவாத தடுப்புப் பிரிவினரால் தேடப்படும் இருவர் தொடர்பான தகவல்கள் அறிந்தவர்கள் தம்முடன் தொடர்பு கொள்ளும்படி பொதுமக்களை கோரும் சுவரொட்டிகள் கிளிநொச்சி மற்றும் வடமராட்சி ஆகிய பகுதிகளில் பரவலாக ஒட்டப்பட்டிருக்கிறது.

## மனித...

பெறுவதை அரசாங்கம் உறுதிப்படுத்தவேண்டும் என்றும் தெரிவித்துள்ளது.

கடந்த காலத்திலும் நிகழ்காலத்திலும் நிகழ்ந்துகொண்டிருக்கும் மனித உரிமைகள் சார்ந்த இதுபோன்ற விடயங்கள்தான் ஐ.நா. மனித உரிமைப் பேரவையில் இலங்கை பற்றிய பிரேரணைகளை முன்வைப்பதற்கு சர்வதேச சமூகத்தை இட்டுச் சென்றது. இந்த ஆகப்பிந்திய சம்பவங்களின் காரணமாக மனித உரிமைகள் பேரவையின் தொடர்ச்சியான கண்காணிப்பு இலங்கையின் மீது தேவை என்பதை நம்பும் சூழலுக்குள்ளே நாங்கள் தள்ளப்படுகின்றோம் என்றும் அமெரிக்கத் தூதரகம் மேலும் தெரிவித்துள்ளது.

## ஊற்றுப்புலம் கிராம அபிவிருத்திச் சங்க விவகாரம்

# நிதி மோசடி செய்த பணத்தை உடன் செலுத்தக் கோரிக்கை

கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட ஊற்றுப்புலம் கிராமத்தின் முன்னைய கிராம அபிவிருத்திச் சங்கத்தினரால் கிராம அபிவிருத்திச் சங்க பணம் ஒரு இலட்சத்து 48 ஆயிரத்து 606 ரூபா மோசடி செய்யப்பட்டமை பிரதேச செயலகத்தின் கணக்காய்வுகள் மூலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதனை உடன் செலுத்துமாறும், தவறும் பட்சத்தில் சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் கரைச்சி பிரதேச செயலர் கோ. நாகேஸ்வரனால் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது கடந்த 2010 ஆம் ஆண்டு மீள் குடியேற்றத்தின் பின்னர் நா.சின்னையாவை தலைவராகக் கொண்ட கிராம அபிவிருத்திச் சங்கம் தெரிவு செய்யப்பட்டது. இந்தக் கிராம அபிவிருத்திச் சங்கத்தினர் தங்களின் பதவிக்காலத்தில் ஒரு பொதுக்கூட்டத்தினையேனும் கூட்டி மக்களுக்கு தங்களின் நடவடிக்கைகளை வெளிப்படுத்தாது கணக்குகளையும் சீராக மேற்கொள்ளாது செயற்பாடுகளை முன்னெடுத்து வந்தனர்.

இந்த நிலையில் சங்கத்தின் பதவிக்காலம் முடிந்த பின்னர் மக்களால் குறித்த மூத்த பிரஜையைத் தலைவராக கொண்ட கிராம அபிவிருத்திச் சங்கம் நிராகரிக்கப்பட்டு கடந்த வருடம் புதிய கிராம அபிவிருத்திச் சங்கம் தெரிவு செய்யப்பட்டது.

புதிய கிராம அபிவிருத்திச் சங்கம் தெரிவு செய்யப்பட்ட பின்னர் பழைய நிர்வாகத்தினர் சங்கத்தின் சொத்துக்கள், பொறுப்புக்கள் மற்றும் ஆவணங்கள் என்பவற்றை புதியவர்களிடம் சட்டரீதியாக கையளிக்கவேண்டிய நிலையில் சங்கத்தின் கணக்குகளை மட்டும் ஒரு வருடம் கழித்து முறையாகக் கையளிக்கவில்லை இந்த நிலையில் புதிய கிராம அபிவிருத்திச் சங்கமும், மக்களும் மாவட்ட அரச அதிபர், பிரதேச செயலர், மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆகியோரின் கவனத்திற்கு விடயத்தினை கொண்டுவந்தனர்.

இதனையடுத்து கரைச்சி பிரதேச செயலகத்தினரால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளுக்கு அமைய கணக்காய்வுகள் மேற்கொள்ளப்பட்ட நிலையில் மூத்த பிரஜையை தலைவராகக் கொண்டு செயற்பட்ட முன்னைய கிராம அபிவிருத்திச் சங்கத்தினரால் ஒரு இலட்சத்து 48 ஆயிரத்து 606 ரூபா நிதி மோசடி செய்யப்பட்டமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

பிரதேச செயலகத்தினால் கணக்காய்வு செய்யப்பட்டு மோசடி செய்யப்பட்டதான ஒரு இலட்சத்து 48 ஆயிரத்து 606 ரூபா நிதியினை உடனடியாக செலுத்தி புதிய நிர்வாகத்தின் செயற்பாடுகளை சீராக முன்னெடுப்பதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறும், தவறும் பட்சத்தில் பழைய நிர்வாகத்திற்கு ஏதிராக சட்ட ரீதியான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும கரைச்சி பிரதேச செயலர் கோ. நாகேஸ்வரனால் எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான நபர்கள் பொது அமைப்புகளில் பொதுப் பணி என்ற போர்வையில் அங்கம் வகிப்பது பொது மக்களின் பணத்தில் தங்களின் நலன்களை கொண்டு செல்வதற்கே எனவும் இவர்கள் கிராமத்தின் அபிவிருத்திக்கு அப்பால் தங்களின் அபிவிருத்திகளுக்கே அதிக முக்கியத்துவம் கொடுக்கின்றவர்கள் என்றும் பொது மக்களால் விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது. (29)

# தாதியர்கள் இன்று பணிப்பகிஷ்கரிப்பு

(கொழும்பு)

தாதியர்களுக்கான மகப்பேற்று மற்றும் உளவியல் பயிற்சி நெறிகளுக்கு சட்டரீதியாக அனுமதி வழங்காமைக்கும், பயிற்சி நெறி பயிலுநர்களுக்கு 2 மாத கொடுப்பனவு வழங்காமை, சம்பந்தப்பட்ட தரப்பினரிடம் பலதடவை எடுத்துரைத்த போதும் எவ்வித தீர்வும் கிடைக்காமையினால் நாடு தழுவிய ரீதியில் அனைத்து வைத்தியசாலைகளிலும் இன்று மூன்று மணி நேர வேலை நிறுத்தப் போராட்டத்தை மேற்கொள்ளவுள்ளதாக அகில இலங்கை தாதியர் சங்கத்தின் தலைவர் காமினி குமாரசிங்க தெரிவித்தார்.

இதன்படி இன்று காலை 10.30 மணி தொடக்கம் மதியம் ஒரு மணி வரை குறித்த போராட்டம் முன்னெடுக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

# மத நல்லிணக்கம் இல்லையென்ற ஹக்கீமின் குற்றச்சாட்டு பொய்

## பொதுபலசேனா அறிவிப்பு

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீமினால் வெளியிடப்பட்ட அறிக்கையானது பிழையானது என பொதுபலசேனா அமைப்பு அறிவித்துள்ளது.

இலங்கையில் மத நல்லிணக்கம் கிடையாது என்ற வகையில் ஹக்கீம் ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் ஆணையாளர் நவநீதம்பிள்ளைக்கு அறிக்கை வழங்கியுள்ளதாகத் தெரிவித்துள்ளது.

அமைச்சர் ஹக்கீம் தனது பிழையை உடனடியாக திருத்திக்கொள்ள வேண்டுமென வலியுறுத்தியுள்ளது.

இலங்கையில் மதச் சுதந்திரம் கிடையாது என ஹக்கீம் அறிக்கையில் குற்றம் சுமத்தியுள்ளதாக பொதுபலசேனா குறிப்பிட்டுள்ளது.

ஹக்கீமின் அறிக்கையில் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் அடிப்படையற்றவை என சுட்டிக்காட்டியுள்ளது.

பொதுபலசேனா அமைப்பிற்கு எதிராக ஹக்கீம் சுமத்தியுள்ள குற்றச்சாட்டுக்கள் முற்றுமுழுதாகவே அடிப்படையற்றவை என தெரிவித்துள்ளது.

# நீண்ட கால சமாதானத்திற்கு பொறுப்புக் கூறல் அவசியம்

## பிரிட்டன் தெரிவிப்பு

ஐ.நா. மனித உரிமை பேரவையில் இலங்கைக்கெதிரான பிரேரணைக்கு ஆதரவு கோரியுள்ள பிரித்தானிய வெளிவிவகார செயலாளர் வில்லியம் ஹெக், உண்மையை எதிர்பார்க்கும் மக்களுக்கு அதனை வழங்குவதற்கு நம்பகத் தன்மை வாய்ந்த நடவடிக்கைக்கு ஆதரவளிக்கும் வெளிப்படையான அரசியலை இலங்கை அரசாங்கம் கொண்டிருக்கவில்லை என குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை தொடர்பில் சர்வதேச சுயாதீன பொறிமுறையொன்றை கோரும் பிரேரணைக்கு ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் உறுப்பினர்கள் ஆதரவளிப்பதற்கான காரணங்கள் நான்கையும், ஹெக் தனது ஆக்கத்தில் சுட்டிக்காட்டியுள்ளதாக இந்து செய்தி வெளியிட்டுள்ளது.

பொறுப்புக்கூறல் இன்றி நீண்டகால சமாதானத்தை எட்டுவது இலங்கைக்கு மிகவும் கடினமானதொரு விடயம் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

பல்வேறு நாடுகளும் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கான சரியான பாதையில் பயணிப்பதற்கு உண்மை மற்றும் நீதியை நிலைநாட்டுவது முக்கியத்துவம் வாய்ந்தது என வில்லியம் ஹெக் தெரிவித்துள்ளார்.

இரண்டாவதாக, சுயாதீனமான, நியாயமான உள்ளக விசாரணைகளை மேற்கொள்ளுமாறு இதற்கு முன்னர் நிறைவேற்றப்பட்ட இரண்டு பிரேரணைகள் தொடர்பிலும் நடவடிக்கை எடுப்பதற்கும், மனித உரிமைகளுக்கான ஆணையாளரினால் முன்வைக்கப்பட்ட உதவிகளை பெற்றுக்கொள்வதற்கும் இலங்கை அரசாங்கம் தவறியுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையினால் 2010 ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்ட கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும நல்லிணக்க ஆணைக்குழு இந்த விடயங்கள் குறித்து கவனம் செலுத்தவில்லை எனவும் பிரித்தானிய வெளிவிவகார செயலர் கூறியுள்ளார்.

பரிந்துரைகளை அமுல்படுத்தி, இலங்கை நம்பகத் தன்மை வாய்ந்த முன்னேற்றத்தினை அடைந்திருந்தால், தற்போதுள்ள நிலைமை ஏற்பட்டிருக்காது எனவும் சர்வதேச நடவடிக்கைக்குப் பதிலாக, கடந்தகால வன்முறைகளுக்கு எதிரான இலங்கை அரசாங்கத்தின் நடவடிக்கைகளுக்கு பாராட்டுகளைத் தெரிவித்திருப்போம் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

மூன்றாவதாக, ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை சர்வதேச பொறிமுறையொன்றை ஸ்தாபிப்பதற்கு, சர்வதேச சமூகத்திடம் நடவடிக்கை எடுக்குமாறு கோருவதற்கும், சமாதான ஆர்வலரான பேராயர் டெஸ்மன்டுட்டு உள்ளிட்ட பல்வேறு சுயாதீனமானவர்களுக்கு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உள்ளிட்ட இலங்கையின் முக்கிய தமிழ் கட்சிகளின் ஆதரவு காணப்படுவதாக வில்லியம் ஹெக் சுட்டிக்காட்டியுள்ளார்.

யுத்தகாலத்தில் இடம்பெற்றதாகக் கூறப்படும் குற்றங்கள் வன்முறைகளுக்கு தண்டனைகள் வழங்கப்படுதல் இலங்கையின் சட்டவாட்சியை வலுப்படுத்தும் என நம்புவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அனைவருக்கும் பாதுகாப்பு உரிமை காணப்படுவதுடன், எவரும் சட்டத்திற்கு மேலாக செல்வதற்கு இடமளிக்கப்பட கூடாதென்ற செய்தியை சர்வதேச சமூகம் தெரிவிக்க வேண்டுமெனவும் பிரித்தானிய வெளிவிவகார செயலாளர் குறிப்பிட்டுள்ளார்.

# யாழ். மடத்தடிப் பகுதியில் பேருந்து மீது கல் வீச்சு

யாழ்ப்பாணத்திலிருந்து அக்கரைப்பற்றுக்கு பயணித்துக் கொண்டிருந்த போக்குவரத்து சபைக்கு சொந்தமான பேருந்து மீது கல்வீச்சு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

ஏ-9 வீதியில் மடத்தடிப் பகுதியில் நேற்று முற்பகல் இந்த தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்தது.

தாக்குதலின் போது எவருக்கும் காயம் ஏற்படவில்லை எனவும் பேருந்தின் கண்ணாடி சேதமடைந்துள்ளதாகவும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

குறித்த பேருந்து, பேருந்து நிலையத்தில் தரித்து நின்றிருந்தவேளை அங்கு வந்த சிலர் பேருந்தில் துண்டுப் பிரசுரம் ஒட்டுவதற்கு முயன்றுள்ளனர். ஏனினும் அதனை சாரதியும், நடத்துனரும் அதற்கான அனுமதியினை மறுத்திருந்தனர்.

இதனைத் தொடர்ந்தே மேற்படி பேருந்து மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

சம்பவம் தொடர்பில் எவரும் கைது செய்யப்படவில்லை.

இந்த தாக்குதல் சம்பவம் தொடர்பில் யாழ்.பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

# நாய் குறுக்கே சென்றதால் விபத்துக்குள்ளானது மோ.சைக்கிள்

## நடந்து சென்ற பெண் உட்பட மூவர் காயம்

(வவுனியா)

வவுனியா வேப்பங்குளம் பகுதியில் நாய் குறுக்கே பாய்ந்ததனால் மோட்டார் சைக்கிளில் சென்ற இளைஞன் விபத்துக்குள்ளாகியதாக வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

அதிவேகத்தில் மோட்டார் சைக்கிளில் சென்ற வேளை நாய் திடீரெனக் குறுக்கே பாய்ந்ததின் காரணமாக இவ் விபத்து ஏற்பட்டது நடந்து சென்று கொண்டிருந்த பெண்மீதும் மோட்டார் சைக்கிள் மோதியதில் குறித்த பெண்ணும், மோட்டார் சைக்கிளில் வந்த இரண்டு இளைஞர்களும் காயமடைந்து வவுனியா பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்

வவுனியாவைச் சேர்ந்த மரியதாஸ் ரமேஸ் (வயது-30) மகேந்திரராசா சுஜித் (வயது-22) மற்றும் வேப்பங்குளத்தை சேர்ந்த 35 வயதுடைய பெண்ணும் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (70)

# இரண்டு இளைஞர்களைத் தேடி கிளிநொச்சியில் துண்டுப்பிரசுரம்




கிளிநொச்சி நகர் பகுதிகள் எங்கும் இரண்டு இளைஞர்களைப் பற்றிய தகவல்களை வழங்குபவர்களுக்கு ஐந்து இலட்சம் ரூபா பணம் வழங்கப்படும் என அறிவித்து இரு இளைஞர்களின் புகைப் படத்துடன் கூடிய துண்டுப் பிரசுரங்கள் ஒட்டப்பட்டுள்ளன.

அத்துண்டுப் பிரசுரங்களில் தேவைப்படுவோர் எனத் தலைப்பிடப்பட்டு கோபி - கசியன், நவநீதன் - அப்பன் என இரண்டு இளைஞர்களின் பெயர் குறிப்பிடப்பட்டு அவர்களின் புகைப்படத்துடன், இவர்கள் அதிகளவான குற்றங்களில் ஈடுபட்டுள்ளவர்கள் என்றும் இவர்கள் பற்றிய தவவல்களை 0113135680 , 0766911617 என்ற தொலைபேசி இலக்கங்களுக்கு வழங்குமாறும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன், இவர்கள் பற்றிய தகவல்களைத் தருபவர்கள் பற்றிய இரகசியம் பேணப்படும் எனவும் அத்துண்டுப் பிரசுரங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆனால் இத்துண்டுப் பிரசுரங்களை யார் எங்கிருந்து வெளியிட்டு ஒட்டினார்கள் என்பது பற்றிய விவரங்கள் எதுவுமே குறிப்பிடப்படவில்லை.

# குடும்பஸ்தர் சடலமாக மீட்பு

மட்டுவில் வடக்கு அரசடிப் பகுதியில் குடும்பஸ்தர் ஒருவர் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டிருக்கிறார்.

நேற்று பிற்பகல் இவர் சடலமாக மரம் ஒன்றில் தொங்கிக் கொண்டிருப்பது அவதானிக்கப்பட்டது. உடனடியாகப் பொலிஸாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது.

இதேயிடத்தைச் சேர்ந்த வல்லி செல்வராசா (இராசன்) (வயது-45) என்ற குடும்பஸ்தரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டிருக்கிறார். (இ)

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2014 மார்ச் 18 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.